# ாரத மணி

ாரண வருஷம்
மாசி மீ

விசு அணு 4

FEBRUAR
1945



கும்பகோணம் கும்பேஸ்வரர் கோயில்

THE BHARATA MANI MADRAS


அவன் ஊக்கங் குறை
யாமல் இருக்கச் செய்வது
உங்கள் வேலை!
The DALDA COOK BOOK
Price Re.1/-
DALDA VANASPATI
ஒவ்வொரு ஸ்திரீயும் எந்தெந்த பதார்த்தங்கள் ஊக்க மளிக்கக் கூடியவை என்பதை அறிந்திருக்க வேண்டும். டால்டா "குக்-புக்" (ஆங்கிலத்தில் மட்டும் எழுதியுள்ளது) உணவுப் பொருள்களின் தராதரத்தைப் பற்றியும், 150 இந்திய ஆகாரத் திட்டங்களைப் பற்றியும் விவரித்திருக்கிறது. உங்களிடம் ஒரு பிரதி இருக்கவேண்டியதவசியம். Dept B109 P.O. Box No. 353, Bombay என்ற விலாசத்திற்கு 4 அணா ஸ்டாம்பு அனுப்புங்கள்.
தாய்மார்களே: உங்கள் குடும்பத்திற்கு ஒவ்வொரு தடவை சமையல் செய்யும்பொழுதும் உங்களால் எவ்வளவு செய்யலாமென்பதை உணர்கிறீர்களா? உங்கள் சமையல் திட்டங்களிலும், அவைகளைத் தயாரிக்கும் முறையிலுமே உங்கள் குழந்தைகள் ஆரோக்கியமான ஊக்கத்தைப் பெறுவதோ, அல்லது ஒன்றுக்கும் உபயோகமில்லாமல் ஊக்கமற்றவர்களாக ஆவதோ இருக்கிறது. இது சமைப்பதை மேலும் உற்சாகமுள்ளதாகவும், முக்கியமானதாகவும் செய்கிறதில்லையா? உணவுகள் ஊக்கமளிக்கும் தரத்தில் வேற்றுமையுள்ளவை. அதிக ஊக்கமளிப்பவை சில. வெறும் ருசியும், திருப்தியுமளிக்கக் கூடியவை சில. அமித உணவு உண்டும் அநேகர் ஊக்கமற்றுக் காணப்படுவது இதனால்தான். ஆனால் எல்லா உணவுகளையும் அதிக ஊக்கமுள்ளதாகச் செய்துவிடலாம். அவைகளை வைடமின் நிரம்பிய டால்டாவைக் கொண்டு தயார் செய்வது இதற்கு உதவியாகயிருக்கும். டால்டா இயற்கையின் முக்கியமான ''உணவு சத்துக்களை'' அளிக்கிறது—இந்த சத்துக்கள் நாம் சாதாரணமாக சாப்பிடும் உணவுகளில் மிகக் குறைவு.
டால்டா உணவுகளை மேலும் ஊக்கமுள்ளதாக்குகிற தென்பதை நிருபித்துள்ளோம்
வைடமின் நிறைந்த டால்டா ஊக்கமளிக்கிறது.
HVM. 33-23-40 TM
THE HINDUSTAN VANASPATI MANUFACTURING CO., LTD.





மாத வெளியீடு

ஆசிரியர் : காரியாலயம் :

கா. சி. வேங்கடரமணி 34, அலமேலுமங்காபுரம், மயிலாப்பூர், சென்னை

வருட சந்தா ரூபா 3 தனிப் பிரதி அணா 4

| மாலை 13 | FEBRUARY 1945 : தாரண௵ மாசிமீ | முத்து 2 |
|---|---|---|


## பொருளடக்கம்


| | விஷயம் | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | ஆராய்ச்சி மனப்பண்பு வாய்ந்த ஆதீனகர்த்தர்—வே.ரா.சுந்தரராமன்,எம். ஏ. | | 57 |
| 2. | தமிழ்ப் புலவன்—அ. சம்பந்தமூர்த்தி | ... | 63 |
| 3. | ‘ ஜன்னல் விவாகம் ’—பி. ஆர். ராஜரத்னம் | ... | 64 |
| 4. | இந்திய சாரணரியக்கம்—ஆர். ஸ்ரீநிவாஸ அய்யங்கார் - பீளமேடு | ... | 69 |
| 5. | ஜிஜாபாய்—திவான்பகதூர் கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரிகள் | ... | 73 |
| 6. | ஸம்ஸ்கிருத கீர்த்தனை—ய. மஹாலிங்க சாஸ்திரிகள், எம். ஏ., பி. எல். | ... | 79 |
| 7. | ஒன்று நூறாக்ப் பண்ணு—ஏ. டி. கிருஷ்ணமாச்சாரி, பி.ஏ., பி. எல். | ... | 82 |
| 8. | அபராதம்—டி. வி. சுவாமிநாதன் | ... | 86 |
| 9. | பிச்சைக்காரன்—புத்தனேரி, ரா. சுப்பிரமணியன் | ... | 88 |
| 10. | புது வாழ்வு - பொருளும் பயனும்—பி. ஸ்ரீ. | ... | 89 |
| 11. | மூவர் அழல்—த்ருஷ்டகர்மா | ... | 93 |
| 12. | ஸ்ரீ சியாமா சாஸ்திரிகள்—நா. ரகுநாதன் | ... | 96 |
| 13. | ஊருடன் பகைக்கின்—வே. நாராயணன் | ... | 105 |
| 14. | மகாமகம்—கௌண்டின்யன் | ... | 108 |
| 15. | நெல்லும் கரும்பும் - சிறுவர் பகுதி—சூடாமணி | ... | 118 |


“ பாரத மணி”யில் வெளியாகும் கட்டுரைகள், கதைகளில் வெளிவரும் பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; ஒருவரையும் குறிப்பிடுவனவல்ல.

# இந்தியன் பாங்க் லிமிடெட்

தலைமை ஆபீஸ் : "இந்தியன் பாங்க் பில்டிங்ஸ்"

வடக்கு பீச் ரோடு. : : சென்னை

உள்ளூர் ஆபீஸ்கள் :

எஸ்பிளனேட் | மவுண்ட் ரோட் | திருவல்லிக்கேணி

மயிலாப்பூர் | தியாகராய நகர் | புரசவாக்கம்

*

சென்னை ராஜதானியிலுள்ள எல்லா முக்கிய இடங்களிலும் பம்பாயிலும் பிராஞ்சுகள் உள்ளன.

| | | |
|---|---|---|
| வெளியிடப்பட்டு வாக்களிக்கப்பட்ட மூலதனம் | ரூ. | 60,00,000 |
| செலுத்தப்பட்ட மூலதனம் | ரூ. | 33,48,561 |
| ரிஸர்வ் நிதி | ரூ. | 32,00,000 |
| டிபாஸிட்டுகள் | ரூ. | 10 கோடிக்குமேல் |

எல்லாவிதமான பாங்க் அலுவல்களும் கவனிக்கப்படும்.

[விவரங்களுக்கு பாங்கியின் எந்த ஆபீஸிற்காவது எழுதவும்.]

N. கோபால அய்யர்,
காரியதரிசி.

N.P.B./101

எல்லாவித

## சைக்கிள்கள், சாமான்கள்



டயர்கள்,

டியூபுகள்

எல்லாவற்றிற்கும்

எங்களிடம்

நியாயமான

விலைகள்.

*

## "ஆடும்" குதிரைகள்

குழந்தைகள் வீட்டிற்குள்ளேயே விளையாடுவதற்கு

'ஆடும்' மரக் குதிரைகள்

பலவிதக் கலர்களில் சரஸமான விலைக்குக் கிடைக்கும்.

வேண்டுபவர்கள் நேரிலோ தபால் மூலமோ
பெற்றுக்கொள்ளலாம்.

## இங்கிலீஷ் சைக்கிள் & மோட்டார் இம்போர்ட்டிங் கம்பெனி லிமிடெட்,

2/9, பிராட்வே, மதராஸ்.

போன்: 3168.    தந்தி விலாசம்: "Cycles"

# S. S. S.

## சிறு சேமிப்பு திட்டம்

இந்தியா பூராவும் நூறு பாஷைகளில்
சொல்லுகின்றனர்—கேளுங்கள் !

தேனீ, புஷ்பங்களி லிருந்து தேனை எடுப்பதுபோல் உங்கள் பணத்தை ஸர்டிபிகேட்டாக மாற்றுங்கள். அது நாளடைவில் பெருகி வரும்.

### நாஷனல் ஸேவிங்ஸ் ஸர்டிபிகேட்டுகள்

புத்திசாலிகளுடைய
புதையல்.

**12 வருஷங்களில்**

| | | | |
|---|---|---|---|
| ரூ. | 5 | ,, | 7-8 |
| ,, | 10 | ,, | 15 |
| ,, | 50 | ,, | 75 |
| ,, | 100 | ,, | 150 |
| ,, | 1000 | ,, | 1500 |
| ,, | 5000 | ,, | 7500 |

ஆகவும் பெருகும்.

கிடைக்கும் இடம் :

அதிகாரம் பெற்ற ஏஜண்டுகள், தபால் ஆபீஸ்கள்,
ஸேவிங்ஸ் பீரோக்கள்

A. A. & S. N. S. 9.



# ஆராய்ச்சி மனப்பண்பு வாய்ந்த ஆதீனகர்த்தர்

## காமகோடி பீடாதிபர்

[வே. ரா. சுந்தரராமன், எம்.ஏ.]

சுமார் பத்து வருஷங்களுக்குமுன் நடந்த சம்பவம். இப்பொழுது நடப்பது போல் தோன்றுகிறது என் மனக்கண் முன். 1935-ம் வருஷத்தில் நம் நாட்டிலிருந்துவந்து வட இந்தியாவில் பிரயாணம் செய்துகொண்டிருந்த கும்பகோணத்துக் காஞ்சி காமகோடி மடம் கல்கத்தாவின் தென்பகுதியில் காளிகட்டம் என்னும் பேட்டையில் உள்ள மைசூர் மகாராஜா சத்திரத்தில் முகாம்போட்டுக் கொண்டிருந்தது. வழக்கம்போல் மடத்தின் மூர்த்தியான சந்திரமௌளீசுவர சுவாமிக்கும் பூஜையிலுள்ள ஸ்ரீசக்கரத்திற்கும் அந்திவேளைப் பூஜை நடந்து கொண்டிருந்த சமயம். மடத்தின் மரபின்படி பீடாதிபரே பூஜையை நடத்திக் கொண்டிருந்தார். அன்று மாலை மடத்தில் அதிகக் கூட்டம் இல்லை. அங்கிருந்த ஐந்து, ஆறு பேர்களுள் நானும் ஒருவன். அதில் ஒருவர் பூஜை நடந்துகொண்டிருக்கையிலேயே தம்பூரு ஸ்ருதியுடன் அம்பாளுக்கு அர்ப்பணமாகத் தன் மதுர கானத்தை இசைத்துக்கொண்டிருந்தார். பூஜை முடிந்து பிரசாதம் கொடுக்கப் பட்ட பின்பு, பீடாதிபர் மாடியில் ஒரு அறைக்குச் சென்று அங்கு வந்து தன்னைக் காணும்படி எங்களுக்குச் செய்தியனுப்பினார். நாங்கள் அவ்வறைக்குச் சென்றோம். சுவாமிகளின் சமூகத்தையடைந்ததும் சம்பிரதாயத்தை யொட்டி ஒவ்வொருவராக அவர் போதும் என்று சொல்லும் வரையில் "ஓம் நமோ நாராயணாய" என்ற மூலமந்திரத்தை உச்சரித்தவண்ணம் சாஷ்டாங்கமாய் நமஸ்காரம் செய்தோம். பூஜையின்போது பாடியவரும் அங்ஙனமே செய்தார். அவர் ஒரு வைஷ்ணவ பிராமணர். ஸர்க்கார் ஸேவையில் ஒரு பொறுப்புள்ள 'ஆபீஸர்' பதவி வகித்துவந்தவர். பொழுது போக்காகவும் ஆத்மார்த்தமாகவும் சங்கீதத்தைப் பயின்றார். சென்னை சங்கீத வித்வச்சபையிலும் ஒரு சமயம் நிர்வாகப்பதவி யொன்றை வகித்திருந்தார். நமஸ்காரம் செய்து வணங்கியது முடிந்தவுடன் சுவாமிகளின் ஆக்ஞையின்பேரில் எல்லோரும் அவரெதிரில் ஒரு வரிசையாய் அமர்ந்தோம். பாடிய நண்பருக்கும் சுவாமிகளுக்கும் இடையே அடியிற்கண்ட சம்பாஷணை நடந்தது.

சுவாமிகள்: சங்கீதம் நன்றாய்ப் பழகியிருக்கிறீர்கள். நடுவில் 'ஜானகி ரமண' என்று ஒரு கிருதி பாடினீர்களே, அது இதுதானே? (இதைச்சொல்லி சுவாமிகள் இந்தச் சாகித்யத்தை முதலடியாகக் கொண்டு 'ஸுத்த ஸீமந்தினி' ராகத்தில் தியாகய்யர்வாள் அருளியிருக்கும் உருப்படியை லேசாகப் பாடிக் காட்டினார்).

பாடியவர்: இல்லை. அது அய்யர்வாள் கிருதி. நான் பாடியது எங்களூர் அம்மனாகிய ஸ்ரீ வரமங்கைத் தாயார் பேரில் எங்கள் மூதாதையர் ஒருவர் பாடியது. அது 'ஸுத்த ஸீமந்தினி' ராகம், இது 'தோடி'.

சு: உங்களூர் நாங்குநேரியா? அங்கு அகோபில மடக்கிளை ஏதாவது உண்டோ?

சுவாமிகளின் இந்தக் கேள்வி எங்களுக்கெல்லாம் ஆச்சரியத்தை யளித்தது. அவர்கள் இருவரும் பேசிய சங்கீத விஷயத்திற்கும் இதற்கும் உள்ள சம்பந்

தம் என்ன என்பது பாடியவர் உட்பட எங்களில் ஒருவருக்கும் விளங்கவில்லை.

பா: ஆமாம், ஒன்றிருக்கிறது. இக் கிருதியைப் பாடிய பெரியார் அம்மடத் துடன் தொடர்பு வாய்ந்திருந்தவர்தான்.

சு: (ஒரு புன்முறுவலுடன் எங்கள் எல்லோரையும் பார்த்து), அப்படி யிருக் குமோ என்றுதான் நானும் சந்தேகித் தேன். ஏனென்றால் நாங்குநேரி என் பது தென்கலை வைஷ்ணவர்கள் உள்ள ஊர். அவர்களுக்குள் பிரசித்திபெற்ற வானமாமலை மடம் என்பது அங்குதான் இருக்கிறது. இவர் என்னை நமஸ்காரம் செய்கையில் ஒன்றுக்கு மேற்பட்டதாகச் செய்தார். வைஷ்ணவர்களுக்குள் தென் கலையாருக்கும் வடகலையாருக்கும் உள்ள அபிப்பிராய பேதங்களுக்குள் இந்த நமஸ்கார விஷயமும் ஒன்று. தென்கலை யார் ஒரே நமஸ்காரந்தான் செய்வார்கள். அதற்கு மேல் செய்யக்கூடாது என்பது அவர்கள் கொள்கை. வடகலையாரோ ஒன்றுடன் நிற்கக்கூடாதென்று நம்புகிற வர்கள். இவர் நாங்குநேரி வாசியாகை யால் - ஒருகால் தென்கலைப் பிரிவினரா யிருப்பின் - ஊரைவிட்டு வெளியே வந்த தின் பயனாய் சம்பிரதாயத்தை மறந்து ஒன்றுக்கு மேற்பட்ட நமஸ்காரம் செய் கிறாரோ என்று சந்தேகித்தேன். இந்த நமஸ்காரப் பிரச்னைக்கு இரு பிரிவினரும் ஒன்றையே ஆதாரமாய்க் காட்டுகிறார் கள். ராமாயணத்தில் ஸ்ரீ விபீஷணாழ் வான் ஸ்ரீ ராமரை சரணாகதி யடையும் பொழுது, ஒரே நமஸ்காரம் செய்து விழுந்தவன் மீண்டும் எழுந்திருக்க வில்லையென்று சொல்லப்பட்டிருக்கிறது. அவரே ஒற்றை நமஸ்காரம் செய்த தால் நாமும் அப்படியே அதற்கு மேற் பட்டு நமஸ்கரிக்கக் கூடாதென்று தென் கலையார் கருதுகின்றனர். ஒரு நமஸ் காரத்திற்கே அவருக்கு மோக்ஷ சாம் ராஜ்யம் கிட்டியதால் அற்ப அறிவுள்ள நாம் அத்துடன் நின்றுவிடக் கூடா தென்பது வடகலையாரின் கக்ஷி.

மேற்கூறிய சம்பவத்திலிருந்து நாங் கள் சுவாமிகளின் பரந்த அறிவையும், கூர்ந்து உற்று நோக்கும் தன்மையையும் கண்டு வியந்தோம்!

அந்தச் சமயம் சுவாமிகளுடன் சில மாதங்கள் நெருங்கிப் பழகும் பாக்கியம் எனக்குக் கிடைத்தபடியால் இத்தகைய சம்பவங்கள் பலவற்றை நான் காண நேர்ந்தது. ஒவ்வொன்றிலிருந்தும் இவ ருடைய கூர்ந்த அறிவு நன்கு வெளிப் பட்டது. இவர் இப்பீடத்திற்கு அதிபதி யாகாமலிருந்தால் நம் நாட்டின் தலை சிறந்த ஒரு ஆராய்ச்சியாளர் ஆகியிருப் பார் என்பது நிச்சயம் என்பது இச்சம்ப வங்களால் நன்கு வெளியாயிற்று.

இக்காமகோடி பீடத்தில் இவர் 66-வது பீடாதிபதியாக விளங்குபவர். பட்டத்தில் இவருடைய முழுப்பெயர், "ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்ய ஸ்ரீ சந்திரசேகரேந்திர ஸரஸ்வதி ஜகத் குரு ஸ்ரீ சங்கராசார்ய சுவாமிகள்" என்பது. இதில் "பரமஹம்ஸ பரிவ் ராஜகர்" என்பது பிரம்மசர்யத்தி லிருந்து கிருஹஸ்தாசிரமம் வகிக்காமல் நேரே சந்நியாசியாசிரமம் அடைந்த தைக் குறிக்கிறது. "இந்திர ஸரஸ் வதி" என்பது இந்தப் பீடத்தின் ஆசா யாளுக்கு ஏற்பட்ட சந்நியாசி ஆசிரமப் பட்டம். ஏனைய சங்கரமடத்துப் பட் டப் பெயர்களாகிய 'ஆச்ரமி' (துவாரகா மடம்), 'பாரதி' (சிருங்கேரி மடம்), 'பூர்ணகிரி' (பதரிகாசிரம மடம்), 'ஆரண்ய' (பூரி அல்லது ஜகந்நாத, மடம்) என்பவைகளை ஒத்தது.

பூர்வாசிரமத்தில் - அதாவது பட்டத் திற்கு வந்து சந்நியாசம் வாங்கிக் கொள்ளுவதற்கு முன் - இவருக்கு விசுவநாதன் என்று பெயர். (இவ்வாறு இவர் பெயரை ஒருமையில் குறிக்க என் உடல் நடுங்குகிறது). இவருடைய சொந்த ஊர் கும்பகோணம். எனினும் பால்யத்தில் பெரும்பாலும் இவர் தென் னாற்காடு ஜில்லாவில் திண்டிவனம், விழுப்புரம், சிதம்பரம் முதலிய ஊர் களில் இருந்து கல்வி கற்று வந்தார். 1908-ம் வருஷத்தில் தன் 13-ம் வயதில் இவர் இப்பட்டத்திற்குத் தேர்ந்தெடுக் கப்பட்டார். இவர் இப்பட்டத்திற்கு

வந்தது காஞ்சிபுரத்திற்கு 24 மைல் களுக்கப்பால் உள்ள ஒரு சிறு கிராமத்தில்.

இவர் கன்னட பிராமணப் பிரிவைச் சேர்ந்தவர். தென்னாட்டில் அத்வைத மதத்திற்கு ஒரு தூண்போல் இருந்தவரும் பிரபல அறிஞருமான கோவிந்த தீக்ஷதர் என்னும் பெரியாரின் வம்சத்தில் தோன்றியவர் இவர். தஞ்சாவூரில் நாயக்கர்கள் என்று ஒரு வம்சத்தார் சிறிது காலம் ஆண்டுவந்தனர். மதுரையை ஆண்ட நாயக்கர்களும் இவர்களும் வெவ்வேறு வம்சத்தினர் என்பதைக் குறிக்க இவர்களைத் தஞ்சாவூர் நாயக்க அரசர்கள் என்று சொல்லுவதுண்டு. இந்த வம்சத்தைத் தோற்றுவித்த முதல் அரசர் செல்லய்ய நாயக்கர் என்பவர். இவர் பெயர்போன விஜயநகர மன்னரான கிருஷ்ணதேவராயர் என்னும் அரசனின் பெண்ணை மணந்தார். அவ்வரசர் அப்பெண்ணுடன் இந்த கோவிந்ததீக்ஷதர் என்னும் அறிவாளியை ஸ்திரீதனமாக அனுப்பி வைத்தார். தஞ்சாவூரையடைந்ததும் அம்மன்னனுக்கு இவர் அமைச்சராக அமைக்கப்பட்டார். இவருக்கு அதிக செல்வாக்கு இருந்தது. அந்தக் காலத்தில் முத்திரையிடப்பட்ட நாணயங்களில் அரசனின் பிம்பமும் இவருடைய பிம்பமும் ஒன்று சேர்ந்து காணப்படுகின்றன. இவரிடம் அரசன் எவ்வளவு மதிப்பும் மரியாதையும் வைத்திருந்தான் என்பதற்கு இதுவே ஒரு பெரிய அடையாளம். நாட்டில் இவரை எல்லோரும் ‘அய்யன்’ என்றே அழைத்தனர். திருவண்ணாமலையிலுள்ள ‘அய்யன் குளம்’, ‘அய்யன் குளத்தெருவு’ என்பன இவர் பெயரை ஒட்டியவையே. அக்குளம் இவர் வெட்டியதாகச் சொல்லப்படுகிறது. கும்பகோணத்திற்கு அருகிலுள்ள பட்டீசுரம் என்னும் ஊரில் இருக்கும் சிவன் கோயிலில் இவருடைய உருவச்சிலை யொன்று கல்லில் வெட்டப்பட்டிருக்கிறது. இவ்வளவு புகழுடன் வாழ்ந்தவரின் சந்ததியில் தோன்றியவர்தான் தற்போதிய காமகோடிபீடாதிபர்.

கர்நாடக சங்கீதத்தின் மும்மூர்த்திகள் என்று கருதப்படும் மூன்று சாகித்ய கர்த்தர்களில் ஒருவரான முத்துஸ்வாமி தீக்ஷதரும் இந்த கோவிந்ததீக்ஷதரின் வழி வந்தவரே. அவர் தமையனார்தான் ‘ஹம்சத்வனி’ என்னும் ராகத்தை உண்டுபண்ணி அதில் வழங்கிவரும் பிரசித்தி பெற்ற ‘வாதாபி கணபதிம்’ என்னும் கிருதியை இயற்றிய ராமசுவாமி தீக்ஷதர் என்பவர். கர்நாடக சங்கீதத்தைச் சீர்திருத்தி அமைத்து, தற்காலத்தில் தென்னிந்திய சங்கீத வித்துவான்களால் கையாளப்படும் 72 மேளகர்த்தாக்கள் கொண்ட பிரகாரணத்தை உண்டாக்கி ஒழுங்குபடுத்திய ‘வேங்கடமகி’ யென்னும் வேங்கடேச தீக்ஷதரும் இப்பெரியார் வழிவந்தவரே. எனவே நம் ஆசார்ய சுவாமிகளுக்கும் இசையில் தேர்ச்சி யிருப்பதில் ஓர் ஆச்சரியமும் இல்லை.

வெகு இளம் வயதில் பட்டத்திற்கு வந்த இவர் ஸ்தானத்தில் ஏறியதும் ஏறுததுமாய் மிகவும் சிரம சாத்தியமான காரியம் ஒன்றை நிறைவேற்றிவைக்கும்படி நேர்ந்தது. அது திரிச்சிராப்பள்ளிக்கு அடுத்த ஜம்புகேசுவரம் என்னும் ஊரிலுள்ள கோயிலில் இருக்கும் அகிலாண்டேசுவரியம்மனின் சிலையின் தாடங்க ஜீர்ணோத்தாரணம் செய்தல் என்னும் சடங்குதான். இக்காரியத்தை வெகு சாமர்த்தியத்துடன் முடித்துக் கொண்டு சுவாமிகள் ராமநாதபுரம் ஜில்லாவில் உள்ளதன் பரமேஷ்டிகுருவின் சமாதியைத் தரிசிக்கப் போனார். வழியில் புதுக்கோட்டை சமஸ்தானத்தாரால் மரியாதைகளுடன் வரவேற்கப்பட்டார்.

மூன்று வருஷங்கட்கப்புறம் 1912-ம் வருஷத்தில் லால்குடியில் புதிதாய் நிர்மாணிக்கப்பட்ட ஆதிசங்கரரின் கோயிலைப் பிரதிஷ்டை செய்த பின்பு அகண்ட காவேரியின் கரையிலுள்ள சந்நியாசி மடம் என்னும் இடத்தில் வேத சாஸ்திரங்களைப் பயிலுவதற்காகத் தங்கினர். மூன்று வருஷங்களுக்குப் பின் 1915ல் மடத்தின் தற்கால இருப்பிடமாகிய

கும்பகோணத்திற்கு வந்து பீடத்தின் காரியங்களை ஏற்றுக்கொண்டார். ஸநாதன தர்மத்தைப் பிரசாரம் செய்வதை முக்கிய கொள்கையாகக் கொண்ட "ஆர்ய தர்மம்" என்னும் தமிழ்ப் பத்திரிகை அப்பொழுது தான் ஜனித்தது. 1919ம் வருஷத்தில் இவர் கிளம்பிய வடதேச யாத்திரை முற்றுப்பெற ஏறக்குறைய 20 வருஷங்கள் ஆயின. இப் பிரயாணத்தில் தான் வடஇந்தியாவிலுள்ள காசி, பிரயாகை, கயா, ஜகந்நாதம் முதலிய முக்கியமான ஸ்தலங்களை இவர் தரிசித்தார்.

நம் தேசத்திலுள்ள தலைவர்கள் பலரின் நன்மதிப்பை இவர் பெற்றிருக்கிறார். அவ்வப்போது மகாத்மா காந்தியடிகள், காலஞ்சென்ற சித்த ரஞ்சனதாஸ், ஸர். தேஜ் பகதூர் ஸப்ரூ, சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார், பண்டித மதன் மோகன மாளவியா, ஸேத் ஜம்னலால் பஜாஜ், ஸர். புருஷோத்தமதாஸ் தாகூர் தாஸ், நைஜாம் சமஸ்தானத்தின் மாஜி பிரதம மந்திரி ஸர். கிருஷ்ணபிரஸாத் ஸிங் முதலியோர்கள் இவரை வந்து தரிசித்து இவருடன் அளவளாவி யிருக்கின்றனர்.

சென்னை நகரபரிபாலன சபையில் சுவாமிகளுக்கு வரவேற்பு அளிக்க வேண்டுமா இல்லையா என்பதை விவாதித்தபோது ஜஸ்டிஸ் கக்ஷியின் பிரமுகரான ஏ. ராமசுவாமி முதலியார் என்பவர் (தற்சமயம் 'ஸர்' பட்டம் பெற்று மத்திய அரசாங்க நிர்வாக சபையில் அங்கத்தினராயிருப்பவர்) வரவேற்பை அங்கீகரித்துப் பேசியது வகுப்புவாதத்திற்குப் புறம்பானவர் சுவாமிகள் என்பதைத் தெள்ளென விளக்கிற்று.

சென்னையில் 1933ம் வருஷத்திலும் அதற்குப் பின்பும் சுவாமிகள் தங்கியிருக்கையில் நகரிலுள்ள உயர்நீதிமன்றத்து நீதிபதிகள், கலாசாலைகளிலுள்ள போதகாசிரியர்கள், மாகாணத்தின் தலைமை நியாயவாதி (அதாவது 'அட்வகேட் ஜெனரல்') முதலியோர் உட்பட பல பிரமுகர்கள் இவரை வந்து தரிசித்து இவருடைய ஆசிர்வாதத்தைப் பெற்ற வண்ணம் இருந்தனர். அப்பொழுது அங்கங்கே இவர் நிகழ்த்திய சொற்பொழிவுகள் மூன்று புத்தகங்களாகத் தமிழில் வெளிவந்திருக்கின்றன. அவைகளுள் இரண்டின் மொழிபெயர்ப்பு ஆங்கிலத்திலும் புத்தக உருவில் வெளியாகியிருக்கிறது.

சுவாமிகளுடன் நெருங்கிப் பழகியவர்களுள் இவருடைய ஞாபகசக்தியைக் குறித்து வியப்படையாதவர் ஒருவரும் இலர். தம் சிஷ்ய கோடிகளின் பெயர், ஊர், குலம், கோத்திரம், மூதாதையர்கள் முதலிய சகலவிதமான விஷயங்களும் இவருக்கு மனப்பாடம். எங்கள் ஜில்லாவிலும் என்னுடைய உறவினர் பலருடனும் பூர்வாசிரமத்தில் நெருங்கிப் பழகிய இவரை நான் முதன் முதலில் கல்கத்தாவில் சந்தித்து ஒரு நண்பரால் அறிமுகப்படுத்தப்பட்ட போது இவர் அந்நண்பரை நோக்கி, 'நீ யாரை அறிமுகப்படுத்துகிறாய்? இவனை எனக்கு நன்றாய்த் தெரியும்' என்று சொல்லி என் உறவினரைப்பற்றி விஸ்தாரமாகச் சொல்ல வாரம்பித்ததும் அந்நண்பருக்கு ஆச்சரியமாகிவிட்டது. ஞாபக சக்தியில் காலஞ்சென்ற தமிழ் ஆசிரியரான உ. வே. சுவாமிநாதய்யருக்கு ஈடு இணை இல்லை யென்று நான் பலர் சொல்லக் கேட்டிருக்கிறேன். ஆனால் இவரைக் கண்டு பழகிய பின்பு அவர் ஞாபக சக்திக்கும் இவருடைய ஞாபக சக்திக்கும் ஏற்றத்தாழ்வு சொல்லுவது சிரமம் என்பதை யறிந்தேன்.

ஞாபக சக்தியை அடிப்படையாகக் கொண்ட விஷயங்களை அலசி ஆராய்ச்சி செய்யும் குணம் என்பது இவரிடம் அபரிமிதமாக உண்டு. ஏற்கெனவே குறித்தபடி, இம்மடாதிபதி பதவிக்கு இவர் வந்ததின் பயனாக நம் நாடு ஒரு தலை சிறந்த சரித்திர ஆராய்ச்சியாளரையோ விஞ்ஞான சாஸ்திர ஆராய்ச்சியாளரையோ இழந்துவிட்டது. இதற்குப் பல சாக்ஷிகள் கூறலாம். இவருடைய 'சங்கர விஜயத்'தில் ஆதிசங்கரர் பரமசிவனின் அவதாரமே என்ப

தற்கு வேதத்திலிருந்து ஆதாரமாக இவர்,

'நம: கபர்த்திநேச வ்யுப்த கேசாயச'

என்னும் ஸ்ரீ ருத்திர வாக்கியத்தைக் கொடுத்து அதை விளக்கியிருப்பது இதற்கு ஓர் உதாரணம். நம் தேச சரித்திரத்தில் அசோக மன்னன் தன்னைப் பற்றித் தன்னுடைய சிலாசாஸனங்களில் குறித்துக்கொண்ட 'தேவானும் பிரிய'ன் என்னும் பதத்திற்கு முறண்பாடுள்ள இருபொருள்களான 'தேவர்களுக்கும் பிரியமானவன்' 'மூடன்' என்பனவற்றைப் பொருத்திக் காட்டி விளக்கியிருப்பதும் இதற்கு ஒரு தகுந்த உதாரணம். இதைப்போலவே நம் புராணக் கதையில் சகரபுத்திரர்களின் அழிவு ஏற்பட்டதாகச் சொல்லப்பட்ட இடத்திற்கும் அமெரிக்கா கண்டத்திற்கும் சம்பந்தம் ஏற்படுத்தி, 'காலிபோர்னியா' என்பது 'கபிலர் அரண்யம்' என்பதன் சிதைவு என்னும் வியாக்கியானம் செய்திருப்பதும் அருமையான ஓராராய்ச்சியே.

வேதங்களின் பூதக்கண்ணாடிதான் புராணம் என்கிறார் இவர். 'ஸத்தியம் வத' என்று வேதம் சொல்லுவதைப் புராணம் ஹரிச்சந்திரன் கதையின் மூலம் ரஸமான முறையில் எடுத்துரைக்கிறது என்று இவர் விளக்கிக் காட்டுகிறார்.

'அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத்து உண்ணாமை நன்று'

என்னும் குறட்பாவுக்கு, யாகஞ் செய்தல் கெடுதல் என்று சொல்லியிருப்பதாகப் பொருட் சொல்லுதல் தவறு என்றும், 'துறவறவியல்' என்னும் பகுதியில் இச்செய்யுள் வருதலால், சந்நியாசிகளுக்கு யாகம் முதலிய கர்மாக்களைவிட ஜீவகாருண்யமே முக்கியமான தர்மம் என்று கொள்ளுவதுதான் சரியென்றும் இவர் கூறுவதும் இவருடைய ரஸிகத் தன்மையை எடுத்துக் காட்டுகிறது.

நவீன சாஸ்திர உண்மைகளைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்னும் ஆசையும் இவருக்கு உண்டு. ஒருமுறை என்னைத் தன்னை வந்து தனியாகச் சந்தித்து மேனாட்டுத் தாவர ஜங்கம சாஸ்திரத்தின் அடிப்படையான கொள்கை 'பரிணாமம்' (evolution – 'எவல்யூஷன்') என்பதைப் பற்றி விஸ்தாரமாய்ச் சொல்லச் சொல்லிக் கேட்டார். 'டாடா நகரம்' அல்லது 'ஜேம்ஷட்பூர்' என்னும் ஊரில் இவர் தங்கியிருக்கையில் அங்கு நிறுவப்பட்டுள்ள எஃகு உற்பத்திச் சாலையின் ஒவ்வொரு பாகத்தையும் நுணுக்கமாய் விசாரித்துத் தெரிந்து கொண்டார். இருந்தாலும் இந்த நவீன சாஸ்திரங்களின் உதவியால் நமக்குக் கிடைக்கும் அறிவுக்கு எல்லையுண்டு என்றும், பரதத்துவத்தைப் பற்றிய ஆத்ம அறிவுதான் எல்லையற்ற உண்மையான அறிவு என்றும் அடிக்கடி தன் உபதேசங்களில் எடுத்துச் சொல்லுவார்.

தமிழ் மொழியில் இவருக்குப் பரிச்சயமும் ஆசையும் உண்டு. நாயன்மார்களின் தேவாரத் திருப்பதிகங்களில் இவருக்கு அதிக ஈடுபாடு. "வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்" என்னும் பதிகத்திலுள்ள இந்து மதத்தின் பொதுக் கொள்கையை இவர் தன்னுடைய பிரசங்கங்களில் பாராட்டியிருக்கிறார். "நாவேறு பாமணத்த" என்னும் திருப்புகழில் வரும் "நீ வேறெனா திருப்ப நான் வேறெனா திருப்ப" என்னும் அடியில் கண்ட அத்துவைத உண்மையை இவர் பாராட்டுவார். இவருடைய பதப் பிரயோகங்கள் மிகவும் பொருத்தமுள்ளவைகளாக விருக்கும். இதை என்முன் ஒருமுறை எடுத்துரைத்து காலஞ் சென்ற உ. வே. சாமிநாதய்யர் அவர்கள் புகழ்ந்திருக்கின்றனர். சிவகங்கை மன்னருக்கு இவர் ஒரு முறை வழங்கின 'சாந்த மண்டலபதி' என்னும் பட்டத்திலுள்ள 'மண்டலம்' என்னும் பதத்தின் பொருத்தத்தைத்தான் அச்சமயம் அய்யரவர்கள் புகழ்ந்து கொண்டாடி ஆனந்தித்தார்.

வடமொழியில் வெகு நன்றாக இவர் பேசவல்லவர். அந்த பாஷை அதிகமாய்த் தெரியாத தமிழர்களுக்கும் ஒருவாறு விளங்குமாறு அவ்வளவு எளிய நடை

யில் இவருடைய பேச்சு அமைந்திருக்கும்.

நெருக்கடியான சந்தர்ப்பங்களில் வெகு தெளிவுடன் நடந்துகொள்ளுவதில் இவர் சமர்த்தர். காளி கட்டத்தில் இவர் முகாம் போட்டுக்கொண்டிருக்கையில் வங்க மாகாணத்தில் சிறப்புடன் கொண்டாடப்படும் துர்க்க பூஜை வந்தது. அச்சமயத்தில் காளி கோயிலில் அபரிமிதமாக ஆட்டுப் பலி கொடுப்பது வழக்கம். அதைத் தடுப்பதற்காக அந்த வருஷம் ஒருவர் வந்து உண்ணு விரதம் தொடங்கியிருந்தார். நெருக்கடி அதிகரித்துவிட்டபடியால் கோயில் அதிகாரிகள் ஒரு கூட்டம் கூட்டி அதில் இவருக்கு ஒரு வரவேற்புப் பத்திரம் வழங்கிப் 'பலியிடுதல்' நியாயமான காரியமே என்னும் அபிப்பிராயத்தை இவரிடமிருந்து வாங்கிவிட ஏற்பாடு செய்தனர். அவர்கள் நடத்திய உபசாரத்திற்குப் பதிலாக இவர் செய்த சொற்பொழிவில், இவர் "பலியிடுதல் சாஸ்திர சம்மதமுள்ளது தான். ஆனால் பிற ஜந்துக்களிடத்தில் ஜீவகாருண்யம் காட்டுவதையும் நம் மதம் போதிப்பதால், புலால் உண்ணலை நிறுத்தி விடுவதும் நம்முடைய கடமைகளில் ஒன்றாகும். அப்படி நாமே பிற ஜந்துக்களின் மாம்சத்தை உண்ணும் வழக்கத்தை நிறுத்தி விட்டால், தெய்வங்களுக்கு அவைகளைப் பலியிட்டு அர்ப்பணம் செய்வதும் தானாக நின்றுவிடும். ஆகையால் இப்பொழுது நடக்கும் உண்ணு விரதம் முதலிய மறியல்களைக் கசாப்புக் கடைகளின் எதிரில் போய்ச் செய்து அதை முதலில் நிறுத்துவதுதான் முறையான காரியம்" என்று சொல்லி இரு திறத்தாரையும் சாமர்த்தியமாய்த் திருப்தி செய்தார்.

'பகவத் பாதாள்' என்று ஆஸ்திகர் பக்தியுடன் குறிக்கும் ஆதி சங்கரர் தோற்றுவித்த மடங்கள் ஒவ்வொன்றிலும் இடையிடையே அவருடைய அம்சம் வாய்ந்தவர்கள் மடாதிபதிகளாய் வருவார்கள் என்பது ஒரு பொதுக் கொள்கை. இதற்கிணங்க இம்மடத்தின் பீடாதிபர்களுள் விசேஷச் சக்தி வாய்ந்த அத்தகைய அவதார புருஷர்களுக்குள் ஒருவர் இவர் என்பதில் சிறிதும் ஐயமில்லை.



# தமிழ்ப் புலவன்

[அ சம்பந்தமூர்த்தி]

1. தேன் கசியுந்தீந் தமிழை - அனு
   தினமும் ஆர்வமுடன் பயின்று
   நானி லம்புகழ நற்பெயரை - எந்த
   நாளும் அடைவான் தமிழ்ப் புலவன் !

2. வாழ்வில் பயன் தரும் உண்மைகளைப் - புவி
   மாந்தர்க் கெனவே எடுத் துரைப்பான்
   சூழ்ந்த அஞ்ஞான மெனும் இருளை - மதிச்
   சுடர்தனைச் சொரிந்துவி லக்குவான் !

3. கற்பனை ஒளிரும் கவிதை, கதை - மற்றும்
   கருத்தைவிழி ழுக்கும் இலக் கியங்கள்
   சொட்டும் அமுதம் தோய்ந்த பாடல் - பல
   தொகுத்து வெளியிடுவான் புலவன் !

4. அன்னை வாணி அருட்பெருக் கால் - பகுத்
   தறிவு நிறைந்த வனய்த் திகழ்வான்
   சென்ற விடம் எல்லாம் சீரும் - பெருஞ்
   சிறப்பும் பெறுவான் தமிழ்ப் புலவன் !

# ‘ஜன்னல் விவாகம்’

[பி. ஆர். ராஜரத்னம்]

## 1

திரிச்சிராப்பள்ளியில் ஆண்டார் தெருவின் ஒரு வீட்டு மாடி அறையைத் தான் சந்தர் வாடகைக்கு வைத்துக் கொண்டிருந்தான். அவன் ஒரு இண்டர் வகுப்பு மாணவன், நல்ல குணக்ஞன், அழகு வாய்ந்தவன். மற்றக் காலேஜ் வகுப்பு மாணவர்களைப் போலல்லாது சிகரட் வாசனை யற்றவன். இவன் ஒருவன்தான் காலேஜில் “குடுமிக் காரன்!” என்றால் பாருங்களேன். அதுவே அவனுக்கு பட்டப் பெயராகவும் ஆய்விட்டது.

அவ்வறை நாசூக்காகவும், சுத்தமாகவும் காணப்பட்டது. அழகாய் வரிசையாக அடுக்கப்பட்ட புத்தகங்களடங்கிய ஒரு அலமாரி, ஒரு கயிற்றுக் கட்டில், அதன் ஓரத்தில் சுருட்டி வைக்கப்பட்டதொரு படுக்கை, இரண்டு சுவர் சந்திக்கும் மூலையில் ஸ்டூலின் மேல் ஒரு டிரங்குப் பெட்டி, வாசற்படியின் எதிர்த்தாற்போல் ஒரு சிறு மேஜை; அதன்முன் ஒரு நாற்காலி, மேஜைமீது ஒரு விளக்கும் சில புத்தகமும் நோட்டுகளும்; மேஜையை அடுத்து ஒரு ஜன்னல், அதன் அருகில் ஈஸிசேர் ஒன்று; இவை அவ்வறையை சோபிதப்படுத்தின.

வழக்கம் போல் காலையில் எழுந்திருந்த சந்தர், அருகிலிருந்த வாடிக்கை ஹோட்டலுக்குச் சென்று நீராடி, காப்பியருந்தி தன் அறைக்கு வந்தான். ஏதாவது படிக்கலாமென்ற எண்ணத்தில் ஒரு புத்தகத்தைக் கையிலெடுத்து, நாற்காலியில் வந்தமர்ந்தான். இவன் அறை இருந்த அதே வரிசையில் இரண்டு வீட்டிற் கப்பால் அதேபோல் ஒரு மாடி. நடுவில் இருந்த இரண்டு வீட்டிற்கும் மாடியில்லாததால், இரு ஜன்னல்களும் நேருக்கு நேர் பார்க்கும் வண்ணம் இருந்தன. நாற்காலியில் உட்கார்ந்த சந்தரரின் கண்கள் தற்செயலாய் எதிரில்இருக்கும் அந்த ஜன்னலைக் கவனிக்க நேரிட்டன. அப்புறம் அவன் கண்கள் புத்தகத்தைப் பார்க்க மறுத்தன. வைத்த விழி வாங்கவில்லை. அதனால் புத்தகமும் கோபித்துக் கொண்டு கையிலிருந்து நழுவி மடியில் விழுந்தது.

“ஆகா! அதோ ஒரு கைதான் தெரிகிறது. அக்கரத்திற்குத்தான் என்ன சோபை! எத்தனை அழகு! இதுவே இப்படியானால், முழு மேனியும் எவ்வாறிருக்குமோ? பொன்னிற மேனியென்பது இதுதான்போலும்! இதென்ன ஒரு ஆணினுடையதா? அல்லது ஒருபெண்ணினுடையதாய் இருக்குமா? மற்ற அவயவங்கள் மறைந்து சுவருக்கப்பால் இருக்க வேண்டும். பெண்ணின் கையாக இருந்தாலல்லது இவ்வளவு ரூபமுள்ளதாயும், கவர்ச்சிகரமாகவும் இருக்கக் காரணமில்லை. சேச்சே! இருக்காது! கரத்தைக்கொண்டு ஊகித்தால் குறைந்தது பதினாறு வயதாவது இருக்க வேண்டும். அப்படியானால்? பெண்ணாய் இருக்கும் பக்ஷத்தில் கையில் ஒரு வளை கூடவா இராது? யாராக இருந்தால் நமக்கென்ன? என் நெஞ்சம் ஏன் இவ்வாறு அல்லலுற்றலைகிறது? சீச்சீ! பேதை மனமே போதை கொள்ளாதே!”

ஒரு காற்றடித்தது. முந்தாணியின் தலைப்பு பறந்து வந்து ஜன்னல் கம்பிகளில் மோதிற்று. “ஒ! தெரிந்தது! நிச்சயம் அங்கு நிற்பது ஒரு பெண்தான். இல்லாவிடில் பச்சைத் தாவணி பறந்து வர நியாயமில்லை. இதோ இன்னொரு கரமும் தாவணியை இழுக்கின்றது. எத்தனை நாழிதான் அங்கு அப்படி நிற்பாள். கால்தான் கடுக்காதா? ஒருமுறை ஜன்ன

லருகில் வந்தால்தானென்ன? அதோ! வந்தும் விட்டாள். ஆம்! எல்லோரும் பெண், இவளும் பெண்ணு? இல்லை. இவள் தேவலோக அப்ஸரஸ்! உம்! நான் நினைத்து என்ன பிரயோஜனம்! இவளை அடைய எவன் கொடுத்து வைத்திருக் கிருனே?" என்றவாறெல்லாம் நினைத்து, குழம்பிய மனதுடன் பள்ளிக்குச் சென் ருன். அன்றிலிருந்து அவனுக்கு ஒன் றும் ஓடவில்லை. பைத்தியம் பிடித்தவ ளுனன். வெளியில் சென்ருலோ கால் கள் அறையை நோக்கிப் பின்னுக்கு விரை கின்றன. அறைக்கு வந்தால் சும்மா சும்மா கிடைக்குமா சோணுசலம் பாத தரிசனம்? எத்தனை நாழி ஜன்னலையே பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருப்பது? அதை மறக்க வெளியே செல்லும்படி மனம் தூண்டுகிறது. இப்படியே நாலைந்து தினங்கள் கழிந்துவிட்டன.

## 2

அதே அறை, அதே ஈஸிசேர் - அதில் அமர்ந்திருப்பதும் அதே சந்தர். கையி லிருப்பது மட்டில் புத்தகமன்று, பத்தி ரிகை, குழம்பிய மனது; கண்கள் ஜன்ன லுக்கும் பத்திரிகைக்கும் ஊசலாடுகின் றன. இன்று அதிர்ஷ்டந்தான். மோஹினி காட்சி யளித்துவிட்டாள்! க்ஷண நேரந் தான். இவன் அவளை நோக்கினன். அவள் இவனை நோக்கினள். திகைத்து நின்ருள். உடனே மாயமாய் மறைந் தாள்.

சிறிது நேரத்திற்கெல்லாம் ஒரு சிறு வன் ஓடி வந்தான். படியேறி மாடிக்கு வந்து "மாமா! எங்கக்கா, சித்தே இந்தப் பேப்பரை வாங்கிக்கொண்டு வரச் சொன்னள். S. S. L. C. ரிசல்ட் வந்திருக்காம். பார்த்துட்டு தரேன்ருள்" சந்தர்ப்பத்தை நழுவ விடாமல், "அதிருக்கட்டும் தரேன். யாருக்காக ரிசல்ட்டு பார்க்க வேண்டும்? நீங்கள் அவ்வீட்டிற்குப் புதிதாய் வந் திருக்கிறீர்களோ?" என்ருன் சந்தர்.

"ஆம்! மாமா! எங்கள் அத்தையாத் துக்கு, படிப்பதற்காக வந்திருக்கிருேம். எங்கக்கா சுந்தரிக்குத் தான் ரிசல்டு பார்க்கணும்" என்று, கையில் கொடுத்த பேபரை வாங்கிக்கொண்டு கம்பி நீட்டி விட்டான்.

"ஆகா! சுந்தரி! சுந்தரி! நல்ல பொருத்த மான பெயர். சந்தேக மன்னியில் சுந்தரி தான். சந்தர் - சுந்தரி! ஏன்? இதுவும் பொருத்தமாய்த்தான் இருக்கிறது.

தபால்காரன் கூப்பிடவே, கீழே சென்று கடிதத்தை வாங்கி வந்தான். தகப்பனரிட மிருந்து வந்திருந்தது, வாசித்தான்.

"முன்பு எழுதியபடி தஞ்சாவூர்ப் பெண்ணையே நிச்சயித்து விட்டேன். அவர்கள் கேட்ட வரதக்ஷிணைக்குச் சம்ம தித்தார்கள். முகூர்த்தம் வைத்தா யிற்று. உடனே புறப்பட்டு வரவும்."

"என்ன பெற்ருேர்கள்? ஆயிரம் பெண்ணைச் சந்தையில் சம்பாதிக்கலாம். இஷ்டமில்லையென்ருல் ஏன் இம்சைப் படுத்தவேண்டும்? காசுக்குச் சாகிறவர் களை எப்படித் திருப்திப்படுத்துகிறது? இதுவரை அவர்களுக்கு விரோதமில்லா மல் நடந்துவிட்டோம். சங்கல்பப்படி நடக்கட்டும்" என்று சொல்லிக் கொண் டான். அவன் மார்பு விம்மித் தணிந் தது. ஒரு பெருமூச்சு விட்டான்.

சந்தர் தனதூராகிய நாகபட்டினத்திற் குச் செல்லவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட் டது. சென்றவன், பெற்ருேரின் விரோ தத்தைச் சம்பாதித்துக்கொள்ள மனமில் லாதவனுய், தர்மாம்பாளை, தர்ம பத்னி யாக ஏற்றுக்கொண்டான். மறுபடி அதே அறையில் தொடர்ந்து படிப்பை நடத்தி பி. ஏ. பாஸ் செய்தான். அங் கிருக்கும் வரை, சந்தர், சுந்தரியிடம் நேரில் பழக சந்தர்ப்பம் கிட்டவே யில்லை. ஏதாவதொரு சமயம் பையன் வருவான். அவன் மூலம் கொஞ்சம் பழக்கம் அதிகமாயிற்று. இவனுக்குக் கல்யாணம் ஆய்விட்டதென்று தெரிந்த வுடன், அவள் கசப்புக் கொண்டாள். பையனது வரவும் ஒழிந்தது. அவனும் டாக்டர் பரீக்ஷைக்குப் படிக்க சென்னை சென்ருன்.

மத்தியில் சுந்தரின் மனைவி தர்மா ஒரு பெண் குழந்தையைப் பெற்றெடுத்தாள். குழந்தை வயது மூன்று தான், கவர்மெண்ட் உத்தியோகத்துக்கு அப்ளிகேஷன் போட்டான், கிடைக்கவில்லை. நாகையில் தனியே பிராக்டீஸ் ஆரம்பித்தான். ஜசுவர சங்கல்பத்தை வெல்ல முடியுமா? அவன் டாக்டர்தான் ஆயினுமென்ன? தர்மா படுத்த படுக்கையானாள். பெரிய வைத்தியர்கள் பார்த்தும் பலனில்லை.

தபால்காரன் கொடுத்த கடிதத்தைக் கையில் கொண்டு உள்ளே நுழைந்தான் சுந்தர்; "அது என்ன? கடிதமா? யார் எழுதி யிருக்கிறார்கள்?" என்று ஈன ஸ்வரத்தில்,கேட்டாள் படுக்கையிலிருந்த தர்மு.

"கண்ணே! தர்மு! உன் அட்ரஸ் ஸுக்குத்தான் வந்திருக்கிறது யாரோ தெரியவில்லை."

"பிரித்து வாசியுங்களேன்."

எழுதியவர் 'சுந்தரி' யென்று கையெழுத்துப் போட்டிருந்தது. அது தஞ்சை சென்று அங்கிருந்து திருப்பி அனுப்பப்பட்டு இங்கு வந்திருந்தது. இரண்டையும் காணவே, சுந்தரின் கைகள் நடுங்கின, முகம் மாறுதலுற்றது. யோசித்தான்! ஆம்! ஊர் தஞ்சை, பெயர் சுந்தரி! அவள் தானென்பதில் என்ன சந்தேகம், ஆகா! மறந்திருந்தது. மறுபடி ஞாபகத்துக்கு வரவேண்டுமா? அதுவும் இந்த சமயம் ஈச்வரா! ஏன் இந்த சோதனை?

"ஏன் தயக்கம், வாசியுங்களேன். யார் எழுதியிருக்கிறார்கள்? என்ன சஞ்சலம்?"

"ஒன்றுமில்லை. யாரோ சுந்தரியாம் தஞ்சையில்" உன்னுடைய சிநேகிதியாய் இருந்தாளாம். நீ இங்கிருப்பது தெரியாததால் தஞ்சைக்கு எழுதியிருக்கிறாள். உன் பெற்றோர் நமக்குத் திருப்பி அனுப்பியிருக்கிறார்கள்.

"ஆ! சுந்தரியா! என் அன்பு மிகுந்த சுந்தரியா? ஐயோ! அவளை இனி பார்ப்பேனா? இணை பிரியாமல் சகோதரிபோல் எத்தனை நட்பு பாராட்டி வந்தோம். சுந்தரி! நீ இருக்குமிடம் தெரியாமலல்லவா நானும் சும்மா இருந்தேன். உன் குணம் யாருக்கு வரும்? நாதா, நல்ல வேளையாக இக் கடிதம் வந்தது. இனி நான் பிழைக்கமாட்டேன். நீங்கள் எப்படியாவது அவளிருக்குமிடம் சென்று இக்குழந்தையை நான் சொன்ன தாய் அவளிடம் ஒப்புவியுங்கள். அவள் எனக்கு மேலாக நன்கு பரிபாலிப்பாள். அவள் வேறு, நான் வேறில்லை. நீங்களும் அவளையே மறு விவாகம் செய்து கொண்டு, இனியாவது சுகமே வாழுங்கள். அல்லது, அவளுக்கு ஒரு தந்தி கொடுங்கள். பறந்து கொண்டுவருவாள்.

அப்படியே சுந்தர் அதில் காணப்பட்ட விலாசத்துக்கு ஒரு தந்தி கொடுத்தான். அவளும் வந்தாள். அவளை உற்றுக் கவனித்த அவன், "ஆ! சுந்தரியா! என்னை அடையாளம் தெரிகிறதா?" எனறு கேட்டு நிறுத்திக்கொண்டான். அவனைப் பார்த்து ஸ்தம்பித்த அவள், "யார், நீங்களா? சுந்தரா எனது பிரிய மிகுந்த சிநேகிதி தர்மாளின் கணவர்? அடாடா! தெரியாமல் போச்சுதே. மெத்த சந்தோஷம்!" என்றாள்.

பின் தர்மாள் படுத்திருந்த பக்கம் திரும்பினாள்! இருவர் கண்களும் கலங்கின! அவற்றினின்று இரு நீர்த் துளிகளும் வெளிவந்தன. அவளது நிலைமையைக் கண்டு பெரிதும் வருந்தினாள் சுந்தரி. பழையகாலச் சம்பவங்களைப் பற்றிச் சம்பாஷணை நடைபெற்றது.

"பிரியே! சுந்தரி! என் நட்பை மறக்கக் கூடாது, மறக்கவும் மாட்டாய். அதன் அடையாளமாக, நான் இறந்துவிட்டால் என் கணவரை நீ மணந்து கொண்டு குழந்தையையும் காப்பாற்ற வேண்டியது உன்னுடைய பொறுப்பு. ஆகட்டுமென்று சொல்."

"அன்பார்ந்த தர்மு! என் விருத்தாந்தங்கள் உனக்கு யாதும் தெரியாததால் உளறுகிறாய். அதற்குள் ஏன் உன்னைப்பற்றி முடிவுகட்ட வேண்டும். சவுக்கியமடைவாய், பயப்படாதே?"

"தங்காய்! இல்லை! இனிப் பிழைப்பது அரிது! இதோ இக்குழந்தை இனி உனது" என்று அதைப் பிடித்து அவள் கையில் கொடுத்தாள் தர்மு.

"ஒப்புக்கொண்டவள்போல் தலையை அசைத்துக் குழந்தையை அணைத்துக்கொண்டாள். மனது உழலத் தொடங்கியது. அந்தரங்க சிநேகிதியின் கணவனாக அவன் இருந்ததுபற்றி உவகை பூண்டாளானாலும், பெண் உள்ளமல்லவா? பேதலித்துவிட்டது. அங்கிருக்கச் சமாதானப் படவில்லை. அவர்களுக்குத் தேர்தல் சொல்லிவிட்டு, நேர்ந்தால் மறுபடி பார்ப்பதாய்ச் சொல்லிக்கொண்டு ஊருக்குக் கிளம்பிவிட்டாள்.

### 3

விதியின் செயலை விலக்க முடியாது. தர்முவை ஆண்டவன் ஆட்கொண்டுவிட்டான். இவனை சிதம்பரம் ஆஸ்பத்திரிக்கு டாக்டராக நியமித்திருப்பதாய் ஒரு உத்திரவு கிடைத்தது. பெற்றோர்களையும் குழந்தையையும் அங்கே கூட்டிக் கொண்டுபோய் வேலையை ஒப்புக்கொண்டான். மறுநாள் காலை டியூட்டிக்கு ஆஸ்பத்திரிக்குச் சென்றவன் லேடி டாக்டர் இருக்க வேண்டிய இடத்தை அடைந்தான். அங்கு வீற்றிருந்த உருவத்தைக் கண்டு அலமலந்து அப்படியே நின்றுவிட்டான். அவள் யார்? வேறு யாருமில்லை, சுந்தரியே. இருவரும் ஆச்சரிய மடைந்தனர். தர்மாள் இறந்ததை அறிந்து பெரிதும் வருத்தம் காண்பித்தாள் சுந்தரி.

நாளடைவில் நெருங்கிப் பழகவே நேசம் பாசமாய்ப் பரிணமித்து, முற்றிக் காதலில் முடிந்தது. மனம்விட்டுப் பேசினர். தன்னைமணந்து தர்மாளுக்குக் கொடுத்த வாக்குறுதியையும் நிறைவேற்றுமாறு கேட்டுக்கொண்டான் சந்தர்.

"அது முடியாத காரியமாச்சுதே நான் ஏற்கெனவே வாழ்க்கைப்பட்டுக் கணவனை இழந்து சமூகத்தாரால் 'விதவை' யென பட்டம் பெற்றவள். என் கணவர் பர்மாவில் இருந்தார். அங்கு ஜப்பானியரால் கைதியாக்கப்பட்டுக் கூட்டிச் செல்லப்பட்டார். சில மாதங்களுக்கெல்லாம் இறந்துவிட்டதாக அறிவிக்கப்பட்டது. நமக்குள் சம்மதமானாலும் சமூகம் ஏற்க வேண்டுமே?"

"அதைப் பார்த்து முடியுமா? இப்பாழும் சமூகம் அளவுக்கு மீறிய துஷ்கிருத்தியங்கள் சிலவற்றை நாகரிகம் என்ற பெயரால் சகஜமாய் ஏற்றுக்கொள்கிறது. முக்கியமாயும், அவசியமாயும் அங்கிகரிக்க வேண்டிய சீர்திருத்தங்களைக் கண்டால், 'ஓகோ! குடி கெட்டது. மதமே போய்விட்டது' என்று வீண் கூச்சல் போடுகிறது. நம் மனதுக்கு சரியென்று பட்டதைச் செய்வதில் தடையென்ன? நாம் இதுமாதிரி முன்வந்து தைரியமாய்ச் செய்தால் மட்டுமே உலகம் உய்வுபெறும். பெண்ணே! நாம் வாழ் நாளை ஏன் வீணாக்க வேண்டும். யோசித்துப் பார்!"

அப்படியே இருவருக்கும் விவாகம் நடந்தது. அதிலிருந்து ஒரு புது விளையாட்டுத் தம்பதி ஏற்பட்டது. சந்தரின் குமரி சுசிலாவை அழைத்து "நீ யாரைக் கலியாணம் செய்துகொள்ளப் போகிறாய்?" என்று கேட்டால், உடனே பட்டாசு வெடிப்பதுபோல் பட்டென 'சேகரைத் தான்' யென்று பதிலளிப்பாள். இருவரும் கைகொட்டி ஆனந்தப்படுவர். சேகர் யென்பது சுந்தரியின் தம்பியென சொல்ல வேண்டியதில்லை.

சண்டை சமரஸமுற்றது. நிபந்தனைப்படி கைதிகள் விடுதலை யடைந்து அவரவர் தேசங்களுக்குக் கிளம்பலாயினர். வெங்கட்ராமனும் கல்கத்தா வந்தபின் சுந்தரியின் வீட்டிற்குத் தந்தி கொடுத்தார். தான் உடனே புறப்பட்டு வருவதாக அவர்களும் அதை சுந்தரிக்கு அறிவித்தார்கள். அவர்கள் நிலை எப்படி யிருக்கும்? அவளும் தனது புருஷன் வரவை அறிந்து திடுக்குற்றாள். சந்தோஷம் ஒருபுறம், சஞ்சலம் ஒருபுறமாக வாட்டியெடுத்தது. என்ன செய்வதென்று தெரியாமல் இடிந்து உட்கார்ந்துவிட்டாள். அன்றிரவு பாஷாணத்தை உட்கொள்ள முடிவு செய்தாள். அந்த சம

யம் அகஸ்மாத்தாகப் பின்புறமாய் அங்கு வந்த சந்தர் அதைக் கவனித்துவிட்டார். கையிலிருந்த கிளாஸை வாயினருகில் உயர்த்தினுள். அதைப் பார்த்ததுமே அவன் அறிந்துகொண்டான். கூச்ச விட்டு ஓடி, மருந்தை ஒரு தட்டுத் தட்டி விட்டான். அது எட்டி விழுந்து சிதறிப் போயிற்று. விஷயத்தையும் அவளிடம் கேட்டு அறிந்துகொண்டான். "சரி! முன்புவந்த தகவல் தவறுதலாக இருக்க வேண்டும். கணவன் உயிருடன் இருக்கிறூர். வேறே என்ன வேண்டும். நானே அபராதி" என்ருன். அவளிடம் பிராணத் தியாகம் செய்வதில்லை யென்று சத்தியம் வாங்கிக்கொண்டான். மறுநாட் காலையிலிருந்து, சந்தர் போனவன் போனவன்தான்.

சுந்தரியின் கணவர் வெங்கட்ராமன் வந்தார். அவள் அவர் பாதங்களில் விழுந்து உண்மையைக் கூறினுள். "நான் பாவியாய்விட்டேன். என்னை மன்னியுங்கள்" என்று வேண்டிக்கொண்டாள். அப்படியே அவரும் அன்புடன் அரவணைத்து, "கண்ணே! தெரியாமற் செய்த பிழைக்கு யார் என்ன செய்யலாம். நானும் ஒரு சீர்திருத்தக்காரன் தான். உன் செய்கைக்கு மன்னிப்பே வேண்டாம். அதற்காக அவர்கூட ஏன் இடம் தெரியாது ஓடியிருக்கவேண்டும். என்னுல் இத்தனை துன்பமா?" என்றூர். இருவரும் மறுபடி இல்லறம் நடத்தி வந்தனர்.

## 4

சேகர் வாலிபப் பருவமடைந்தான். சித்திரங்கள், கல்வெட்டுக்கள், குகைகள் முதலிய அபூர்வக் கலைவேலைகளை ஆராய்ச்சி செய்யும் அர்க்கலாஜிகல் டிபார்ட்மெண்டில் உத்தியோகம் பார்க்கிறுன். அதிகாரிகளுடன் அவனும் அவற்றைப் பரிசீலனை செய்ய வெளியூர்களுக்குச் செல்வதுண்டு. ஒருமுறை திருக்கழுக்குன்றம், மகாபலிச்சுவரம் முதலிய இடங்களுக்குச் செல்ல நேர்ந்தது. அப்போது ஒரு குகைக்குள் நுழைந்தவன் அப்படியே ஸ்தம்பித்து நின்றுன். காஷாய வஸ்திர தாரியாய்க் கம்பீரமான தோற்றத்துடன் அங்கிருந்தவரை நோக்கி, "ஸ்வாமி! தாங்கள் சந்தர் என்ற திருநாமம் பூண்டவரல்லவா? இப்படி விட்டு வந்துவிடலாமா? அத்திம்பேரும் தங்களை வித்தியாசமாக நினைக்கவே யில்லை. நீங்கள் செய்ததை ஆக்ஷேபனை சொல்லவில்லை. எதற்காக இப்படிக் கண்காணுமல் ஓடவேண்டுமென்று கேட்டுப் பச்சாத்தாபப் பட்டார். ஆத்தில் சுசீலா உட்பட அனைவரும் க்ஷேமம். அவள் விவாகத்தை நடத்தத் தேதிகூட குறிப்பிட்டாயிற்று. எல்லோரும் உங்களைத் தேட முனைந்திருக்கிறூர்கள். மறுதளிக்காமல் அவசியம் என்னுடன் வரவேண்டும்" என்று அடிபணிந்து வணங்கினுன்.

புன்சிரிப்புடன் "அவர்கள் அபிலாஷை அதுவாயின் அங்கிகரித்தேன். மெத்த சந்தோஷம். புத்திரி சுசீலாவைப் பார்க்கவாவது ஒருதரம் வருகிறேன்".

அதன்படி இருவரும் புறப்பட்டுச் சிதம்பரம் வந்து சேர்ந்தனர். சுந்தரி இவர் பாதங்களில் விழுந்து பணிந்தாள். 'ஓ'வென்று அலறினுள். வெங்கட்ராமன் அவரை மனம் கோணுமல் அன்புடன் வரவேற்றூர். சந்தரும் அவரைத் தன் பிழைக்கு க்ஷமிக்கும்படி பிரார்த்தித்தார். சுசீலாவை அன்புடன் அணைத்து உச்சி முகர்ந்தார். சுசீலாவிற்கு மணம் முடிந்தது.

அனைவரும் சந்தரை அங்கேயே இருக்கும்படி மிகவும் பிரார்த்தித்தனர். ஆனுல் அவர் அசையவில்லை. 'வெங்கட்ராம்! நான் செய்த பாபத்திற்குப் பிராயச்சித்தம் செய்துகொண் டிருக்கிறேன். எதையோ சீர்திருத்தமாகக் கருதி, விட்டில் பூச்சிபோல் விளக்கில் விழுந்து விட்டேன். விதி வலிது, அதைத் தடுக்க முடியாது. அவள் இனி என் சகோதரி. இங்கிருந்துகொண்டு அடிக்கடி உங்களுடைய மனதைப் புண்படுத்த விரும்பவில்லை. என் சார்பாக அவளை மன்னித்துக்கொள். நான் போவதைத் தடுக்காதே" என்று சொல்லிவிட்டு

# இந்திய சாரணரியக்கம்

[ஆர். ஸ்ரீநிவாஸ அய்யங்கார் - பீளமேடு]

நமது தேசத்தில் சாரண இயக்கம் ஸ்தாபிக்கப்பட்டு இருபத்தைந்து வருஷங்களுக்கு மேலாகிறது. மேல் நாடுகளில் பள்ளிக்கூடங்கள் மூலமாக இயக்கம் பரவவில்லை. இந்தியாவில் பள்ளிக்கூடங்கள் மூலமாகத் தான் ஆரம்பிக்கப்பட்டுப் பரவியிருக்கிறது. ஆகவே நமது நாட்டில் வழங்கும் கல்வியைப் பல அம்சங்களில் சாரண இயக்கம் மாறுதல்கள் செய்திருக்கிறது; லட்சியங்களிலும், நோக்கத்திலும் போக்கிலும். கவி தாகூர் அவர் கதைகளில் சொல்லியிருக்கிறபடி, "மாணவர்கள் ஆசிரியர்களைக் கண்டு பயந்து ஓடும் காலம் சென்றுவிட்டது. ஆசிரியர், மாணவனின் மூத்த சகோதரர் என்று கருதப்பட்டு அன்னியோன்னிய பாவம் பள்ளிகளில் உலாவி வருகிறது. சமீப காலத்தில் சிற்சில இடங்களில் ஏற்படுகிற வேலை நிறுத்தங்கள் மாணவர்களின் தைரியம் சுதந்தரதாகம் இவை அதிகப்படியாயிருப்பதைக் காண்பிக்கிறது. பயங்காளித்தனத்தை விட்டு ஆசிரியர்களுடன் நெருங்கிப் பழகும் மனப்பான்மை உண்டாயிருக்கிறது. சாரண முகாம்களில் நடைபெறும் "களிப்புத் தீ" (camp fire) உணர்ச்சி சாரணர்களுக்குள் சகோதர பாவத்தை அதிகப்படுத்தியதுடன், ஆசிரியர்களிடம் அன்பு பாராட்டி வருகிறது. இது எல்லா மாணவர்களிடமும் பரவி வந்திருக்கிறது. அணி வகுப்பு முறை (patrol - system) சாரணரியக்கத்தில் கையாளப்படும் விசேஷமான முறை. இச் சிறந்த முறையைச் சில கலாசாலைகளில் படிப்பிலும், விளையாட்டுகளிலும் வெளிவாசம் செல்வதிலும் (excursions) அனுஷ்டித்து வருகிறார்கள். சாரண ஸ்தாபகர் ஏற்படுத்திய விளையாட்டுகள், நமது பள்ளிகளில் தேக அப்பியாசப் பயிற்சித் திட்டத்தில் இணைக்கப்பட்டுள்ளன. அதே விளையாட்டுகளை எல்லா மாணவர்களும் இப்போது அப்பியசிக்கிறார்கள். கருவிகளில்லாமல் (apparatus - less games) விளையாட முடியும், ஆனந்தமடைய முடியும், ஆரோக்கியமடைய முடியுமென்று சாரண ஸ்தாபகர் விளையாட்டுகளைச் சிருஷ்டிசெய்து நிரூபணம் செய்திருக்கிறார். இது உலகத்திலுள்ள எல்லாக் குழந்தைகளுக்கும் ஸ்தாபகருடைய விலையுயர்ந்த கொடையாகும். விசேஷமாக, நமது எளிய நாட்டில் கிராமாந்தர வாழ்வுக்கு ஒத்தாற்போலுள்ள விளையாட்டுகள். இந்த விளையாட்டுகளும் (rural games) பரவிக்கொண்டு வருகின்றன. சாரணர்கள் முகாம்கள் சென்று பழகும் ஆரோக்கியமான வாழ்வு - அப்பியாசங்களை இதர மாணவர்களும் கைப்பிடித்து வருகிறார்கள். கைத்தொழில் வேலை, சாரணர் ஓய்வு நேரங்களில் பழகும் வேலையாயிருந்து, இப்போது நமது கல்வித் திட்டத்தில் ஆரம்பப் பாடசாலைகளிலும் உயர்தரப் பாடசாலைகளிலும் எல்லாக் குழந்தைகளுக்கும் கற்றுக்கொடுக்க வேண்டுமென்று கல்வி அதிகாரிகள் உணர்ந்து வற்புறுத்த ஆரம்பித்திருக்கிறார்கள். மகாத்மா காந்தியடிகளும் வார்தா திட்டத்தில் கைவேலையின் அடிப்படையான முக்யத்வத்தை எடுத்து காண்பித்திருக்கிறார். சாரண ஸ்தாபகர், கைவேலை

---

மாயமாய் மறைந்தார். எல்லோரும் ஏங்கி நின்றனர். நிச்சப்தம் நிலவியது.

அவர்கள் அவ்வப்பொழுது மகாபலீச்சுவரஞ் சென்று அவரைக் குருநாதராக வணங்கிவிட்டு வருவார்கள். அவரது பெயரும் சந்திரமௌளீசுவர ஸ்வாமிகள் என்று பிரஸித்தி அடைந்தது.

சாரணப் பயிற்சியில் ப்ரதானமான அம்ச மென்றுவ ஏற்படுத்தியிருக்கிறார். இப்போது எல்லா வாலிபர்களும் சமூக சேவை செய்ய வேண்டியதை அறிந்து கொண் டிருக்கிறார்கள். சேவை செய்யும் கடமை, சாரணன் கங்கணம் கட்டிக் கொண்ட விரதம், சத்தியம், சாந்தம், சகோதர பாவம், இந்த தர்மங்கள் உலக முழுவதும் பரவ வேண்டுமென்று (உத்தேசத்தோடு) சாரண ஸ்தாபகர், எல்லா சாரணர்களும் தங்களுடைய வாழ்வில் முக்கியமான கொள்கைகளாகக் கடைப்பிடிக்க வேண்டுமென்று சாரணச் சட்டங்களை நிர்ணயம் செய்திருக்கிறார். ஆகவே, சாரண இயக்கம் நமது நாட்டில் சில ஆண்டுகளாக வளர்ந்து வந்ததன் பயனாக, நமது பள்ளிகளின் இருப்பு அமைப்பு, போக்கு, நோக்கம், இலட்சியம் இவைகள் முன்னேறிப் போய்க்கொண் டிருக்கின்றன என்பதில் ஐயமில்லை. தற்காலம் கல்வி, நடை முறையில் குறைகளில்லை என்று நான் சொல்லவில்லை. அபிவிருத்திக்கு இடமிருக்கிறது. ஆனால் சாரண இயக்கம் நடந்துவரும் இந்த இருபத்தைந்து வருஷ காலங்களில் முற்போக்கான சம்பவங்கள் கல்வியில் ஏற்பட்டு வருகின்றன.

இந்திய சாரணீயம் நமது நாட்டுக் கல்விக்கு அற்புதமான கைங்கரியம் பூண் டிருக்கிறது; தேசாபிமானம் புகட்டுவதில் அரிய வேலை காண்பித்திருக்கிறது. பிரான்ஸ், அமெரிக்கா, ஜெர்மனி, ஜப்பான் முதலிய நாடுகளில் தேசாபிமானம் நேர்பாடமாகக் கற்பிக்கப்பட்டும், இங்கிலாந்து தேசத்தில் மறைமுகமாய்ப் பள்ளி மாணவர்களிடம் பதியும்படி திட்டங்கள் வகுக்கப்பட்டு மிருக்கின்றன. ஆனால் இந்தியக் கல்வித் திட்டத்தில் தேசாபிமானம் கற்பிக்க ஒரு வழியுமில்லாமலிருந்து வருகிறது. சமீபத்தில் மகாத்மா காந்தியடிகள் தேசிய உணர்ச்சியில் கல்வி (Education in national consisousness) வேண்டுமென்று நிர்மாண வேலைக்காரர்களுக்கு உபதேசம் செய்துள்ளார். இந்திய சாரணீயம் சாதுரியமாகவும் தைரியமாகவும் நமது இளைஞர்களிடம் நாட்டுப்பற்று புகும்படியாக செய்திருக்கிறது. ஸ்ரீமதி பெஸண்ட் அம்மையார் தீர்க்கதரிசனத்துடன் செய்த வேலையால், இந்திய வாலிப சாரணர்கள் தாய்நாட்டுக்குக் கைங்கரியம் செய்வதாய் வாக்குறுதி எடுத்துக் கொண்டு வருகிறார்கள். சாரணப் படைகளும் அணிகளும் உத்தம உத்தமிகளின் நாமதேயங்களால் பெயரிடப்பட்டு வருகின்றன. "வந்தே மாதரம்" "செந்தமிழ் நாடெனும் போதிலே", "பாரத மாதா", "God save our God", "God save our Mother land" இவைபோன்ற தேசியக் கீதங்கள் முதன் முதலாக பள்ளிகளில் பாடுவதற்குமுன் சாரணர்கள் கூட்டங்களில் பாடப்பட்டு வந்தன. ஏகாதிபத்திய நாடுகளில் யூனியன் ஜாக் கொடிக்குப் பதிலாகச் சாரணக் கொடி பறக்கவிடலாமென்று பேடன் பவல் பிரபு தாராள புத்தியுடன் அனுமதி கொடுத்தார். வயது முதிர்ந்த சாரணர்கள் அவர்களால் இயன்றமட்டும் தேச சேவையில் ஈடுபட்டிருக்கிறார்கள். விசேஷமாக, கிராமப் புனருத்தாரண வேலையில் தனித்தனிக் கூட்டங்களாகப் பல இடங்களில் படாடோப மில்லாமல் முதிய சாரணர்களும் வாலிபச் சாரணர்களும் சேவை செய்திருக்கிறார்கள். ஆகவே, இந்திய சாரணீயம் இந்தியக் கல்வியைக் கூடுமானவரையில் தேசியமயமாக்கிற்று; கல்விச் சாலைகள் சாரண இயக்கத்திற்கு விவரிக்க முடியாதபடி கடன்பட்டிருப்பதாகக் கூறுவது மிகையாகாது.

இந்திய சாரணீயம் ஒரு உச்ச நிலையை யடைந்திருக்கிறது. கல்வியில் இலட்சியங்களையும் முறைகளையும் நூதன வழிகளில் சீர்படுத்தி யிருக்கிறது. பிற்காலத்தில் அதன் வாழ்வு நமது தேசத்திற்கு எப்படிப் பிரயோஜனப்பட வேண்டுமென்று யோசிக்கும் காலம் வந்துவிட்டது. குருட்டுத்தனமாக நாம் செய்துகொண்டு வந்ததையே எக்காலத்திலும் செய்து கொண்டு வருவது மதியீனம். காலத்திற் கேற்ப, மாறுதல்களைச் செய்யத் துணிவு வேண்டும். இதுதான் ஒரு இயக்கத்தின்

விசேஷ குணமும் சக்தியும். முக்கிய இலட்சியங்களைக் கைவிடக்கூடாது. இயக்கம் வளரவேண்டும், விஸ்தரிக்க வேண்டும்; முறையிலும், ஸ்வரூபத்திலும் வேண்டிய மாறுதல்களைச் செய்ய வேண்டும். முக்கியக் கொள்கைகளை விட்டு விடாமல், அமைப்பு விஷயத்தில் வளர்ச்சி பெற, புதுத் திட்டங்கள் நிர்ணயிக்க வேண்டும்.

முதன் முதலாக, ஒரு பள்ளியில் நூற்றுக் கணக்கான மாணவர்களிருக்கையில் சில மாணவர்களுக்கு மாத்திரம் இந்த பயிற்சி யளிப்பது தவறு. மாணவர் சமூகத்தில் தனி ஜாதியான சாரண வகுப்பு அமைப்பது பள்ளிக்கூட அமைப்புக்கு ஒரு தீய குறையாகும். ஜே. ஜே. பின்லே (J. J. Findlay) "The School" என்ற புத்தகத்தில் சொல்லுகிறபடி, ஒரு மாணவன் பல வகுப்புகளில் அங்கத்தினராயிருப்பது, அவன் வளர்ச்சிக்கு ஹானியேற்படும். பள்ளியிலுள்ள எல்லா மாணவர்களுக்கும் சாரணப் பயிற்சியின் முக்ய அம்சங்களைக் கல்வித் திட்டத்தில் அமைக்க வேண்டியது அவசியம். இந்தச் சீர்திருத்தங்கள் கல்வி அதிகாரிகளாலும் இயக்கத் தலைவர்களாலும் கவனிக்கப்பட வேண்டும். 14-வயதுக் குழந்தைகளுக்கு ஏற்பட்டிருக்கிற சாரணப் பயிற்சிகளைக் கல்வித் திட்டத்தில் கட்டாயமாகச் சேர்த்துவிடலாம்.

மேலும், இதர நாடுகளைப்போல், வீர்யமுள்ள திறமையுள்ள தேசப் பிரஜைகள் ஆவதற்கு உரிமைகளை யறிந்து கடமைகளைச் செய்யப் பயிற்சி பெற வேண்டியது மிக்க அவசியம். பள்ளி மாணவர்களுக்கு உத்சாகம் புகட்டி, சந்தோஷம் அளித்து, சுயநல புத்தியை அகற்றி, பரோபகார மனோபாவத்தை ஊட்டியதே தவிர, இளைஞர்கள் இயக்கம் இளைஞர்களால் இளைஞர்களுக்காக இது காறும் நமது நாட்டில் நடத்தப்படவில்லை. நமது நாட்டுக் கலைகளையும், நமது நாட்டு நாகரிகத்தையும் நமது வாலிபச் சாரணர்கள் கைப்பற்ற வேண்டுமென்று இயக்கத் தலைவர்களுக்கு ஞானோதயம் ஏற்படவில்லை. சாரண இயக்கம் தேவையுள்ளபடி பாடசாலைகளில் வேலை செய்தாய்விட்டது. கல்வியில் சாரண இயக்கத்தின் மூலமாய்ச் சீர்திருத்தம் ஏற்பட்டிருப்பதைக் கல்வி அதிகாரிகள் இனிமேல் கைவிடப் போவதில்லை யாகையால், கல்வி ஆசிரியர்களாலேயே சாரணப் பயிற்சி பள்ளி மாணவர்களுக்கு கிடைக்கும்படி விட்டுவிட்டு, சாரண இயக்கம் வாலிபர் இயக்கமாக ஆரம்பிக்கத் தகுந்த காலம் வந்துவிட்டது. ஆகவே, 14-ம் வயது வரையில் கல்வி இலாகா மூலமாகக் கட்டாயமாக எல்லா மாணவர்களுக்கும் பயிற்சி யளித்து, 14 வயதுக்கு மேலுள்ளவர்களுக்கு இளைஞர் இயக்கமாக நடத்த வேண்டும்.

சரீர வளர்ச்சியிலும், மனோ விருத்தியிலும், விவேகம் உதயமாவதிலும், பதினான்காம் பிராயம் முக்கியமான கட்டம். விசேஷமான தோற்றங்கள் இந்த வயதில் காணப்படுவதை தாகூர் "home - coming" என்ற கதையில் வர்ணித்திருக்கிறார். மகாத்மா காந்தியடிகளின் வர்தா கல்வித் திட்டப்படியும், ஜான் சார்ஜன்ட் கல்வித் திட்டப்படியும், எல்லாக் குழந்தைகளும் 14-ம் வயதில் ஆரம்பப் படிப்பு பூர்த்தியாகி, மேல் படிப்புக்கோ, தொழில் கற்றுக் கொள்வதற்கோ, பள்ளிகளை விட்டு விலகுகிறார்கள். மனிதனுக்கு வேண்டிய ஆண்மையை அடைய சில வருடங்கள் செல்லவேண்டும். 14-20 பிராயங்கள் மனித வாழ்வில் சிக்கல்களில் ஆழ்த்தக் கூடிய காலம்; வாலிபர்களுக்குச் சரியான மேற்பார்வையில் புத்திமதி பெறவேண்டிய காலம். பிசகான வழிகளில் இறங்கி விட்டால், எல்லாத் துறைகளிலும், கெட்டுப் போகக்கூடும். இந்தக் காலத்தில், தேகப்பயிற்சியிலும், மனோ வலிமையிலும், ஆத்ம சுத்திகரணத்திலும் தகுந்த தேர்ச்சி நமது வாலிபர்களுக்கு ஏற்படுத்த வேண்டியது நமது கடமை. இங்கிலாந்து தேசத்தில் வாலிப சேவை ஸ்தாபனங்கள் ('service for youth' centres) மூலியமாய் 14 - 20 வய

துள்ள வாலிபர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது; இதற்கு, கல்வித் திட்டத்தின் நான்காம் புஜம் (the fourth arm of the educatinal policy) என்று கல்வி மந்திரி பெயரிட்டிருக்கிறார். இந்தக் கடமையைச் சாரணரியக்கத்தின் மூலியமாய் செலுத்தினால்தான், சாரணர் இயக்கம் இளைஞர்களுக்காக இளைஞர்களால் நடத்தப்படும் இயக்கமாகும். பள்ளி ஆசிரியர்கள் ஆதிக்கத்தின்கீழ் நடத்தப்பட்டால் இந்த வயது மாணவர்களுக்குப் பிரயோஜனம் கிடைக்காது. இந்த வயதில் யோசனை செய்வதிலும், பேசுவதிலும் காரிய நிர்வாகம் செய்வதிலும் சுதந்திரம் அனுபவித்து முடிவாகக் காரியங்கள் செய்தால்தான், ஒழுக்க வளர்ச்சி, ஒழுங்கான வழியில் செல்லும். இயக்கத்தின் முக்கியமான இலட்சியங்களும் அவரவர்களாக சிறு கூட்டங்களில் செய்துள்ள முடிவுகளுமே அவர்களுக்குக் கட்டுப்பாடுகளே தவிர வேறு கட்டுப்பாடுகள் இருக்கக் கூடாது. சுதந்திரத்துடன் கட்டுப்பாட்டின் அருமையை உணர்வது சிலாகிக்கக் கூடியதே. அப்பேர்ப்பட்ட வாழ்வு இன்றியமையாதது. ஆகவே, சாரண இயக்கத் தலைவர்கள், 14 - வயதுவரையுள்ள மாணவர்களின் பயிற்சியைக் கல்வி இலாகாவிடம் ஒப்புவித்துவிட்டு, 14 - 20 வயதுள்ள வாலிபர்களுக்குச் சாரண தத்வத்திலும், கொள்கைகளிலும், முறைகளிலும் பயிற்சியளித்து, ஒரு தேசிய வாலிபர் இயக்கமாக அமைத்தார்களானால், தேசத்திற்கு உண்மையான தொண்டர்களாவார்கள். இப்பேர்ப்பட்ட இயக்கம் நமது நாட்டுக்கு மிகவும் தேவையென்று சார்ஜன்ட் ரிப்போர்ட்டில் ஒரு ப்ரத்தியேகமான அத்தியாயத்தில் கூறப்பட்டிருக்கிறது. மாகாணத் திட்டமல்லாமல் அகில இந்தியத் திட்டமாக யிருக்க வேண்டுமென்றும் சார்ஜன்ட் வற்புறுத்துகிறார்.

அகில இந்திய வாலிபரியக்கம் பயனைத் தரும். இளைஞர் இயக்கம் அகில இந்தியத் திட்டமாக அமைக்கப்பட்டால்தான், நாம் தேசிய ஒற்றுமையை வளர்க்க முடியும். ஸ்வாமி விவேகானந்தர் சொல்லியபடி, "இந்திய பூமி, எனது உயர்ந்த ஸ்வர்க்கம், இந்தியாவில் வணங்கப்படும் தெய்வங்கள், எனது தெய்வங்கள், இந்திய சமூகத்தில் பிறந்து வளர்க்கப்பட்டு வந்த நான், இந்திய சமூகத்திலேயே எல்லா இன்பங்களும் சுகங்களும் அடைந்து, வயது காலத்தில் பரநியாசம் பெற்றுக் காலத்தைக் கழிப்பேன்; அறிவிலா இந்தியன் எனது சகோதரன், எளிய இந்தியன், பிராமண இந்தியன், புண்ய இந்தியன் எனது சகோதரன். நாம் எல்லோரும் பாரதத்தாயின் புத்திரர்கள். சர்வலோக சரண்ய! எனக்கு ஆண்மை கொடு, நான் புருஷத்வம் அடையட்டும், என்னை ஓர் உண்மை மனிதனைச் செய்" என்று கதறும்படி சாரணர்களிடம் உணர்ச்சி ஏற்படும்படி அகில இந்திய வாலிபரியக்கம் செய்ய வேண்டும். இந்திய ஊழியர் சங்கம் ஸ்தாபித்தபோது, காலம் சென்ற கோபால கிருஷ்ண கோகலே சொன்னார்: "ஊக்கமுள்ள தேசாபிமானிக்கு ஏராளமான வேலையிருந்துகொண்டு வருகிறது. எந்த விஷயத்தை எடுத்துப் பரிசீலனை செய்தாலும், செய்யவேண்டிய வேலைதான் கண்ணில் புலப்படுகிறது. ஒரே ஒரு ஒலிதான் கேட்கிறோம். உண்மையுடனும் சிரத்தையுடனும் வேலை செய்கிறவர்களைக் காணோம். தாழ்த்தப்பட்டவர்கள் முன்னேற்றம், சகல மக்களுக்கும் ஆரம்பக் கல்வி, கூட்டுறவு விஸ்தரிப்பு, குடியானவர்களின் பொருளாதார நிலைமையின் அபிவிருத்தி, ஸ்திரீகளுக்குத் தகுந்த உயர்தரக் கல்வி, கைத்தொழில் கல்வி பரப்பு, ஜாதி ஒற்றுமை - ஆகியவை நாம் செய்ய வேண்டிய வேலைகளில் சில; இவைகளில் ஒவ்வொன்றும் கணக்கற்ற உழைப்பாளிகளை நாடுகிறது." ஸ்ரீமான் கோகலே அப்போது சொல்லியது இப்போதும் நமது நாட்டின் நிலைமையில் பொருந்தும். மகாத்மா காந்தியடிகள் அவரது வாழ் நாட்கள் எல்லாம் பாடுபட்டும் அவரது நிர்மாணத் திட்டங்கள் பூர்த்தி பெறாமலே இருப்பதைக் கண்டு விசனமடை-

# ஜி ஜா பா ய்

[திவான்பகதூர் கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரிகள்]

## மூன்றுவது அங்கம்

### காட்சி - 1

(சிவாஜியும் ஜிஜாபாயும் பிரவேசிக்கிறார்கள்)

சிவாஜி : அம்மா! பெருஞ் சங்கடங்கள் அலைகள்போல் வந்து மோதிக் கொண்டே இருகின்றன. ஆனால் வெகு சீக்கிரமாக விலகிப் போகின்றன. ராயகாட் கோட்டையைக் கட்டினேன். பீஜப்பூர் பயம்நீங்கிவிட்டது. ஆனால் மொகலாய தர்பார் பயம் பெரிதாக இருக்கின்றது. இது தவிர, இங்கிலீஷ்காரர்கள் மற்ற போர்ச்சுகீஸ் பிரெஞ்சு முதலிய மேனுட்டுப் படைகளை வென்று பெருமையடைந்து வருகிறார்கள். அவர்களே முடிவில் தேசத்தை முழுவதும் ஆளும்படி ஏற்படுமோ என்று தோன்றுகின்றது.

ஜிஜாபாய்: அவையெல்லாம் வருங்கால சம்பவங்கள். அப்படி ஏற்பட்டாலும் பாரத தேசத்தின் நன்மைக்காகவே ஏற்படும். முடிவில், நாட்டின் சுதந்திரம் ஸ்திரமாகும். நீ தற்காலச் சிக்கல்களைத் தீர்த்தால் போதாதா?

சி: உண்மைதான், அம்மா. ஒரு வேடிக்கை கேட்டீர்களா? ராயகாட் கோட்டையிலிருந்து யாவராலும் கோட்டை வாசல் வழி தவிர வேறு வழியாக வரப்போக முடியாது என்று எனக்குக் கர்வம். ஆனல் நேற்றைய இரவு ஓர் ஆச்சர்யம் நடந்தது. பால் விற்கும் பாவை ஹீரகாளீ வெளிக் கிராமத்தில் உள்ளவள். அவள் திரும்பும் பொழுது கோட்டைக் கதவு மூடியாய்விட்டது. தன் வீட்டில் சிறு குழந்தையை விட்டு வந்திருந்தாள். அவள் அக்குழந்தையுடன் இருப்பதற்காக ஒருவரும் ஏறி இறங்க முடியாது என்று நான் நினைத்த சுவர் வழியாக இறங்கி ஊர் போய்ச் சேர்ந்தாள். அங்கே உடனே ஒரு பாதுகாப்புக் கோபுரத்தைக் கட்டி அதற்கு ஹீரகாளி கோபுரம் என்று பெயர் வைத்தேன்.

ஜி: எதுவும் அசாத்தியம் என்றுவது எந்த விஷயத்திலும் நம்முடைய புத்தி சாதுர்யமே போதும் என்றுவது நினைத்து அகம்பாவத்துடன் கவனக் குறைவாக இராதே.

சி: அது இருக்கட்டும் அம்மா. டில்லி பாச்சா அவுரங்கஸீப் தன் மாமன் ஷெயிஸ்டகானைப் பெரும் படையுடன் என்னைத் தண்டிக்க அனுப்பினன். அது நெருங்கியவுடன் நான் புண்ய பட்டணத்தை விட்டு வெளியேற நேரிட்டது. தாதாஜி அவ்வூரில் நமக்காகக் கட்டின ரங்கமகால் அரண்மனையில் ஷெயிஸ்டகான் தங்கினன். என்னைக் குரங்கைப் போல் பயங்கொள்ளி என்று கூறி ஒரு செய்யுளின் பாதியை எனக்கு அனுப்பினர். நான் அக் குரங்கால் லங்காதகனம் ஏற்பட்டது என்று எழுதி அச்செய்யுளை பூரணம் செய்து அனுப்பினேன்.

ஜி: வெகு நன்றுகச் செய்தாய்.

சி: அம்மா! ஒரு தவறு செய்தேன். அதிலிருந்து தேவி தான் காப்பாற்றினள்.

ஜி:—என்ன தவறு?

சி: துகாராம் சாதுவின் அபங்க பஜனை நம்முடைய நாட்டைக் கோட்டை

---

கிறார், மறுபடியும் நிர்மாண வேலையில் ஊக்கம் கிளப்ப ஆரம்பித்திருக்கிறார். நமது தேசிய லட்சியங்களைப் பூர்த்தி செய்யும் வகையில்தான், அகில இந்திய வாலிப சாரணரியக்கம் பிற்காலத்தில் வேலை செய்யவேண்டும். அதற்காக இந்திய சாரணத் தலைவர்கள் சாரணர்களுக்கு வழிகாட்டி உழைப்பார்களாக!

---

குறிப்பு :—சென்ற நவம்பர் மாதம் பிரசுரமான 'ஜிஜாபாய்' தொடர்ச்சி.

போல் சுற்றி வளைத்துக் காத்து வருகின்றது. அதைக் கேட்க, நான், புண்ணிய நகரத்தில் எதிரி இருந்தாலும், மாறுவேஷம் பூண்டு தைர்யமாகச் சென்றேன்.

ஜி: அப்பா! இப்படிப் புலிவாயிலே தலையை விடலாமா?

சி: தவறுதான். எதிரிகள் அந்தக் கோயிலைச் சூழ்ந்து கொண்டார்கள். ஆனால் உடனே போய் விட்டார்கள். நான் கேள்விப்பட்டது வெகு விந்தை. என்னைப்போல் ஓர் உருவம் வெளியே ஓடியதாகவும் அதைத் துரத்திக்கொண்டு அவர்கள் ஓடியதாகவும் அது திடீரென்று மறைந்ததாகவும் வதந்தி.

ஜி: அப்பா! தேவிதான் உன்னை ரக்ஷித்தாள். இனி இப்படி மூட வீரமாக நடக்காதே.

சி: இல்லை, அம்மா! பிறகு ஒரு மணஊர்வலத்தைத் தயாரித்து அந்த வேஷத்துடன் என் வீரப் படைகளை நகரத்திற்குள்ளே கொண்டு போய் ரங்கமகாலுக்குள் நள்ளிரவிலே சென்று தாக்கினேம். ஷெயிஸ்டகான் கட்டைவிரல் அறுபட்டு விழுந்தது. அவர் ஓடி ஒளித்தார். அவர் படைகளும் முறியடிக்கப்பட்டு ஓடி ஒளித்தன. புண்ணிய நகரம் விடுதலை அடைந்தது.

ஜி: என் மனம் இப்பொழுதுதான் சாந்தி அடைந்தது

சி: இதெல்லாம் என்ன பயன்? டில்லி பாச்சா என்மீது அவர் மகன் மூஆஸாம், ரஜபுத்ர வீரன் ஜெயசிங் இருவர்களுடைய தலைமையின்கீழ் மிகப் பெரும் படையை அனுப்பி இருக்கிறார். நான் சூரட் நகரத்தில் உள்ள இங்கிலீஷ் வியாபாரிகள் வியாபார ஸ்தலங்களைக் கொள்ளை அடித்ததால் அவருக்கு என் மீது கடுங் கோபம். இங்கிலீஷ் கப்பற் படைகள் மாதிரி நானும் ஒரு பெரிய கப்பற் படையைத் தயாரித்தேன். ஆனால் அவர்களுடைய கப்பற் படை மிகப் பலம். அதுதான் அவர்களுக்கு உலகை யாளும் வெற்றியை அளிக்கும் என்று எனக்குத் தோன்றுகிறது.

ஜி: நம்முடைய நாட்டிலும் கப்பற் படை மட்டுமன்று,ஆகாய விமானப் படைகளும் ஏற்படும் என்று என் மனதில் தோன்றுகின்றது. அதற்கெல்லாம் உன் முயற்சிதான் அஸ்திவாரம்.

சி: இப்பொழுது மகா வீரர் ஜெயசிங்கின் படை நெருங்கிவிட்டதே. அதை எதிர்க்க நம்மால் முடியாது. நான் கட்டிய மலைக் கோட்டைகளும் மனக் கோட்டைகளும் எல்லாம் உடைந்து போய்விடுமோ?

ஜி: பயப்படாதே. நாமிருவரும் பவானி தேவியை வணங்கி, துதித்துத் தியானிப்போம், வா.

(இருவர்களும் போகிறார்கள்).

## காட்சி - 2

(ஜிஜாபாய் துன்பக் குறியுள்ள முகத்துடன் வருகிறாள்).

ஜி: தேவி! பவானி! உன் கருணை எங்களை விட்டு நீங்கி விட்டதா? என் மகன்புரந்தர் கோட்டையைப்பறிகொடுத்தான். அவனுடைய மற்ற 23 கோட்டைகளையும் மொகல் தர்பாருக்குக் கொடுப்பதாக ஒப்புக்கொண்டானும். மொகல் படையிலே தளகர்த்தனாகி விட்டானும். டில்லி பாச்சாவின் உத்தரவின்படி பாச்சாவின் தர்பாருக்குப் போனபொழுது அவ்விடத்தில் கைதி செய்யப்பட்டானும். இனி விமோசனமுண்டா? அவன் விடுதலை யடையாவிட்டால்,நான் உயிர் தரிக்க மாட்டேன். தேவி! உன் திருவுளம் எப்படியோ?

(தேம்பித் தேம்பி அழுகிறாள்).

(ஒரு சாது வருகிறார்).

சாது: ஏனம்மா இப்படி வருந்துகிறீர்கள்? என்னை அடையாளம் தெரியவில்லையா? (காலில் விழுகிறான்).

ஜி: உற்று நோக்கி, அப்பா! சிவா! நீ பிழைத்து வந்தாயா? உன் தாயின் வயிற்றில் பால் வார்த்தாயா? உன் நாட்டுக்கு நல்ல நாள் பிறந்ததா? (என்று அவனை எடுத்து ஆசி கூறுகின்றாள்).

சி: தேவி பவானி அருளாலும் உன் ஆசியாலும் பிழைத்தேன். ஜயசிங் மகன்

ராம்சிங் என்னை டில்லிக்கு அழைத்துச் சென்றான். என்னை மன்னித்துக் கௌரவிப்பதாக பாச்சாவும் வாக்களித்தார். உலகத்தின் திவ்ய ரத்னமான டாஜ் மகாலைப் பார்த்தேன். ஆனால் தர்பார் காலத்தில் என்னைத் தாழ்ந்த உத்தியோகஸ்தர்கள் ஸ்தானத்தில் இருக்கச் சொன்னார்கள். நான் முறியடித்த ஒரு சிற்றரசன் பின்னால் நான் இருக்கும்படி நேர்ந்தது. என் சினத்தை ஒளிக்காமல் உரைத்தேன். பாச்சாவின் துலாபாரம் நடந்தது. பிறகு என்னைச் சிறையில் வைத்தார்கள். அம்மா! தேவி கருணையால் ஒரு தந்திரம் என் மனதில் தோன்றியது. நான் நோய்வாய்ப்பட்டவனாக நடித்தேன். எனக்கு மருந்துகளும் கனிகளும் பக்ஷணங்களும் பெருங் கூடைகளில் நண்பர்கள் அனுப்பினார்கள். கூடைகள் வெளியே கொண்டுபோகப்படும்பொழுது என் நண்பன் ஹீராவை எனக்குப் பதிலாக இருக்கச் செய்து நான் ஒரு கூடையிலும் என் மகன் சாம்பாஜி மற்றொரு கூடையிலும் ஒளிந்து கொண்டோம். வெளிவந்த பிறகு என்னை அன்றிரவு கொல்ல உத்தரவு செய்யப்பட்டது என்றறிந்தேன். யமுனையைத் தாண்டி மதுரையை யடைந்தேன். சன்யாசி வேஷம் பூண்டு கிருஷ்ண தரிசனம் செய்தேன். பிறகு கிழக்கே சென்றேன். வேவுகாரர்கள் என்னைத் தெற்கே போகும் வழிகளில் தேடிச் சென்றார்கள். நான் இந்த வேஷத்துடன் பகலில் ஒளித்து இரவிலேயே வழி நடந்து வந்து சேர்ந்தேன். டானாஜிதான் எனக்குத் துணை. சாம்பாஜியை மதுரையில் காசிபட்டர் என்ற அந்தணர் வீட்டில் ஒளிந்திருக்கச் சொன்னேன். அவர்கள் இன்னும் வரவில்லை.

(ஓர் அந்தணரும் சாம்பாஜியும் வருகின்றார்கள்).

சி: இதோ அவர்கள் வருகின்றார்கள்.

காசிபட்டர்: அரசே! கிருஷ்ணன் எங்களைக் காப்பாற்றினார். உஜ்ஜனியில் ஒரு மொகல் உத்தியோகஸ்தர் சாம்பாஜி அந்தண குமாரன் அல்லன் என்று நினைத்து என்னை வினவினார். நான் "என் மகன்" என்றுரைத்தேன். அப்படியானால் இருவரும் ஒரு தட்டில் உண்ணுங்கள்" என்றான். அப்படியே உண்டோம். தப்பிப் பிழைத்து வந்து சேர்ந்தோம்.

ஜி: அய்யா! உங்கள் ஆசியால் என் குடும்பத்தின் உயிர் வாழ்வு பெற்றது. நான் வணங்குகிறேன்.

(வணங்குகிறான்).

(யாவரும் போகிறார்கள்).

## காட்சி - 3

(ஜிஜாபாயும் சிவாஜியும் சதுரங்கம் ஆடுகிறார்கள்).

சி: அம்மா! உண்மையான சதுரங்க ஆட்டத்தில் நான் வெற்றி யடைந்தாலும் இந்தச் சதுரங்கத்தில் உன்னை ஜெயிக்க முடியவில்லை.

ஜி: நான் வெற்றி யடைந்ததற்காக என்ன பந்தயம் கொடுக்கப் போகிறாய்?

சி: எது வேண்டுமானாலும் கேள்.

ஜி: நீ மொகல் தர்பாருடன் செய்து கொண்ட சமாதானத்தில் உன் கோட்டைகளைத் திரும்பிப் பெற்ற பொழுது புரந்தர் கோட்டையையும் சிங்ககாட் கோட்டையையும் அவர்கள் வைத்துக் கொண்டார்கள். எனக்கு சிங்ககாட் கோட்டைத் திறவுகோல் மாலைப் பொழுதுக்குள் பந்தயமாகக் கிடைக்க வேணும்.

சி: அம்மா! டானாஜி ஒருவன்தான் இந்த வீரத் தொண்டைச் செய்யமுடியும். அவனை வரச் சொல்லுகிறேன்.

(சேவகனைக் கூப்பிட்டு டானாஜியை அழைத்து வர உத்தரவு செய்கிறான். டானாஜி வருகிறான்).

டானாஜி: அரசே! தாயே! வந்தனம்.

சி: டானாஜி! அம்மாவுக்கு ஒரு விருப்பம்.

டானாஜி: என்ன, தாயே?

ஜி: இன்று இரவுக்குமுன் சிங்ககாட் கோட்டைத் திறவுகோல் எனக்கு வேணும்.

(தீபத்தை அவன்முன் ஆரத்தியாகக் காட்டி ஆசி கூறுகிறாள்).

டா: இதுதானா, தாயே! தங்கள் விருப்பத்தை முடித்துவைக்கிறேன்.

(எல்லோரும் போகின்றார்கள்).

### காட்சி 4

(ஜிஜாபாயும் சிவாஜியும் வருகிறார்கள்).

சி : அம்மா ! சிங்கக்கோட்டையை அடைந்தேன். சிங்கத்தை இழந்தேன்.

ஜி : சிவ ! என்ன நேர்ந்தது.

சி : டாணாஜியும் அவனுடன் சென்ற வீரர்களும் கோட்டை மதில்மீதேறி எதிரிப்படைகளை முறியடித்துக் கோட்டையைப் பிடித்துக் கொண்டார்கள். ஆனால் அந்தக் கடும்போரில் அவன் உயிர் துறந்தான். அவனைப் போன்ற வீரன் வேறு ஒருவனும் இல்லை.

ஜி : க்ஷத்ரியர்களுக்குப் போர் முனையில் புகழுடன் இறப்பதுதான் பெருமை; கிருஷ்ணபரமாத்மாவின் உபதேசத்தை மறவாதே.

சி : அம்மா ! என் துயரம் நீங்கிவிட்டது. டாணாஜி வீரசுவர்க்கத்தில் இருப்பது நிச்சயம்.

## நான்காவது அங்கம்

### காட்சி 1

(ஜிஜாபாயும் சிவாஜியும் வருகிறார்கள்)

ஜி : இப்பொழுதுதான் என் மனம் பூர்ணானந்தத்தை அடைந்தது. டாணாஜி தம்பி சூர்யாஜி புரந்தர் கோட்டையைப் பிடித்தான். மொகல் படைகள் எல்லாம் தக்ஷிணதேசத்தை விட்டு வடக்கே வெளியேறிவிட்டன. வடதேசப் பட்டணங்களும் கிராமங்களும்கூட உன் வசமாகி வருகின்றன. நீ மறுபடியும் சூரட் நகரத்தை வெற்றிகரமாகத் தாக்கினாய். அவுரங்கஸீப் அனுப்பிய பெரிய தளகர்த்தர்களையும் பெரும்படைகளையும் முறியடித்தாய். பீஜப்பூர் கோல்குண்டா சுல்தான்கள் உனக்குக் கப்பம் கட்டுகிறார்கள். உன்னைப் பாரததேச சக்ரவர்த்தியாகப் பட்டாபிஷேகம் செய்து பார்த்துக் கண்குளிரவேணும் என்று என் பேரவா.

சி : அம்மா ! நீ சொன்னது எனக்கு வேத வாக்யம். அப்படியே செய்கிறேன். வேண்டிய ஏற்பாடுகள் எல்லாம் செய்துவிட்டேன். ஒரு வாரமாக ஹோமங்கள் நடந்து முடிந்துவிட்டன. நாளையதினம் பவானிதேவி அருளாலும் உன் ஆசியாலும் எனக்குப் பட்டாபிஷேகம் நடைபெறும். (போகிறார்கள்)

### காட்சி - 2

(ராயகாட் கோட்டையில் சிவாஜியின் பட்டாபிஷேகம். வெண்ணிறமுள்ள பட்டுத் துணிகளை உடுத்துக் கிரீடம் மாலைகளுடன் சிவாஜியும் அவனுடைய ராணி சாயிரா தேவியும் வருகிறார்கள். அவர்களுக்குப்பின் ஜிஜாபாயும் சாம்பாஜியும், அவர்களுக்குப்பின் எட்டு மந்திரிகளும் வருகிறார்கள். சிவாஜியும் அவன் ராணியும் சிங்காசனத்தில் அமர்ந்தவுடன் வெடி குண்டுகள் அந்தப் பரம சந்தோஷச்செய்தியை நாடெங்கும் அறிவிக்கின்றன. பிராஹ்மணச் ஸ்திரீகள் தீபங்களை ஆரத்தி எடுத்துச் சுற்றுகிறார்கள். கங்கா பட்டர் தங்கக் கொடையை சிவாஜி தலையின் மேல் பிடிக்கிறார். சிவாஜியின் உத்தரவு விளம்பரப்படுத்தப் படுகின்றது).

“ இந்தப் புண்ணியமான பாரத தேசம் ஒன்றுபட்டு ஒரு குடையின்கீழ் ஆளப்பட வேண்டும் என்று என்னுடைய விருப்பம். அதை பவானி தேவி முடித்து வைத்தாள். என்னுடைய வீரக்கொடி இந்தப் பாரத நாடு முழுவதும் பறக்கின்றது. இந்த நாட்டில் எல்லா மக்களும் அவரவர்களுடைய மதாசாரங்களின் படி வாழலாம். விவசாயம் கைத்தொழில்கள் வியாபாரம் தடையின்றி நன்கு நடைபெற, பெரும் முயற்சி செய்ய என் உத்தேசம். யாவரும் சுதந்திரமாக வாழ்ந்து நாட்டின் சுதந்திரத்தை நன்கு பாதுகாக்க வேணும்.”

(சங்கீதக் கச்சேரி, நாட்டியக் கச்சேரி).

சேவகன் : ஆங்கிலக் கம்பெனி பிரதிநிதிகள் மகாராஜாவின் தரிசனத்திற்கு வந்திருக்கிறார்கள்.

சி : வரச் சொல்.

(அவர்கள் பிரவேசிக்கின்றார்கள்).

ஆங்கிலப் பிரதிநிதிகள் : பாரத தேசச் சக்கரவர்த்தி அவர்களுக்கு வந்தனம். எங்கள் கம்பெனிக்கு உங்கள் ராஜ்யத்தில் வியாபாரம் தடங்கலின்றி நடக்க அனுமதிக்கக் கோருகிறோம்.

சி: உங்களிடம் ஓர் ஆச்சரியத்தைக் கூற விரும்புகிறேன். பட்டாபிஷேகத்திற்குமுன் நான் பிரதாபகட் கோட்டையில் தேவி சன்னிதியில் தவமிருந்த பொழுது என் சுய உணர்ச்சியை இழந்து ஆவேசமடைந்தேன். என் அகக்கண் முன் பாரத தேசத்தில் மொகல் ராஜ்ய அழிவும் என் ராஜ்ய நிலையும் தோன்றிற்று. டில்லியில் என் கொடி பறந்தது. வெகு காலத்திற்குப் பிறகு ஆங்கிலேய ராஜ்ய ஸ்தாபனத்தையும் அகக் கண்ணுல் கண்டேன். அவர்கள் ஆட்சியில் பாரத தேசம் முழுவதும் ஒன்றுபட்டுப் பூர்ண சுதந்திரம் அடையும் என்றும் கண்டேன். ஆகையால் உங்கள் கோரிக்கைப் படிச் செய்யச் சித்தமாக இருக்கிறேன்.

(யாவரும் போகின்ருர்கள்).

காட்சி 3

(ஜிஜாபாய் நோயால் படுத்திருக்கின்ருள்; சிவாஜி வருகின்ருர்; தாயின் அடிகளில் பணிகின்ருர்).

ஜி: சிவ! உன்னை பாரததேச சக்ரவர்த்தியாகக் காணும் பெரும் மகிழ்ச்சி எனக்குக் கிடைத்தது. உன் காவிக் கொடி காசிமுதல் கன்யாகுமரிவரையில் பறந்துகொண்டிருக்கின்றது. கௌஸல்யாதேவி அடைந்த பாக்கியம் எனக்கும் கிடைத்தது. எனக்கு வெகு பலஹீனம். நோய் வெகு கடுமை. நேற்றிரவு பவானிதேவி கனவிலே தோன்றி என்னைத் தன்னிடம் வரும்படி சொன்ளுள். உன்னை விட்டு நீங்க மனம் இல்லை. ஆனுல் நான் பரலோகம் போக வேணும். அங்கே உன் வீரத்தையும் வெற்றிகளையும் பெருமைகளையும் பவானிதேவி அடி நிழலில் இருந்து கொண்டு கண்டு களிப்பேன்.

சி: தாயே! உங்களை விட்டுப் பிரிய மனம் வரவில்லை. தேவி உங்களை என்னுடன் வெகு காலம் வைத்திருக்கக் கூடாதா? என் பட்டாபிஷேகம் ஆய், சில தினங்கள் தானே ஆயின.


## பிணியாளர்களுக்கோர் தேறுதல்

மேல் நாட்டு மருந்துகளாலும் ஏனைய நம் நாட்டு மருந்துகளாலும் குணமடையாதிருக்கும் "குஷ்டம்" "படை" "மேகப்பற்று" முதலான சரும வியாதிகளுக்கு எமது

# கந்தகராஜரஸாயனம்

உறுதியான பலனைக் கொடுக்கிறது

பவுண்டு விலை ரூ. 60—0—0

வாத வியாதி, மாதவிடாய் சம்பந்தமான கோளாறுகள், முதலான எவ்வித நோய்களையும் எமது மூலிகைகளால் செய்யப்பட்ட ஔடதங்கள் கண்டிக்கின்றன.

முழு விபரங்களுக்கு

அடியிற்கண்ட விலாசத்துக்கு எழுதுங்கள்:

மானேஜர்:

ஆர்ய வைத்தியசாலை,

கோட்டைக்கல், தென் மலையாளம்.

ஜி : எனக்கு மூப்பினாலும் நோயாலும் பெருந்துயரம். பவானிதேவியிடம் போக மனக்களிப்புடன் எனக்கு அனுமதி கொடு.

சி : தேவியின் அருள் எப்படியோ அப்படியே நடக்கும்.

ஜி : சிவ ! என் மனக்கண் முன் உனக்கு வரும் பெருமைகள் தோன்றுகின்றன. நீ தெற்கே சென்று புண்ணிய ஸ்தலங்கள் நிறைந்த மூவேந்தர்கள் நாடுகளை அடைந்து ஆளப்போகிறாய். ஆனால் நான் போன பிறகு உனக்குக் குடும்ப சுகம் குறையும். என்ன குறைவு ஏற்பட்டாலும் நீ உறுதியையும் வீரத்தையும் கைவிடாதே. மன்னர்களும் உலகை நீத்துப்போகும் தருணம் வரும். தேவியை எப்பொழுதும் வணங்கித் துதி செய். அவள் நம்மைக் காத்துச் சேர்த்துவைப்பாள்.

(ஜிஜாபாய் இறக்கிறாள். சிவாஜி மூர்ச்சையாக விழுகிறார்)

## ஐந்தாவது அங்கம்

### காட்சி - 1

(ஜிஜாபாய் இருந்த அறையில் தேவி சன்னிதியில் அவளுடைய பிம்பம் ஒரு மணையில் உட்கார்ந்து பவானி தேவியை பூஜை செய்வது போல் அமைக்கப்பட்டிருக்கின்றது).

சி : அம்மா ! நீ உயிருடன்தான் இருக்கிறாய். நீ இறந்ததாக எனக்குத் தோன்றவில்லை. என்னிடம் உனக்கு இருக்கும் அளவற்ற அன்பு உன் கண்களில் மிளிர்கின்றது. உன் உதடுகள் பேசத் தயாராக இருப்பதாகத் தான் எனக்குத் தோன்றுகின்றது. உன் உத்திரவுப்படி, பெரும் படையுடன் மூவேந்தர் நாடுகளைப் பிடிக்கச் சென்றேன். பீஜப்பூர் கோல்கொண்டா சுல்தான்கள் எனக்குக் கீழ்ப்படிந்தார்கள். ஸ்ரீ சைலத்தில் சிவ சன்னிதியில் அருள் பெற்றேன். எவராலும் பிடிக்க முடியாத ஜிஞ்ஜிக் கோட்டையைப் பிடித்தேன். பாரத பூமியின் வடபாகம் முற்காலத்தில் உன் ஆசியால் என் வசமாயிற்று. இப்பொழுது தென் பாகமும் உன் ஆசியால் என் வசமாகிவிட்டது. டில்லி முதல் தஞ்சை வரையில் என் கொடி பறக்கின்றது. ஆனால், நீ உரைத்ததுபோல், நீ போன பிறகு எனக்குக் குடும்ப சுகமே இல்லை. என் ராணி சாயிராபாய் என் மூத்த ராணி சாய்பாயின் மூத்த மகன் சாம்பாஜியை வெறுக்கின்றாள். அவளுடைய மகன் ராஜாராமனுக்குப் பட்டங் கட்ட முயற்சி செய்கின்றாள். சாம்பாஜியிடம் வீரமாவது பக்தியாவது காணவில்லை. என் மனம் உன்னையே நாடுகின்றது. தேவியின் அருள் எப்படியோ ?

ஆகாயவாணி : சிவா ! உன் மனம் களிக்கத் தேவியைக் கோருகின்றேன். என் மனம் உன்னிடமே அடைக்கலம்.

### காட்சி 2

(அதே அறையில் சிவாஜி நோயால் வருந்திப் படுத்திருக்கின்றார்).

சி : எனக்கு வெகு பலஹீனமாக இருக்கின்றது. அம்மா ? தேவி ! உங்கள் கட்டளையை நிறைவேற்றியாய்விட்டது. நீங்கள் என்னை அழைத்துக் கொள்ளவேணும்.

(பவானி தேவியும் பாரத தேவியும் ஜிஜா தேவியும் வருகின்றார்கள்).

பவானிதேவி : சிவ ! நான் உனக்குக் கொடுத்த உடைவாளைத் திரும்ப வாங்க வந்தேன். நீ சீக்கிரம் என்னிடம் வருவாய். உன்னால் இந்த நாடு விடுதலை அடைந்தது. உன்னால் ஹிந்து மதம் சிறப்பை அடைந்தது.

பாரததேவி :—ராம ராஜ்யத்தைப் போல சிவாஜி ராஜ்யத்தையும் உலகம் எக்காலமும் போற்றும். என் துயரத்தை நீ தீர்த்தாய் ! உன் புகழ் உன் நாட்டிலும் உலகமெங்கும் நித்தியமாக விளங்கும்.

ஜி : சிவ ! கண்மணியே ! நீயும் நானும் இனிப் பிரிவின்றி, இன்பமாக, நித்தியமாக, தேவி சன்னிதியில் வாழ்வோம்.

சி : (மூன்று தேவிகளையும் வணங்கி இறக்கின்றார்).

---

கும்பகோணம் அத்வைத ஸபா பண்டிதராயிருந்த
காலஞ்சென்ற மஹாமஹோபாத்யாய, சாஸ்திர ரத்னகர, மஹோபதேசக,
பிரும்மஸ்ரீ - யக்ஞஸ்வாமி சாஸ்திரிகள் அவர்கள் இயற்றிய

# ஸம்ஸ்கிருத கீர்த்தனை

[ய. மஹாலிங்க சாஸ்திரிகள், எம். ஏ., பி. எல்.]

## கீர்த்தனை 13

ராகம் மோஹனம்] [தாளம் ஆதி

### ஸாஹித்யம்

பல்லவி

சிந்தாம் த்யஜ பஜ பவ பத ஸரஸிஜ
யுகளீம்.

அனுபல்லவி

ஸந்தத பவஜல நிதிமபி கோஷ் பத
மாகலய ஸதா, ஸபலய ஜனனம்.

சரணம்

நிருபம குணதன முனிஜன ஹ்ருதயே
ஜனிரஹி தவச : சிரஸிச நிஹிதாம்
குருவர கருணாம்ருத ரஸ பாஜன
ஸவிநய யக்ஞேச் வரக்ருத விநுதிம்.

### தாத்பர்யம்

ஒப்பற்ற குணங்கள் நிறைந்த முனிவர்களின் ஹ்ருதயத்திலும் அனுதியான உபநிஷத்துகளிலும் நிலைகொண்டதும், உத்தம குருவின் அமிர்தம்போல் பெருகிய அருளுக்குப் பாத்திரனன விநய ஸம்பத்துள்ள யக்ஞேச்வரனுல் ஸ்தோத்திரம் செய்யப்பட்டதுமான ஸ்ரீ பரமேச்வரனின் திருவடித்தாமரை இணையைச் சரணமடைந்து உன் கவலைகளை எல்லாம் விலக்கிக்கொள். இந்த முடிவில்லாத ஸம்ஸாரக் கடல், மாட்டின் குளம்படி போன்றது என்றே மனதில் உறுதி கொள். உன் ஜன்மத்தை ஸபலமாகச் செய்துகொள்.

---

குறிப்பு :—இந்தக் கீர்த்தனையில் அனுபல்லவி சரண சாஹித்யங்களில் ஸ்வல்ப மாறுதல் செய்யப்பட்டிருக்கிறது.—ய, ம,

பல்லவி

ஸரி கப கரி ஸத ஸா ஆ கக பப கக ரிரி ஸரி கப கரி ஸா
இஇஇஇ இஇ இ இந்தா ஆம் த்யஜ பஜ பவ பத ஸரஸிஜ யுக ளீம்

கக தப தப கரி ரிக பக பக ரிஸ
ஷ த்யஜ பஜ பவ பத ஸரஸிஜ யுகளீஇம்

ஸரி கரி கரி ஸத ஸா ஆ ஆ ஆ ஆ ஆ
இஇஇஇ இஇ இஇந் தா ஆம்

அனுபல்லவி

கா பத ஸ்தஸ்ஸ் ஸஸஸத ஸாஸத ஸா ஆ ஆ ஆ
ஸந்தத பவஜல நிதிமபி கோஷ்பதம் ம் ம் ம் ம்

ரிக் ரிஸ தப தப
ஷ ஷ ம்ம்ம்ம் ம்ம்ம்ம்

ரிக் ரிஸ தஸ் தப கததப கப கரி
ஷ ம்ம்ம் ம்ம்ம்ம் ம்ம்ம்ம் ம்ம்ம்ம்

ஸ்ரிக்ரி ஸ்ஸ்ஸா கபதப தபகரி
ஷ மஅகல யஸதா ஸபலய ஜனனஅம்

சரணம்

கககக கககக ரிகபக பபபா பதஸ்த ஸ்ஸ்ஸா பதஸ்த ஸ்ஸ்ஸா
நிருபம குணதன முனிஜன ஹ்ரு ஜனிரஹி தவச : சிரஸிச நிஹிதாம்
தயே

க்க்க்க் க்க்க்ரி ஸ்ரிரிக் ஸாஸ்ஸ் ரிஸ்ஸ்த ஸ்ததப கபதப தபகரி
குருவர கருணுஆ ம்ருதரஸ பாஜன ஸவிநய யஅக் ச்வரக்ருத விநுதிஇ ॥
ளேவ

---




ஸன்லைட் சோப் காய்ச்சும் மற்றொருவன் சொல்லுகிறான் . . .

"'சுயசக்தி'யே சுயமாக வெளுக்கும் நுரையின் இரகசியம். இந்த சக்திதான் ஆடைகளி லிருந்து தானாகவே அழுக்கைப் போக்க உதவுகிறது. சுய சக்தி வாய்ந்த சோப்பானது அழுக்கைத் தொட்டவுடன் அதைப் பற்றிக் கொள்ளுகிறது. ஆடைகளை ஸன்லைட் சோப்பின் நுரையில் நனைத்துப் பிறகு தண்ணீரில் அலசினவுடன் நுரையோடு அழுக்கும் போய்விடுகிறது."




ஸன்லைட் சோப்
சுயமாக வெளுக்கும் நுரை உடையது

ஒரு லீவர் பிரதர்ஸ் தயாரிப்பு

S. 66-33 TM

# ஒன்று நூறாகப் பண்ணு

[ஏ. டி. கிருஷ்ணமாச்சாரி, பி. ஏ., பி. எல்.]

முதல் வைத்து வியாபாரம் பண்ணுகிறவர்கள், ரூபாய்க்கு ஒரு அணு கிடைத்தால் பெரிதாய் நினைக்கிறார்கள். நாலணு கிடைத்து விட்டதென்றால், அவர்கள் 'கொள்ளை லாபம்' அடிக்கிறார்கள் என்று மற்றவர்கள் சொல்லுகிறார்கள். ஒன்று பத்தாகவும் உருவு பதினறாகவும் ஆய்விட்டதென்றால் என்னதான் சொல்லுவார்களோ? ஆனால் ஒன்று நூறாகப் பண்ணுகிறவர்களை யாரும் ஒன்றும் சொல்லுகிறதில்லை.

குடியானவனைப் பாருங்கள். அவன் வயலை உழுது எருவிட்டு ஒரு மரக்கால் விதையை விதைக்கிறான். அது முளைத்து, வளர்ந்து, கதிர் வாங்கி, விளைந்ததென்றால் நூறு மரக்கால் தானியமும் ஒரு போர் வைக்கோலும் ஆகிறது. இதைத்தான் "ஒன்று நூறாகப் பலன் தந்தது" என்கிறோம். (சுவிசேஷங்களைப் படித்த கிறிஸ்தவ நண்பர்களுக்கு இந்த வசனம் நினைவிலிருக்கும்.) இது விவசாயத்தில் மட்டும் தான் என்று எண்ணிவிடவேண்டாம்.

பொறுமையாயும் ஊக்கமாயும் முயற்சி செய்தால் எந்தக் காரியத்திலும் ஒன்று நூறாகப் பண்ணலாம். இத்தனை என்னத்திற்கு? மாசம் ஒரு ரூபாய் சேர்த்து வைக்கிறது என்று ஒரு தீர்மானம் பண்ணிக்கொண்டு, ஏழு வருஷம் விடாமல் மாசாமாசம் ஒரு ரூபாய் சேர்த்துக்கொண்டே வந்தால் ஏழாம் வருஷக் கடைசியில் நூறு ரூபாய் ஆய்விடுகிறது!

இந்தச் சுலபமான வழியை எல்லாரும் பின்பற்றுவதற்குத் தகுந்த உதவி அளிப்பது மயிலை இந்து சாசுவதநிதி. இதில் மாசம் மாசம் ஒரு ரூபாய் கட்டிக்கொண்டு வந்தால் ஏழு வருஷம் முடிந்ததும் நூறு ரூபாயாகக் கொடுக்கிறார்கள். இந்தச் சிக்கனமுறையைக் கைக்கொண்டு ஆயிரக்கணக்கான பேர் ஆயிரம் ஆயிரமாகச் சேர்த்து இச்சென்னையில் வீடு வாசல் சம்பாதித்துக்கொண்டு வாழ்ந்து வருகிறார்கள்.

இந்த நிதிதான் நம் இந்தியாவிலேயே முதல் முதல் ஏற்பட்ட ஸ்தாபனம். இதை மயிலையில் வக்கீலாயிருந்த R. பாலாஜி ராவ் அவர்களும் அர்பத்நட் ஹவுஸ் துபாஷ் ஆக இருந்த பெத்து நாய்க்கன் பேட்டை ஸி. வி. அய்யாசாமி முதலியார் அவர்களும் 1872ஹு ஜனவரி மாதம் 27உ மயிலாப்பூரில் ஆரம்பித்தார்கள். ஆதியில் சம்பளச் சிப்பந்தி இல்லாமலே இவ்விரு புண்ணிய புருஷர்களே நிதியின் நிருவாகத்தை நடத்தினார்கள். நாளாவட்டத்தில் நிதி வளர்ந்து, பல்கிப் பெருத்துப் பலப்படவே கபாலீசுரர் வடக்கு மாடவீதியிலுள்ள ஒரு வீட்டில் வாடகைக்கு இடம் அமைத்து அதில் சம்பளச் சிப்பந்திகளைக்கொண்டு வேலை செய்துவந்தார்கள். கொஞ்ச நாள் கபாலீசுரர் கிழண்டை மாடவீதியிலும் நிதி இருந்தது. இருபத்தைந்து பிராயம் ஆனதும் 1897-ம் வருஷம் கபாலீசுரர் தெற்கு மாடவீதியில் இப்போதுள்ள 21 கதவிலக்கமுள்ள வீட்டை வாடகைக்கு எடுத்து அதில் நிதியை நடத்தலானார்கள். ஐந்து வருஷத்துக் கெல்லாம் அந்த வீட்டையே விலைக்கு வாங்கிவிட்டார்கள். அதற்கும் இருபத்தைந்து வருஷம் கழித்து அதன் பக்கத்து வீட்டையும் நிதியின் காரியாலயத்துக்காக வாங்கிக்கொண்டார்கள்.

இவ்வீடுகள் ஒவ்வொன்றையும் அவ்வாறாயிரம் ரூபாய்க்கு வாங்கினார்கள். இன்றைய தேதியில் இக்கட்டடங்கள் ஒவ்வொன்றும் ஐம்பது ஐம்பது ஆயிரம் ரூபாய் பெறும் என்று சொல்லலாம். இவை தவிர இந்நிதியில் ஈடுகாட்டி அட

மானம் வைத்துப் பணம் வாங்கியிருக்கிற வீடுகள் இச்சென்னை நகரில் அநேகம். நிதியின் சட்ட திட்டங்களில் கடன் கொடுக்கும் அடமான சொத்து நகர எல்லைக்குள் இருக்க வேண்டும் என்கிற நிபந்தனை இருக்கிறது. இது மாத்திரம் இல்லாவிட்டால் வெளியூர்களிலும் வீடுகள் இந்நிதிக்கு அடமானமாக வந்திருக்கும்.

இந்த நிதியைப் பார்த்து இதைப் போல் தாமும் ஏழைகளுக்குப் பரஸ்பர சகாயத்தை ஏற்படுத்த வேண்டும் என்று விரும்பி, இச்சென்னையிலும் வெளியூர்களான மதுரை, தஞ்சாவூர் முதலிய பல நகரங்களிலும் வேறு பல பிரமுகர்கள் நிதிகளை ஏற்படுத்தி, இம்மயிலை ஹிந்து சாசுவதநிதியின் நிர்வாகச் சட்டதிட்டங்களையே பின்பற்றி நடத்தி வருகிறார்கள்.

இந்நிதியின் சந்தாதாரர் இன்றைய தேதியில் 1944ல் பதினாறாயிரத்து இருநூற்றுத் தொண்ணூற்றிரண்டு பேர். இவர்கள் இந்துக்களாயிருக்க வேண்டும் என்கிற விதியைக் கேட்டதும் இந்நிதியில் மகமதியருக்கும் கிறிஸ்தவருக்கும் இடம் இல்லை என்றோ இது ஒரு வகுப்புவாத ஸ்தாபனம் என்றோ முடிவு கட்டிவிடக்கூடாது. இந்நிதியைத் தொடங்கும்போது கடன் வாங்க விரும்புவோர் ஈடு காட்டப் போகிற வீடுகளை நிதியின் நிருவாகிகள் போய்ப் பார்வையிடவும், பாக்கி செலுத்தத் தவறினால் நடவடிக்கை எடுக்கவும், இந்துக்கள் வீடுகளானால் சுலபம் என்றும் முகமதியர் வீடுகளானால் கோஷா முறையாயிருப்பதால் பார்வையிடுதல் சற்றுத் தடைபடும் என்றும், வாரீசு பாத்தியங்கள் வெகு சிக்கலானவை என்றும் கண்டு, அதற்காக இந்துக்களுக்கு மட்டும் என்று வைத்தார்கள். பின்னால் இந்து சட்டத்தைப் பின்பற்றுகிறவர்கள் பிறப்பால் எச் சமூகத்தினராயினும் இந்துக்களே என்று இவ்விதியைத் திருத்தி அமைத்திருக்கிறார்கள். இந்து சட்டத்தைப் பின்பற்றுகிற முஸ்லீம் கிறிஸ்தவ சோதரருக்கும் இடம் உண்டு.

இத்தனை பேரும் இவ்வூர் மட்டுமல்லாமல், இவ்வூரைச் சுற்றியுள்ள பேட்டைகளிலும், இவ்வூரிலிருந்து வெளி மாகாணங்களுக்குச் சென்றிருக்கும் 'மதராஸி'கள் வசிக்கும் பல ஊர்களிலும் கடல் கடந்த பட்டணங்களிலும்கூட இருக்கிறார்கள். வேறெந்த ஸ்தாபனத்துக்கும் சந்தாதார் இத்தனை பரந்த பிரதேசங்களிலிருந்து வருவதாகத் தெரியவில்லை. இப்படியிருந்தும் இந்த நிதிக்குக் கிளைக் காரியாலயம் ஒன்றும் கிடையாது. சந்தாதார் கூட்டங்களும் இதன் கட்டடத்திலேயே நடைபெற வேண்டும்.

நிதியின் முக்கிய நோக்கம் சேமித்து வைப்பது என்கிற நற்பழக்கத்தை வளர்ப்பதுதான். இதற்காக நிதியில் சந்தாதாரராகச் சேருகிறவர்களுக்கு மாசம்மாசம் கட்டுகிற பணத்துக்குரூபாய்க்கு மாசம் வட்டி ஒரு தம்படிக்குக் குறையாமல் கொடுக்கிறார்கள். அவர்கள் கடன் வாங்கினாலும் அதே தம்படி வட்டிக்குக் கடன் கொடுக்கிறார்கள். அப்படி வாங்குகிற கடன் தொகையானது அவர்கள் ஏற்கெனவே நிதியில் கட்டியிருக்கிற தொகைக்கு உள்பட்டிருந்தால் அவர்கள் கையெழுத்தின் பேரிலும், அதைவிட அதிகமாய் வேண்டுமானால் பொன் வெள்ளி நகைகளின் ஈட்டின் பேரிலும் கொடுக்கிறார்கள். அதற்கும் மேம்பட்ட தொகைகள் தேவையானால் சென்னை நகர எல்லைக்குட்பட்ட ஸ்தாவர சொத்துக்களை ஈடு காட்டினால் அடமானத்தின் பேரில் கொடுக்கிறார்கள். மாசம் மாசம் நூற்றுக்கு ஒன்று விழுக்காடு அசலில் செல்லாகும்படி கணக்குப் போட்டு இத்தனை ரூபாய் கட்டுகிறதென்று கடன் கொடுக்கும் போதே நிர்ணயித்து விடுகிறபடியால், எப்படிப்பட்ட கடனும் ஏழு வருஷத்துக்குள் அடைந்துவிடும். எதிர்பாராத சம்பவங்களினால் மாசாமாசம் செலுத்தத் தவறினால் கடன் அடையாது. அப்படிப்பட்ட நிலைமையில் சிலருக்கு மறுபடியும் கடன் கொடுத்து, பழைய கடனைத் தீர்த்துப் புதுப்பித்துக் கொள்ளலாம்.

இந்த நிதியின் உதவியால், (சகாயமான குறைந்த வட்டிக்குக் கடன் கொடுக்கிறபடியால்) ஏழை ஜனங்கள், கல் நெஞ்சர்களாய் வட்டி வாங்குகிற மார்வாடிகள் கையில் சிக்காமல், கடனையும் தீர்த்து விட்டுச் சொத்தையும் மீட்டுக்கொள்ள வழி உண்டாகி யிருக்கிறது. கடன் வாங்காதவர்கள் குருவியானது மூக்கினால் சேர்ப்பதுபோல் கொஞ்சங் கொஞ்சமாய்ச் சேர்த்து ஒன்று நூறாகப் பண்ணிக் கொண்டு நாளாவட்டத்தில் அதைப்போட்டு ஒரு வீடோ வாசலோ தேடிக்கொள்ளவும் சுலபமான வழி உண்டாகி யிருக்கிறது. இந்த எழுபது வருஷமாய் இப்படி நன்மை அடைந்தவர்கள் தொகை கூட்டிப் பார்த்தால் ஒரு கோடிக்குமேல் போகும்.

இந்த மா பெரும் ஸ்தாபனத்தின் நிருவாகம் ஜனநாயக முறையிலேயே நடைபெறுகிறது. இதை ஆரம்பித்த காலத்தில் ஏற்படுத்தப்பட்ட சட்ட திட்டங்களின் பிரகாரம், இந்நிதியைப் பதினாறு பேர் கொண்ட ஒரு நிருவாக சபையார் பரிபாலித்து வருகிறார்கள். அவர்களைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பு முதல் முதல் சந்தாதாரர்களுடையதாய் இருந்தது. சந்தாதாரர் தொகை ஆயிரக்கணக்கில் போனதும், சந்தாதாரர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு எலெக்டொரல் போர்டு என்னும் தேர்தல் சபையார் கையில் அந்த அதிகாரத்தை ஒப்படைத்தார்கள். அநுபவத்தில் அந்த முறையானது ஒரு தனி நபருக்கோ தனிக் கும்பலுக்கோ விசேஷ ஆதிக்கத்தை உண்டாக்கி ஜன நாயக தத்துவத்தின் வேரையே களைந்து விடுவதாயிருந்தது. ஆகவே 1938-ம் வருஷம் அந்த எலெக்டொரல் போர்டு இனி தேவையில்லை என்று மகா சபையார் முடிவுசெய்து அதை எடுத்துவிட்டுப் பதினாறு நிருவாகிகளையும் சந்தாதாரர் கொண்ட மகா சபையே தேர்ந்தெடுக்கும் வழக்கத்தை மறுபடியும் கொண்டுவந்தார்கள்.

இந்த நிருவாகிகள் பதினாறு பேரும் நாலு வருஷம் பதவியில் இருப்பார்கள். வருஷா வருஷம் நாலு ஸ்தானங்கள் காலியாகும். அந்த ஸ்தானங்களுக்குத் தேர்தல் நடைபெறும். பிராம்மணர் பிராம்மணரல்லாதார் என்கிற சண்டைக்கு இடமில்லாமல் இந்நிதியின் நிருவாக சபையில் எட்டு ஸ்தானங்கள் பிராம்மணருக்கும் எட்டு ஸ்தானங்கள் பிராம்மணரல்லாதாருக்கும் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. மற்ற சமூகப் பிரச்னைகளுக்கு இதில் இடமில்லை. தேர்தல் வருஷா வருஷம் ஜுலை மாசம் மகா சபைக் கூட்டத்தில் நடக்கும்.


வருஷா வருஷம் நவம்பர் மாசம் 1உ முதல் புது நிருவாகிகள் பதவி ஏற்பார்கள். அவர்களுக்குள்ளே ஒருவர் தலைவராகவும், ஒருவர் உப தலைவராகவும், இருவர் சட்ட ஆலோசனையாளராகவும், இருவர் இரும்புப் பெட்டிச் சாவிக் காப்பாளராகவும், ஒருவர் கணக்குப் பரிசோதக நிருவாகஸ்தராகவும் தேர்ந்தெடுத்துக் கொள்ளுவார்கள். இந்தப் பதவிகளிலும் கூடப் பிராமணர் முறை இந்த வருஷமானால் பிராம்மணரல்லாதார் முறை மேலே வருஷம் என்று மாறி மாறி வருகிறபடியால் வகுப்பு வாதச் சண்டைக்கு இடமே இல்லாமற் போய் விட்டது. நிருவாகஸ்தர்கள் மாசம் இரண்டுதரம்கூடி நிதியின் நிருவாகத்தை நடத்துகிறார்கள். இதற்காக இவர்கள் பதினாறு பேருக்கும் சேர்த்து வருஷத்துக்கு ஐயாயிரம் ரூபாய் (சன்மானம்) எடுத்



துக்கொள்ளலாம் என்று நிதியின் சட்ட திட்டங்கள் சொல்லுகின்றன.

இவர்களுடைய அதிகாரத்துக்குட் பட்டு நிதியின் வேலைகளைச் செய்து வரும் சிப்பந்திகளின் தொகை எழுபதுக்கு மேலிருக்கிறது. சிப்பந்திகளுக்குச் சம்பளம் வருஷவாரி நாற்பதினாயிரம் ஆகிறது. இந்நிதியை ஏற்படுத்தின வருஷத்தில் இந்நிதியின் வரவு செலவு மொத்தம் இருபத்தேழாயிர ரூபாயாம். இவ்வருஷம் (குறைச்சலென்று பேர் !) ஐம்பத்தேழு லக்ஷம். நிதி ஏற்படுத்தின வருஷம் 49 கை மாற்றுக் கடன்களும், 43 அடமானக் கடன்களும் ஆக இருபத்தோராயிரம் ரூபாய் கடன் கொடுத்தார்கள். இந்த வருஷம் 5,064 ரொக்கக் கடன்களும் 2,216 அடமானக் கடன்களும் ஆக 7,280 கடன்களுக்கு முப்பத்தைந்து லக்ஷம் ரூபாய் வட்டிக்குக் கொடுத்திருக்கிறார்கள். இன்னும் இருபது லக்ஷம் ரூபாய் கைவசம் சும்மா முடங்கிக் கிடக்கிறது.

முன்னே எல்லாம் பணம் கட்டுகிற வரையில் சந்தாதார் என்கிற கௌரவம். ஆனால் 1940ம் வருஷம் இந்த நிதியை இந்தியன் கம்பெனி ஆக்ட்ப்படி பதிவு செய்து சந்தாதாரர் பணம் கட்டினாலும் சரி, கட்டாவிட்டாலும் சரி, பங்குதாராயிருக்க வேண்டுமென்று விதித்தார்கள். அப்படி ஒரு பங்கின் விலை ஒரு ரூபாய் வீதம், ஒரு கோடி பங்குகள் என்று அளவையிட்டிருக்கிறார்கள். இன்னும் இடமிருக்கிறது. எல்லோரும் வாருங்கள். வந்து சேருங்கள். சேர்ந்து ஒரு ஒரு ரூபாயாகப் பல நூறு நூறாகப் பணம் சேர்த்துக்கொண்டு சுகமாய் வாழுங்கள்.



# அபராதம்

[டி. வி. சுவாமிநாதன்]

சக்ரவாகப் பக்ஷி மழைத் துளியை எதிர்பார்ப்பதுபோல் ரஜாக் வெள்ளிக் கிழமையை எதிர்பார்த்துக்கொண்டிருந் தான். அன்று அவனுக்குப் பிறந்த தினம். அவன் வேலை பார்த்துவந்த புகையிலைக் கிடங்கு முதலாளி அவனுக்கு ஒரு கைலி வாங்கித் தரச் சம்மதித் திருந்தார். அவ்வப்போது அவர் 'நாஸ்தா' செய்வதற்காகக் கொடுத்த சில்லறையெல்லாம் வேறு சேர்த்து வைத்திருந்தான் ரஜாக். அப்படி எட்ட ணாச் சேர்ந்திருந்தது.

ரஜாக் தாய் தந்தை, உற்றார் உறவின ரற்ற சிறுவன். ஈசுவர சிருஷ்டியில் அவன் உறவு கொண்டாடக் கூடியவர்கள் யாருமில்லை.

## 2

கடைசியாக வெள்ளிக்கிழமையும் வந் தது. அன்று அவனுக்கு விடுமுறையு மளித்திருந்தார் கடை முதலாளி. ஆகவே காலையில் எழுந்து பல்லைத் தேய்த்த வுடன் அன்றைக்கென விசேஷமாக ஸ்நானம் செய்துவிட்டு, புதுக் கைலியை யணிந்துகொண்டு, ஒரு சொக்காயையும் மாட்டிக்கொண்டு, தலையிற் குல்லாய் சகிதமாய் உல்லாஸமாய் சீட்டியடித்துக் கொண்டே 'நாஸ்தா' செய்வதற்குக் கிளம்பினான் ரஜாக்; சொக்காய்ப் பையில் சில்லறை கிணுகிணுத்தது.

கடைத்தெருவே அன்று அவனுக்குக் கந்தர்வ லோகம்போற் காட்சி யளித் தது. தினம் தன் விதியை நொந்து கொண்டு கடைக்குப் போகும் அவன் இன்று கையை வீசிக்கொண்டு, உள்ளம் உவகையினால் பூரிக்க, 'மலபார் டீ' ஹோட்டலுக்குச் செல்கிறான்? ஆனால் இம்மாதிரி சம்பவம் வருஷத்தில் ஒரு முறைதானே! வாழ்க்கையில் ஒருமுறை கூட இம்மாதிரி எக்களிப்பு வாய்க்கப் பெறாத 'தரித்திர நாராயண'னின் செல்லக் குழந்தைகள் எத்தனை பேரில்லை.

இன்பக் கனவுகள் கண்டுகொண்டே ரஜாக் சென்றுகொண்டிருந்தான்.

திடீரென 'ஐயோ' என்று ஒரு சப் தம் கேட்கச் சுய உணர்வு பெற்றவனாய் ரஜாக் திரும்பிப் பார்த்தான். பழங்கள் தாங்கிச்சென்ற ஒரு முகமதியச் சிறுமி கால் தடுக்கிக் கீழே விழுந்துவிட்டுக் கூக்குரலிட்டுக்கொண்டிருந்தாள். ரஜாக் ஓடிச்சென்று சிதறிப்போன பழங்களைப் பொறுக்கிக் கூடையில் போட்டு அவ ளிடங் கொடுத்தான்.

"உன் பெயர் என்ன?" என்று அவன் வினவினான்.

"நூர் - உன்னிஸா!" என்று தன் கரிய விழிகளை உருட்டிக்கொண்டே அவள் விடையிறுத்தாள்.

"நூர்! ஜாக்கிரதையாகப் போ. எதி ரில் சைக்கிள் வருகிறது" என்றான் ரஜாக், கூடையைத் தலையில் வைத்துக் கொண்டு புறப்பட ஆயத்தஞ் செய்த நூர் - உன்னிஸாவை நோக்கி.

எதிரில் ஒரு சைக்கிள் வந்துகொண் டிருந்தது. ரஜாக் எச்சரித்ததாலே தானோ என்னவோ, நூர் குறி பார்த்து அந்த சைக்கிளில் மோதிக்கொண்டாள்.

காலிற் காயம் அவளுக்கு. ரஜாக் அவளை வாரியெடுத்து மடிமீது கிடத்திக் கொண்டான்.

சைகிளில் வந்தவன் ஒரு ஹிந்து. அதி லும் ஒரு பிராமண்னன். அப்பாவி கிளார்க், வாயில்லாப் பூச்சி. அவன் உடம்பு 'வெடவெட' என்று நடுங்கி யது.

கொஞ்சங் கொஞ்சமாகக் கூட்டம் சேர ஆரம்பித்தது. மோதியவனை

ஹிந்து, மோதப்பட்டவளோ ஒரு முஸ்லிம் சிறுமி. கேட்க வேண்டுமா அதனால் விளையக்கூடிய விபரீத பலா பலன்களை ?

* * *

ரஜாக்கிற்கு அந்தக் கிளார்க்கைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது. ஆகையால் அவன், 'நைலா'கக் கண் ஜாடை காட்டிவிட்டு, "என்னய்யா மரம்போல நிற்கிறாய்? அதோ அந்தக் கடையில் போய் 'சாயா' வாங்கிவா," என்றான். அடி பட்டவளின் மூர்ச்சை தெளிய சாயா வாங்கி வரத் தானே என்று கூட்டத்தினர் வழிவிட்டனர். ஆனால் தலை தப்பியது தம்பிரான் புண்ணியமென்று அந்த மனிதன் சைகிளை வாயுவேக மனோவேகமாக ஓட்டிச் செல்வதைக் கண்டதும் அவர்கள் கோபம் ரஜாக்மேல் திரும்பியது.

இதற்குள் அங்கு ஒரு போலீஸ் ஜவான் வந்துவிட்டான். நடந்தையறிந்ததும் அவன் ரஜாக் கையைப் பிடித்து, "வாப்பா, ஸ்டேஷனுக்கு" என்று இழுத்தான். அப்போது தான் கண்களைத் திறந்த நூர், "இவன் இல்லே" என்று அலறினாள்: அவள் பார்வையில் கலந்திருந்த பயமும் கனிவும் ரஜாக்கிற்கு ஆறுதலளித்தன.

4

மாஜிஸ்டிரேட் முன் கொண்டு நிறுத்தப்பட்டான் ரஜாக். அவன் சிறிதுங் கலங்காது விஷயத்தை விளக்கமாகக் கூறினான். மாஜிஸ்டிரேட் அவனுக்கு எட்டணா அபராதம் விதித்தார்.

நாஸ்தா செய்வதற்காக எஜமானர் கொடுத்த சில்லறை யெல்லாம் சிறுகச் சிறுகச் சேர்த்து வைத்ததன் பலன் அந்த எட்டணா. அந்த எட்டணாவை அன்று 'மஜா'வாகச் செலவிடுவதற்காக அவன் போட்டிருந்த திட்டங்கள் எண்ணிறந்தன. சினிமாவிற்குப் போகவில்லை. ஹூம்! நாஸ்தாக்கூடச் செய்யவில்லை.

கற்பனை என்னும் அஸ்திவாரத்தின் மீது இன்ப மாளிகையை யெழுப்பி அதன் சுவர்களில் தீட்டப்பெற்றிருந்த விசித்திரச் சித்திரங்களைக் கண்டுகளித்திருந்த அவனது மனக்கோட்டைகளெல்லாம் மணலோடு மணலாகச் சரிந்திடிந்து விழுந்து அழிந்து விட்டன. தன் எட்டணா இப்படிப் பயன்படுமென்று அவன் நினைக்கவேயில்லை.

ஆனால் ரஜாக்கைப்போல் அத்தனைப் பெருமிதத்துடன் அபராதங் கட்டியவர்களை அந்த மாஜிஸ்டிரேட் பார்த்ததே கிடையாது.

---


# குடும்ப ரக்ஷகன்




எல்லா ஊர்களிலும்,

மருந்து கடை, மளிகை,

ஷாப்புகளில் கிடைக்கும்.

L. R. V.

# பிச்சைக்காரன்

[புத்தனேரி, ரா. சுப்பிரமணியன்]

ஐயோ ! தெருவினிலே ஆதரிப்பார் யாருமின்றி
மெய்யோ மிகவாடி மேலெலும்பு முன்தெரிய
வையந் தனைநோக்கி வகைவகையாய்க் கெஞ்சலுடன்
உய்ய வழியின்றி ஊரெங்குஞ் சுற்றுகிறான் ! 1

மண்புழுதி தோய்ந்து மாற்றுடுப்பு மில்லாமல்
எண்ணற்ற கண்கள் ! இழையற்ற கந்தையுடன்
உண்ணவுண வற்றும் உறுபசியாற் கண்ணற்றும்
மண்ணகத்தே கேவலமாய் வாழ்கின்றான் ஈதென்னே ? 2

"கும்பி கொதிக்குதம்மா! கூழ்வார்ப்பீர்!" என்றுரைப்பான்;
" நம்பி நானிற்கின்றேன் நாயகிபொற் கையாலென்
செம்பிலே பிடியரிசி சேரம்மா !" என்றிரப்ப,
" வம்பிலே நில்லாதே, போ !" வென்பாள் மாதரசி ! 3

பின்னொருத்தி தன்மகளின் பெயர்சொல்லிக் கூப்பிடவே
அன்னமென்ற போழ்திவன் 'ஆ'வென்று வாய்திறப்பான்!
அன்னம்இடு வாரிலையேல் அருகிலே எச்சில்இலை
தின்னவரும் நாய்களிடம் சிறுபங்கும் ஏற்பதுவோ ! 4

பத்துவகைக் கறியும் பதினெட்டுப் பச்சடியும்
தித்திக்கும் தெள்ளமுதும் தின்று மிகத்திளைப்போர்
எத்துணையோ பாங்காய் இருக்கின்றார் ! இந்நாளில்
சித்தமிக வாடியிவன் சீரழியுங் காரணம் என் ? 5

அன்புக்கோர் பிள்ளையிலார் அகன்றபெரு மாளிகையில்
இன்புற்று வாழ்கின்றார் ! எண்ணற்ற மக்களுடன்
துன்புற்றுந் தூங்கத் துளியிடமற் றேதெருவில்
மண்பற்றித் தூங்குகிற மாயமிவன் ஏன் பெற்றான் ? 6

நல்லதொரு நிலையில் நாடுயர வேண்டுமெனில்,
"இல்லையால் பிச்சை ஏற்போர்கள், இடுவோரும்
இல்லையாம் !" என்றபுகழ் இசைக்கின்ற நாள்வேண்டும் !
பல்வளமும் பொங்கும் ! பார்புகழும் காலமிதே ! 7

தமிழர் புது வாழ்வியக்கம் - 2

# புது வாழ்வு - பொருளும் பயனும்

[பி. ஸ்ரீ.]

இளமையிலேயே சிறையில் வைக்கப் பட்டவன். அதிலும் இருட்டறையிலே. எத்தனையோ ஆண்டுகள் ஆகிவிட்டன. வயதும் 80-க்குமேல் ஆகிவிட்டது. உலாவுதல், உறங்குதல், சாப்பாடு, ஸ்நானம் எல்லாம் அந்த அறைக்குள்ளேதான். அறைக் கதவிற்கும் ஜன்னலுக்கும் அப்பாலிருந்து சிறை காவலர்கள் வெளிச்சத்தைப் பற்றியும் வெளியுலகத்தைப் பற்றியும் கதை கதையாய்ச் சொல்லுவார்கள். அவற்றையெல்லாம் பார்க்கவேணுமென்ற ஆசைதான். ஆனல் எப்போது, எப்படி, அந்தக் கனவு நனவாகும்?

ஒருநாள் திடீரென்று சிறைக் கதவு திறந்தது. ஜன்னல்களெல்லாம் எதிர்பாராதபடி திறந்து வைக்கப்பட்டன. "இதுதானு வெளிச்சம் என்பது? அடடா, கண் எப்படிக் கூசுகிறது! ஏன்?" என்றெல்லாம் ஆச்சரியப் பட்டான் கிழக் கைதி. "போ வெளியே! சக்ரவர்த்தி தாம் அடைந்த ஒரு பெரிய வெற்றியைக் கொண்டாடுகிறார்; இந்த விழாவிலே 'கைதிகளுக்கெல்லாம் விடுதலை!' என்ற கட்டளை பிறந்துவிட்டது. ஓடு வெளியே, வெளியுலகம் பார். உனக்கு யோகம் பிறந்துவிட்டது கிழவா!" என்றெல்லாம் காவலாளிகளும் அதிகாரிகளும் உத்ஸாகமாய்ப் பேசினர்கள்.

கண்களைத் துடைத்துக்கொண்டு கைதி வெளிப்பட்டான். என்ன வெளிச்சம்! ஆ, என்ன வெளியுலகம்! அந்த இருட்டிலும் ஒருவாறு கண் தெரிந்ததே! ஆனல் இந்த வெளிச்சம் இப்படித்தான் குருடாக்கிவிடுமோ? என்ன அநியாயம்! இனிமேல் சோற்றுக்குத் தான் வழி என்ன?

சக்ரவர்த்தி பவனி வந்துகொண்டிருந்தான், முடி மணிகளும் ஆபரணங்களும் ஜாஜ்வல்யமாய்ப் பிரகாசிக்க, - பேரிகைகள் படாடோபமாய் முழங்க. எதிரே ஓடிவந்தான் கைதி, காது செவிடுபடக் கண்கள் குருடுபட. வந்து காலில் விழுந்தான். விஷயம் தெரிந்ததும், "நாம் உன்னை விடுதலை செய்துவிட்டோமே! உனக்கு இன்னும் என்ன குறை?" என்று கம்பீரமாக முழங்கியது சக்ரவர்த்தியின் குரல். உடனே பதில் வந்தது, "என்னை மறுபடியும் அந்த இருட்டறைக்கே அனுப்பிவிட வேணும்!" என்று.

அதிசயமான கதை; அதிசயமான பொருள் ஒன்று இதில் அடங்கி யிருக்கிறது. 'பழைய வழக்கம், பழைய அடிமைத்தனம்' என்ற இருட்டறை - வாஸத்தை நாம் ஒருமுகமாக வெறுக்கிறேமா? இருட்டறையின் ஜன்னல்களைக் காங்கிரஸ் ஒருவாறு திறக்க முயன்றது. காந்தியடிகள் கதவைத் திறந்துவிட முயன்றார். அந்நிய மோகத்திலிருந்தும் விடுதலையளிக்க முயன்றார். தீண்டாமை முதலான பழைய கொடிய பழக்க வழக்கங்களிலிருந்தும் விடுதலை காட்ட முயன்றார். இவ்வளவு வெளிச்சத்திலும், "கண் கூசுகிறது!" என்று சொன்னவர்களில்லையா? "இன்னும் அதிக வெளிச்சத்திற்குத் திடீரென்று போய்விட்டால் கண் குருடாகிவிடும்!" என்று வருந்தியவர்கள், வருந்துகிறவர்கள், இல்லையென்று சொல்ல முடியுமா?

* * *

இந்த நிலை ஓரளவு சீனுவிலும் காணப்பட்டதாம். சீனர்களும் நம்மைப்போல் வழக்கத்திற்கு அடிமைகளா யிருந்தவர்கள். நூற்றுக் கணக்கான வருஷங்

களாகச் சீனப் பொதுமக்கள் அரசியல்-பொறுப்பை ஏற்றுக்கொள்ள முற்படவில்லை. "அரசியல் என்பது உத்தியோக வர்க்கத்தின் தலைச்சுமை" என்ற அபிப்பிராயம் சீனவிலும் உலாவி வந்தது. "குடும்பக் கவலை, வகுப்புக் கவலைதான் நமக்கு உரியன; தேசத்தைப் பற்றியாவது தேச பக்தியைப் பற்றியாவது நாம் கவலைப்பட வேண்டியதில்லை!" என்றெல்லாம் நினைத்து ஒதுங்கி வாழ்ந்தார்கள் சீன மக்கள், சுதந்திர வாழ்விலிருந்து வெகுகாலமாக. சுதந்திர ஒளியை அனுபவியாமல், சுதந்திரக் காற்றைச் சுவாசியாமல் இருந்த மக்களுக்காக ஒரு புதுவாழ்வியக்கம் ஆரம்பமாயிற்று, சீன தேசத்திலே. அது போன்ற ஒரு புதுவாழ்வியக்கத்தை இந்தியாவிலும் தொடங்குவது அவசியமாகும். இந்தியாவிலும், தமிழர்களாகிய நமக்கு இத்தகைய இயக்கம் மிகவும் அவசியமானது என்று தோன்றுகிறது.

* * *

நமது புதுவாழ்வியக்கம் கிராமங்களில் வாழும் நம் பொது மக்களையும் வசீகரிக்கவேண்டும். ஆண்களையும் பெண்களையும், வாலிபர்களையும் வயது முதிர்ந்தவர்களையும் ஒருங்கே வசீகரிக்கும்படி ஒருவகை மானஸ தத்வ ஸம்பிரதாயமாக இந்த இயக்கத்தை ஆரம்பிக்க வேண்டும். இது ஒரு சிறந்த உபயோகமுள்ள பொதுஜனக் கல்விப் பயிற்சியாகவும் அமையவேண்டும்.

* * *

நீண்டகாலப் பழக்க வழக்கங்களை ஒழித்துப் புரட்சிகரமான மனப்பான்மையை நம் மக்களிடையே உண்டாக்குவதென்றால் அது சாமானியமான காரியமா? எனினும் இதே காரியத்தை மகாத்மா காந்தி தமது ஆடம்பரமற்ற முறையில் செய்ய முயன்றார். "ஸத்யாக்ரஹம், அஹிம்ஸா தர்மம்" என்ற பழைய லட்சியங்களைக்கொண்டு தற்கால இந்தியப் பொதுமக்களின் மனப்பான்மையைப் பூர்ணமாக மாற்றிவிட முயன்றார்.

"தற்கால உலகத்தில் அந்தப் பழைய லட்சியம் செல்லுமா?" என்று ஆட்சேபிக்கிறவர்களுண்டு. "இது என்ன, மத இயக்கம்போல் இருக்கிறதே!" என்று பரிகசிக்கிறவர்களுமுண்டு. "தற்கால வாழ்க்கைக்கு ஏற்றபடி ஒரு புது வாழ்வுத் திட்டம் வேண்டாமா?" என்று கேட்கிறவர்கள் உண்டு. வெள்ளைக்காரர்களுடைய கிளர்ச்சி முறைகளையோ, ரஷ்யர்களுடைய புரட்சி முறைகளையோ, 'காப்பி' யடிப்பதுதான் நல்லது என்று பிரசாரம் செய்கிறவர்களுமுண்டு. எனினும் காந்தியத் திட்டம், பழைய ஒழுக்க சம்பத்தை இழந்துவிடாமல் புதிய காலத்திற்கு ஏற்ற புதுவாழ்வுத் திட்டம்தான்-என்பதை நாம் மறந்துவிடலாகாது.

காந்தியடிகள் யந்திரங்களுக்கு விரோதி என்றும், தற்கால நாகரிக வாழ்வை விட்டுப் பழைய 'கட்டைவண்டி நாகரிக'த்திற்குப் போகச் சொல்லுகிறாரென்றும், இகழ்கிறவர்களும் ஏசுகிறவர்களும் நமது நாட்டிலும் காணப்படுகிறார்கள். இது பொய்ப் பிரசாரம் - வீணான அபவாதம். "ஒவ்வொரு கிராமாந்தர வீட்டிலும் நமக்கு மின்சார வசதி கிடைத்தால், கிராமவாசிகள் தங்கள் கருவிகளை மின்சாரத்தால் ஓட்டிக்கொள்வதில் எனக்கு ஆட்சேபமில்லை" என்று ஐயம் திரிபுகளுக்கு இடமில்லாமல் மகாத்மா காந்தி தமது அபிப்பிராயத்தை வெளியிட்டிருக்கிறார்.

* * *

பெரு வலிமை படைத்த சர்க்காரும், பெரும் பொருள் படைத்த முதலாளிகளும், தங்கள் அதிகார ஆடம்பர வாழ்விற்காகவும் சுகபோக வாழ்விற்காகவும் நாற்பது கோடி மக்களை அடிமைகளாக்கி வைத்திருக்கிறார்கள். இதை நிர்க்கதியாகப் பார்த்துக்கொண்டு, "இது கலியுகம், எங்கள் தலைவிதி!" என்றெல்லாம் தவித்துக்கொண்டிருந்த மகாஜனங்களைத் தட்டியெழுப்பியது, மகாத்மா காந்தி செய்த அற்புதம்தானே! பழைய ஜாதி சமயப் பிளவுகளோடு புதிய வகுப்புப் பிணக்குகளும் பூசல்களும் தேசத்தைப் பாழாக்க முயன்றபோதிலும்,ஒரு தேசிய

சமூகம் - அகில இந்திய சமுதாயம் - விழிப்படைந்து வருகிறதல்லவா? இந்தச் சமுதாயம், "என் ஜீவாதாரமான உண்மைத் தேவைகளுக்குத் தக்கபடி என்வீட்டை நானே நிர்வகிப்பேன்!" என்று உலகம் அறியத் தன் லட்சியத்தை வெளியிட்டு வருகிறதல்லவா? இந்த நிலைமைக்கு முக்கிய காரணம் காந்தியடிகளின் இயக்கம் தானே?

சென்ற இருபத்தைந்து வருஷ காலமாக மகாத்மா காந்தியின் நிர்மாணத் திட்டம் இந்தியாவின் புது வாழ்விற்கு அடிகோலி வந்திருக்கிறது. இந்தத் திட்டம் தவறிவிட்டது என்று சொல்வதில் பொருளே கிடையாது. இந்தத் திட்டத்தின் பலவேறு அம்சங்களிலும் நாம் அனுபவம் பெற்றிருக்கிறோம். சர்க்கா சங்கம், ஹரிஜன சேவா சங்கம் முதலான முயற்சிகள் நமது கிராம வாழ்க்கையிலும் சில அம்சங்களைப் பாதித்திருக்கின்றன. இப்போது நமது கிராமவாசிகள், நகரவாசிகள் ஆகியவர்களின் வாழ்வு முழுவதிலும் வியாபிக்கக் கூடிய ஒரு புதுக் கல்வித் திட்டம் உருவாகி வருகிறது. இது வருங்கால வேலைகளுக்கு ஒரு சரியான வழிகாட்டியாகவும் உறுதியான அஸ்திரமாகவும் அமைந்து, ஒரு புதிய சமுதாய அமைப்பையே சிருஷ்டிக்கும் ஜீவசக்தி வாய்ந்ததாக இருக்கும் என்று எதிர்பார்க்கலாம்.

* * *

இத்தகைய திட்டத்தை அனுசரித்து, நாமும் நமது தமிழ் நாட்டிலே பரந்த தேசீய வாழ்வு வாழ வேண்டும். நமது குழந்தைகளாவது ஜாதிப் பூசல்களுக்கும் வகுப்புப் பூசல்களுக்கும் இரையாகாமல் இந்தியர்களாகவும் தமிழர்களாகவும் வாழக் கற்றுக்கொள்ள வேண்டும்.

நாம் இருக்கும் நாடு
நமது

என்று பாரதியார் அறைகூவிப் பறைசாற்றுகிறாரே, அந்த முழு உண்மையையும் உள்ளபடி உணர்ந்துகொண்டு அந்நிய பயத்தை அறவே ஒழித்துத் தலைநிமிர்ந்து, இந்தியப் பண்பிலும் தமிழ்ப் பண்பிலும் தமிழ் நாடு வேரூன்றி வளர்ந்தோங்க வேண்டும்.

தேச விடுதலைப் போரில் அதிதீவிரமாய்க் கலந்துகொள்ளும்படி தமிழ் பெருமக்களைத் தூண்டுவது நமது புது வாழ்வியக்கத்தின் தற்கால நோக்கமாயிருக்க வேண்டும். புதல்வர்களோடு தந்தையர்களும், சகோதரர்களோடு சகோதரிகளும், கணவர்களோடு மனைவியரும் கலந்து போராடி வெற்றி பெற முயல்வது இந்த நோக்கத்தின் பிரதான அம்சமாயிருக்க வேண்டும். கிராமவாசிகளின் வாழ்க்கைத் தரத்தை, விவசாயத்தை அனுசரித்த குடிசைத் தொழில்களின் அபிவிருத்தி மூலமாக உயர்த்தி, அவர்களை யெல்லாம் விடுதலைப் போரில் ஈடுபடச் செய்து வெற்றி வீரர்களாக்க முயல்வதும் இந்த இயக்கத்தின் பிரதான நோக்கமாயிருக்க வேண்டும்.

* * *

"பொதுவுடைமை சிறந்ததா? முதலாளித்வ அமைப்பே போதுமா?" என்ற விவாதத்திற்கு இன்று இந்தியாவிலும் தமிழ் நாட்டிலும் இடமில்லை. "கடவுள் வேண்டுமா, வேண்டாமா?" என்பதுபோன்ற சர்ச்சைகளும் இப்போது அவசியமில்லை. பொது ஜன சக்தியை ஒரு முகமாய்த் திரட்டி, விடுதலைப் போரின் முன்னணியிலே கொண்டு நிறுத்துவதுதான் நமது புதுவாழ் வியக்கத்தின் தற்சமயப் பொருளாகவும் பயனாகவும் இருக்க வேண்டும். இதற்கு ஓர் உருப்படியான வாழ்க்கைத் திட்டம் தேவை, இப்பொழுதே தேவை. இந்தத் திட்டத்தில் அபேதவாத அம்சங்கள் சிலவும் இருக்கும், முதலாளித்வ முறைகள் சிலவும் தவிர்க்க முடியாமல் அமைந்திருக்கும். இந்தத் திட்டத்திற்கு ரஷ்யர்களது லௌகிக சாமர்த்தியம்போன்ற சாமர்த்தியத்தையும் நாம் மேற்கொள்ள வேண்டும்; நம்முடைய ஆழ்ந்த மத உணர்ச்சியையும் பயன்படுத்திக்கொள்ள வேண்டியதுதான். எல்லா வற்றுக்கும் அடிப்படையாக அமைய வேண்டியது காந்தியடிகளின் ஸத்யாக்ரஹ-அஹிம்ஸா தர்ம உணர்ச்சிதான். இந்த உணர்ச்சி

யைக்கொண்டே கோழைத்தனத்தைப் போக்கி வீர சுதந்திர வாழ்வை நம் மக்களின் மனக்கண்முன் உருவாக்கிக் காட்ட முடியும்.

* * *

இத்தகைய புதுவாழ்வின் ஒரு பகுதி அரசியல் விடுதலை; மற்றப் பகுதி சமுதாய விடுதலை. சமுதாய விடுதலை-இயக்கத்தை அரசியல் விடுதலை-இயக்கத்திற்கு முக்கிய சாதனமாகக் கருத வேண்டும். இந்த இருவகை விடுதலைக்கும் ஒரு நல்ல வழிகாட்டுவது ஸத்யாக்ரஹ-அஹிம்ஸா தர்ம உணர்ச்சிதான். இதுவே நமது பழைய சமய உணர்ச்சியின் ஆணி வேர். இந்த வேரிலிருந்து ஜீவசக்தி பெறுவோமானால், நமது புதுவாழ்வியக்கம் இந்தியாவுக்கும் தமிழ் நாட்டுக்கும் மீண்டும் ஒரு புதிய இளமையை அளிக்கும் என்பதில் சந்தேகமில்லை.

இந்தியாவிலும், தமிழ் நாடும் தமிழ் நாகரிகமும் தமிழ்ப் பண்பாடும் எவ்வளவு தொன்மை வாய்ந்தன. நம் பழந் தமிழ்ப் பண்பிலும், சத்தியத்திற்கும் அஹிம்ஸைக்கும் - அதாவது உண்மைக்கும் அருளுக்கும் - ஜீவதார ஸ்தானமுண்டு. இன்றும், நமது கல்வித் திட்டத்திலும் கலை வளர்ச்சியிலும் புது வாழ்வியக்கத்திலும் - அரசியல் பொருளாதாரக் கிளர்ச்சிகளிலும்கூட-உண்மை வெறியும் (ஸத்யாகிரஹம்) அருள் வீரமும் வெளிப்பட வேண்டும். நமது புது வாழ்வின் பொருளும் பயனுமே நாம் உண்மைத் தமிழர்களாகவும் அருள் வீரர்களாகவும் வாழ்ந்து நமது நாட்டிற்கும் உலகத்திற்கும் மகத்தான பணி புரிவதுதான்.

அடுத்த கட்டுரை: வாழ்வு என்றலென்ன ?


எல்லா ஊர்களிலும் ஏஜண்டுகள் தேவை !

விக்டரி
பேஸ் பௌடர்
வாசனையுடன்
சர்மத்தின் அழகையும்
முகத்தின் வசீகரத்தையும்
மிகுதிப்படுத்துகிறது



விக்டரி அண்டு கோ கும்பகோணம்

ஆர்டர்கள் உடனுக்குடன் கவனிக்கப்படும்

L. R. V.

# மூவர் அமுல்

[த்ருஷ்ட கர்மா]

## அத்தியாயம் 6

### த்ரவ்யங்கள்

உலகத்திலுள்ள பொருள்கள் எல்லாம் த்ரவ்யம் என்ற பெயரால் வழங்கப்படும். மனதினுலும் அறிவினுலும் எட்டப்படும் பொருள்களும் த்ரவ்யங்களே. இத் திரவ்யங்களுக்கு லக்ஷணம் என்னவென்ருல் அவைகளுக்கென்ற குணங்களும் கர்மாக்களும் உண்டு என்பதே.

பஞ்ச பூதங்களும் த்ரவ்யங்களே. ஆகவே, அவைகளின் குணங்களையும் கர்மாக்களையும் ஆராய்வோம்.

பார்திவ த்ரவ்யம் :—ப்ருத்வியினம்சம் அதிகம் கலந்தது. குரு குணம் பொருந்தியது. அழுத்தமாக அடர்ந்திருக்கும். வாசனை என்கிற குணம் சிறப்புற்றிருக்கும்.

இந்த த்ரவ்யங்களை உபயோகித்து வந்தால், தேகத்தின் கனத்தை யதிகமாக்கும். நல்ல கட்டும் திரண்ட உருவமும் ஏற்படும்.

ஆப்ய த்ரவ்யம் :—அப் பூதம் அதிகம் கலந்தது. குளிர்மை, பசையுடைமை, மந்தமாக பரவும் ஸ்வபாவம், நீரைப் போல் த்ரவமாகும் தன்மை, இவைகள் நிறைந்தது. சுவையினுல் மிக்க நன்கு அறியப்பட்டது. தேகத்தில் பசையையும், கொழ கொழப்பையும், த்ரவமாகச் சுரக்கும் சக்தியையும், உத்ஸாகத்தையும் அளிக்கும். ஒன்றுக்கொன்று சதை முதலிய உறுப்புக்கள் ஒட்டி இயங்க உதவும்.

ஆக்னேய த்ரவ்யம் :—அக்னியினம்சம் அதிகமுள்ளது. வறட்சி, தீக்ஷ்ணம், முறுமுறுப்பு இவைகள் குணங்கள். வர்ணம் அதிகமாக இப்பொருள்களில் பரவி நிற்கும்.

தேகத்தில் அழற்சி, காந்தி, வர்ணம், தேஜஸ், ஜீரண சக்தி முதலியவைகளைப் பெருக்கும்.

வாயவ்ய த்ரவ்யம் :—வாயுவினம்சம் அதிகமுள்ளது. வறட்சி, முறுமுறுப்பு, லகு இவ்விதக் குணங்களுடன் ஸ்பர்சத்தில் மிக்க உணர்ச்சியை யளிப்பவையாக இருக்கும்.

தேகத்தில் சிரமம், வறட்சி, ஒரு லாகவம், ஒரு தெளிவு இவைகளை யுண்டாக்கும்.

நாபஸ த்ரவ்யம் :—ஸூக்ஷ்மம், ரூக்ஷம், லகு முதலிய குணங்களுடன் சப்தத்தையும் ப்ரதானமாகக்கொண்டது. ஆகாச பூதம் நிரம்பியது.

தேகத்தில் லாகவத்தையும் அங்காங்கு துவாரங்களையும் அமைக்கும்.

இவ்விதம் தனித்தனி பூதங்களின் குணங்களையும் கர்மாக்களையும் ஆராய்ந்து அவைகளின் சேர்க்கையினுல் இதர பொருட்கள் உண்டாவதால் அப்பொருட்களின் குணங்களும் அறியப்படலாம்.

இவைகளில் பிரதானமாக ஆராயப்பட்ட சேர்க்கைக் குணங்கள் ரஸம் என்று முந்திய அத்தியாயத்தில் சொல்லப்பட்டது. இந்த ரஸங்களும் த்ரவ்யங்களோடு சேர்ந்தே இருக்கிறபடியாலும் ஒவ்வொரு ரஸமுள்ள த்ரவ்யமும் பொதுவில் ஒவ்வொருவித குணத்தையே ஏற்படுத்துவதாக இருந்தபடியாலும் இந்தப் பொருளின் இதர குணங்களை இந்த ரஸத்திற்கும் உள்ள குணமென்ருர்கள். உதாரணமாகத் தித்திப்பு ரஸமுள்ள த்ரவ்யமான திராக்ஷை, விதாரி கிழங்கு, அதிமதுரம் முதலிய பொருள்கள் எல்லாம் குருகுணம் உள்ளவைகள், சீதவீர்யமுள்ளவைகள், ஸ்னிக்த குணமுள்ளவைகள் என்றெல்

லாம் பார்க்கும்பொழுது, தித்திப்பு ரஸத்தின் குணங்கள் சீதம், குரு, ஸ்னிக்தம் என்று சொல்லத் தோன்றுகிறது. இம்மாதிரியே ஒவ்வொரு ரஸத்திற்கும் சில சில குணங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. (அவைகளைப் பிறிதொரு இடத்தில் அனுபந்தமாகப் பார்க்கலாம்). இவ்விதம் த்ரவ்ய குணங்களை எல்லாம் தேர்ந்தறிந்த டாக்டர் சுந்தரம் சிற்சில த்ரவ்யங்கள் அவைகளின் ரஸத்திற்கு ஏற்பட்ட குணங்களைக் காட்டவில்லை என்பதையும் கவனித்தார். வாத, பித்த கபங்களுக்கும் இவைகளுக்கும் என்ன சம்பந்தம் என்றும் யோசித்தார். சர்மாவைக் கொண்டே விளக்கிச் சொல்லும்படி செய்ய எண்ணி வைத்திய சாலையையடைந்தார். சர்மாவும் தீவிரமான ஆராய்ச்சியி லாழ்ந்திருந்தார். சுந்தரத்தைப் பார்த்ததும் ஒரு புன்னகை செய்தார். சொன்னர்.

சர்மா :—சுந்தரம்! அன்று வாதபித்த கபங்கள் த்ரவ்யங்களா என்று கேட்டாயல்லவா?

டா. சுந்தரம் :—ஆம். மற்றையப் பொருள்களைப் பார்ப்பது போலும் எடுப்பது போலும் இந்த மூன்று தோஷங்களையும் கையாள முடியுமா என்றுதான் கேட்டேன்.

ச :—அதைத்தான் நான் ஆலோசித்து வருகிறேன். ஆனல் முடியும், முடியாது என்று பதில் சொல்ல முடியவில்லை. வைத்தியம் செய்வதற்கு உதவும் வகையில் அவைகளை த்ரவ்யங்கள் என்று பாவிப்பதில் யாதொரு தப்பிதமும் இல்லை. ஏனென்ருல் த்ரவ்யங்களுக்குக் குணமும் கர்மாக்களும் இருக்கவேண்டும். இந்தத் தோஷங்களுக்கும் அவ்வித குணங்களும் கர்மாக்களும் கூறியிருக்கிருர்கள். எங்கெங்கு இந்தக் குணங்கள் சேர்கின்றனவோ அங்கே எல்லாம் குறிக்கப்பட்டுள்ள தோஷம் வ்ருத்தியடைகிறது. அவைகளுக்குக் குறிப்பிடப்பட்ட கர்மாக்களையும் செய்விக்கிறது. இந்தமாதிரி நடப்பது ஒரு தடவைகூட மாறுபடாவிடில் இவ்வாறு குறிப்பிடப்பட்ட குண கர்மாக்களுடன் ஊகிக்கப்படும் ஒரு த்ரவ்யம் என்று ஒவ்வொரு தோஷத்தையும் கொள்ளலாம். இதை விடுத்து த்ரவ்யமா சக்தியா என்று ஆராய்வது வீண் பரிச்ரமமே. சக்தி என்றும் த்ரவ்யம் என்றும் தர்க்க ரீதியில் பிரிவினையே கிடையாது. சக்தியும் த்ரவ்யங்களிலும் பதார்த்தங்களிலும் உள்ளடங்கியதே.

டா. சு : சர்மா, நீங்கள் சொல்லுவது தான் சரியான மார்க்கம். பிரயோஜனத்தைத் தரும்படியான ஓர் சித்தாந்தத்திற் கொப்பான ப்ரதிக்ஞையைச் செய்து கொண்ட பிறகு, அப்பிரதிக்ஞை சித்தாந்தம்தாஞ என்று தேற வேண்டியதில்லை தான். தோஷங்களின் கேவல ஸ்வரூபம் அவச்யமில்லை என்று அறிகிறேன். வ்யவகாரங்களுக்கு உபயோகப்படும்படி சில குணங்களையும் கர்மாக்களையும் தொடுத்து அந்தக் கூட்டத்தை ஒரு தோஷம் என்ற பெயரினல் நமக்கு ஞாபகப்படுத்தி வ்யாதியை அறிய உதவுகிருர்கள் என்றதனல் அந்தப் பெரும் முயற்சியின் மகிமை குறையாது. பெரியோர்கள் ஆழ்ந்த யோசனையின்மீது வருத்த கூறுகளல்லவா! இத்தோஷங்களின் குணுதிசயங்களையும் அவைகளுக்கும் இதர த்ரவ்யங்களுக்கும் உள்ள கூட்டுறவு முதலியவைகளையும் என்னைப் போன்ற ஆங்கிலப் பத்ததியில் ஊறிய மனப்பான்மை யுள்ளவர்களும் அறிந்து கொள்ளுமாறு தாங்களே விளக்க வேண்டுமென்று ப்ரார்த்திக்கிறேன்.

ச :—நல்லது. இந்த கைங்கர்யத்திற்கென்றே நீ கேள்விகள் போட்டு வருகிருய் என்பதை நான் அறிவேன். மற்றப்படி நீயே அறிந்துகொள்ளும் ஆற்றல் படைத்திருக்கிருய். ஆகவே, தொகுக்கிறேன், கேட்டு வா.

வாதம் என்கிற தோஷம் ரூக்ஷம், லகு, சீதம், கரம் (சொற சொறப்பு), சலம் (அசையும் தன்மை) சூக்ஷமம் (மிக்க நுண்ணியதாகப் பிரிந்து பரவும் சக்தி படைத்தது) என்ற குணங்களுள்ளது.

நழுவுதல், தூக்கிப் போடுதல், அடித்தல், மாத்துப்போதல், அயர்த்தியைத்

தருதல், வலித்தல், குத்தல், பிளத்தல், மலமூத்திராதிகளைத் தடைப்படுத்துதல், அவயவங்களை நொறுக்குவதுபோல் பிடித்தல், சுருங்க வைத்தல், கூசச் செய்தல், உருட்டிக் கெட்டிப்படுத்துதல், தாகத்தை யுண்டாக்குதல், குளுக்குதல், சொற சொறப்பு அடையச் செய்தல், துவாரங்களை அமைத்தல், வற்ற வைப்பது, துடிக்கச் செய்வது, முறுக்குவது, பிடிப்புக்கொள்ளச் செய்வது, துவர்ப்பு ரஸத்தை சுரக்கச் செய்வது, கருமையும் அருண வர்ணமும் தோற்றுவிப்பது முதலிய இவைகள் வாயு செய்யும் காரியங்கள்.

இவ்விதமே பித்தத்தின் குணங்கள் சிறிது ஸ்னிக்தம் (பசையுள்ளது) தீக்ஷ்ணம் (சுறீர் என்று பரவி வேலை செய்யும் தன்மை), உஷ்ணம், லகு, துர்கந்தம், நெகிழும் தன்மை, திரவமாதல்.

இதன் காரியங்கள் அழற்சியைக் கொடுப்பது, வர்ணங்களை விதவிதமாகத் தோற்றுவிப்பது, அதிலும் ப்ரதானமாக சிகப்பு வர்ணம், சுடுகையைத் தோற்றுவிப்பது, வேக்காட்டையும் செய்விப்பது, வேர்த்தல், கொதறுதல், அழுகச் செய்வது, நீர் ஒழுகச் செய்வது, அயர்த்தியை யுண்டாக்குவது, மயக்கம் தருதல், மூர்ச்சையை யுண்டாக்குதல், காரத்தையும் புளிப்பையும் பிரதானமாகக் காட்டுதல், வெளுப்பும் அருண வர்ணமும் தவிர மற்றைய எல்லா வர்ணங்களையும் காட்டுதல்.

கபத்தின் குணங்கள் ச்னிக்தம், சீதம், குரு, மந்தம், மழமழப்பு, ம்ருது கெட்டியாய் நிற்றல் முதலியவைகள்.

இதன் காரியங்கள், பசையை யுண்டாக்குவது, கெட்டிப்படுத்துவது, தினவு உண்டாக்குவது, குளிர்மையாக்குவது, கனப்பது, கட்டுவது, பூசுவது, திமிர்த்தல், வீக்கம் உண்டாக்குவது, அஜீர்ணம், அதிக தூக்கம் உண்டாக்குவது முதலியன. எல்லாக் காரியங்களும் மெதுவாக நடக்கும். வெகு நேரம் இவைகள் தொடர்ந்திருக்கும். தித்திப்பும் உப்பும் தோற்றுவிக்கும். பொதுவாக வெண்மை நிறம் தோன்றும்.

இவைகள் சேர்ந்து ஒரு வ்யாதியை உண்டாக்கினால் இந்தக் காரியங்களைச் சேர்த்துச் செய்விக்கும். இவ்வித குணங்களுள்ள பொருள்கள் அல்லது க்ரியைகள் சேர்ந்து தேகத்தில் பாவினால் இந்தத் தோஷங்களும் சேர்ந்து கோளாறடையும் என்று ஊகிக்கலாம்.

டா. சு: நல்லது; இந்தத் த்ரவ்யங்கள் பொதுவாக தோஷங்களுக்குச் சமான குணங்கள் படைத்ததால் தோஷத்தை வ்ருத்தி செய்கின்றன. அதேமாதிரி விரோதமான குணங்கள் படைத்ததால் குறைக்கின்றன என்றும் அறிகிறேன். வெவ்வேறு பொருள்களிலும் பல வேறு குணங்கள் இருக்கின்றன. ஒன்றில் இருக்கும் குணங்களே பல தோஷங்களுக்குச் சமான குணங்களாக இருக்கின்றன. உதாரணமாக நெல்லிக்கனியிலுள்ள புளிப்பு, சீதம் இரண்டையும் பார்த்தால் ரஸம் பித்தத்தை யுண்டாக்கும் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். அதேமாதிரி சீதம் பித்தத்தைக் குறைத்து வாதத்தையும் கபத்தையும் பெருக்கவேண்டும். புளிப்போ வாதத்தைக் குறைத்துக் கபத்தைப் பெருக்க வேண்டும். இந்நிலையில் இதைப் பெரிய ரஸாயனம் என்றும் பித்தசமனி என்றும் எவ்வாறு கூறுவது? இது போன்ற விஷயங்களை விளக்கினால்தான் த்ரவ்யங்களை நன்கறிந்ததாகும்.

சர்மா: வெகு நுட்பமாய்க் கேட்கிறாய்! ஆனால் இவைகளைப்பற்றிக் கூற வேண்டுமானால் ரஸம், விபாகம், வீர்யம், பிரபாவம் என்ற விஷயங்களை முன்னால் அறிய வேண்டும். இந்த விஷயத்தை மற்றொரு சமயம் ஆராயலாம்.

---

# ஸ்ரீ சியாமா சாஸ்திரிகள்*

[நா. ரகுநாதன்]

ஸ்ரீ சியாமா சாஸ்திரிகள் நமது சிறந்த 'வாக்கேயகாரர்'களில் ஒருவர். தக்ஷிண ஸங்கீதத்திற்குத் திலகம் போல் விளங்குபவர். அவர் அருளிச் செய்து நமக்குக் கிடைத்துள்ள கிருதிகளும் மற்ற ஸாஹித்தியங்களும் சொற்பமேயாயினும் அவைகள் ஒரு தனி நடையும் அழகும் வாய்ந்து மனதைக் கவருகின்றன. ஜாஸ்தி உருப்படிகள் தெலுங்கிலும், சில ஸம்ஸ்கிருதத்திலும் இரண்டொன்று தமிழிலும் பார்த்திருக்கிறார். அனேகமாக எல்லாம் பராசக்திக்கு அர்ப்பணம் செய்யப்பட்டு அவள் அருமை பெருமைகளையே போற்றி நிற்கின்றன.

நமது ஸங்கீதத்திற்கே ஆதி கர்த்தா என்று கொண்டாடப்பட்ட ஸ்ரீ நாரத பகவான் தான் ஸங்கீதத்தில் ஈடுபட்ட காரணம் இன்னதென்றும் தான் அதிவிருந்து அடையும் லாபமும் இன்பமும் எவ்வகைப் பட்டவை என்றும் ஸ்ரீமத் பாகவதத்தில் அழகாக எடுத்துரைக்கிறார், கீழ்க்கண்ட சுலோகங்களில்:

> தேவதத்தாம் இமாம் வீணம்
> ஸ்வரப்ரஹ்ம விபூஷிதாம்
> மூர்ச்சயித்வா ஹரிகதாம்
> காயமான: சராம்யஹம்
> ப்ரகாயத: ஸ்வவீர்யாணி
> தீர்த்தபாத: ப்ரியச்ரவா:
> ஆஹூத இவ மே சீக்ரம்
> தர்சனம் யாதி சேதஸி.
> ஏதத்த்ஹ்யாதுர சித்தானும்
> மாத்ராஸ்பர்சேச்சயா முஹூ:
> பவஸிந்துப்லவோ த்ருஷ்ட:
> ஹரிசர்யானுவர்ணனம்.

"ஈசுவரனால் கொடுக்கப்பட்டதும் ப்ரஹ்மத்தையே தொனிக்கச் செய்யும் ஸ்வரங்களால் அலங்கரிக்கப்பட்டதுமான இந்த வீணையை மூர்ச்சனை செய்து ஆலாபனத்துடன் ஹரியினுடைய குண விசேஷங்களை கானம் பண்ணி மூன்று உலகங்களிலும் ஸஞ்சரிக்கின்றேன்", என்கிறார் நாரதர். அப்படி எதற்காகச் செய்யவேண்டும் என்றால் தனக்கதில் ஆத்ம லாபம் இருப்பதை எடுத்துக் காட்டுகிறார். "தன்னுடைய மஹிமைகளை நான் இவ்விதம் ஸந்தோஷத்துடன் பாடிக் கேட்ட மாத்திரத்தில் யாரோ தன்னைக் கூவி அழைப்பதுபோல் எண்ணி ஹரி என் உள்ளத்துக்குள்ளே ஓடோடியும் வந்து என் அகக்கண் முன்னே நிற்கின்றான். அப்படி அவன் நுழைந்ததாலேயே என் உள்ளம் பரிசுத்தமாகி அவன் புகழைப் பாடுவதே மேலான இன்பமென்று எனக்கு விளக்குகிறது" என்கிறார். இந்த இன்பத்தைத் தானே அனுபவித்தால் போதாதா, லோகம் லோகமாக அலைவானேன் என்றால், அதற்குச் சொல்லுகிறார், "போகத்தில் வைத்த ஆசையால் உலகத்தில் ஆன்மாக்கள் ஆதாரம் மிகுந்து விருப்பு வெறுப்பு மயமான ஸம்ஸார ஸாகரத்தைத் தாண்ட ஸாதனமில்லாமல் தவிக்கிறார்கள். 'பரம்பொருளைப் பாடி அவன் குணங்களில் அவர்களை ஈடுபடச்செய்து அவனை நான் கண்டு அனுபவிப்பது போல் அவர்களும் கண்டு அனுபவிக்கச் செய்யவேண்டும்' என்ற லோக க்ஷேம மான கைங்கரியத்தை எனக்கு பகவான் உத்தரவு பண்ணியிருக்கிறான்," என்று.

---

*இந்தக் கட்டுரையில் கண்ட சில விஷயங்கள் இதை எழுதியவர் 6-2-45ல் சென்னை ஸங்கீத ஸேவாஸமிதி, ரஸிக ரஞ்சனி ஸபை இவைகள் ஆதரவில் நடந்த 'சியாமா சாஸ்திரிகள் தின'க் கொண்டாட்டத்தில் தலைமை வகித்துப் பேசினபோது சுருக்கமாகச் சொல்லப்பட்டன.

இவ்விதம் நாரதர் செய்யும் காரியத்தைத் தான் 'வாக்கேயகாரர்'களான மகான்களும் தம் அளவுக்குச் செய்திருக்கிறார்கள். யோக சாஸ்திரத்தில் சொல்லுவதுபோல், அவர்கள் தங்கள் சரீரத்தையே வீணையாகக் கொண்டு, தங்கள் தபஸாலும் ஸாதகத்தாலும் அதைத் தகுந்த கருவியாக அமைத்து, ஸ்வதஸ்ஸித்த ஸ்வரஸ்தானங்களோடு விளங்குவதாகவும் பல மூர்ச்சனைகள் காட்டக் கூடியதாகவும் தங்கள் சாரீரத்தைப் பழக்கி வைத்திருக்கிறார்கள் என்று வைத்துக்கொள்வோம். அதை எப்படிப் பயன்படுத்துவது? மேற்கூறிய நாரதர்வீணையை—அதற்கு மஹதீ என்ற பெயரைச் சாஸ்திரம் வழங்குகிறது—மாக கவி வருணிக்கிறார். அது ஸ்வதஸ்ஸித்த ஸ்வரஸ்தானங்களோடு கூடி ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தபடியால் நாரதர் த்ரிலோக ஸஞ்சாரம் பண்ணிக் கொண்டு வாயுமார்க்கத்தில் வரும் காலத்தில் காற்றுப்பட்ட மாத்திரத்தில் வீணை தானாக வாசிக்கிறதென்றும் அதன் தொனியைக் கேட்டு வாத்தியத்தைத் திரும்பித்திரும்பிப் பார்த்து அந்த அமானுஷியமான ஸம்பவத்தை எண்ணி மகிழ்கிறார் என்று மாகம் கூறுகிறது. 'வாக்கேயகாரர்'களுடைய சாரீர வீணையில் நாதவெள்ளத்தைக் கிளப்புவதானது வெறும் காற்று அல்ல, தேவலோகத்துக் காற்றுக்கூட அல்ல. ஈசுவரனுடைய ஆவேசம் என்றும் அனுப்ரவேசம் என்றும் ஆன்றோர் ஏற்றின கிருபா விசேஷம் அது. (இதைத்தான் பாஸ்சாத்தியர் inspiration என்றும் உபமாலங்காரமாக the wind that bloweth where it listeth என்றும் சொல்லுகிறார்கள்). இவ்வித உள்ளக் கிளர்ச்சி எழவே, தங்கள் நற்பழக்கத்தின் பயனும் வாஸனா விசேஷத்தாலும் தாங்கள் அடைந்த தெய்வபக்தியை அதன் வாயிலாக வெளிப்படுத்த எண்ணி ஸங்கீதத்துடன் ஹரியோ, ஹரனோ, தேவியோ மற்றுமுள்ள எந்த இஷ்டதேவதையோ அவர்களுடைய பிரசம்ஸையையும் இணைத்துப் பாடுகிறார்கள். அப்படிச் செய்யுங்கால் தன் நினைவு இழந்து, நாரதர் சொன்னபடித் தன் மனத்தடத்தில் தோன்றும் ஆனந்தக் காக்ஷியில் ஈடுபட்டு, தாங்கள் கண்டதைக் கண்டபடியே தங்கள் கிருதிகள் மூலமாகவும் கவனங்கள் மூலமாகவும் அமைத்துக் காட்டவே, அவர்கள் மனதில் தோன்றின கற்பனைகளை அப்படியே மற்ற ரஸிகர்களும் கண்டு அனுபவிக்க நேருகிறது. தாங்கள் அனுபவித்த ரஸவிசேஷத்தைக் கொஞ்சமும் குன்றாமலும் மாறுதல் முதலிய விகாரங்கள் இல்லாமலும் பிறரும் அனுபவிக்கச் செய்யும் ஸ்ருஷ்டி சக்தி யாரிடம் பூர்ணமாக இருக்கிறதோ அவர்களே மேலான 'வாக்கேயகாரர்'கள்.

இந்த ரீதியில் ஸ்ரீசியாமாசாஸ்திரிகளுடைய கிருதிகளை ஆராய்ந்தால் அவருடைய மேன்மை நன்கு புலப்படும். ஆனந்த பைரவி ராகத்தில் அவர் அத்புதமான கிருதிகளைச் செய்திருக்கிறார் என்பது உலகம் ஒப்புக்கொள்ளும் விஷயம். இந்த ஆனந்த பைரவி ராகத்தைப்பற்றி ஒரு சின்ன சர்ச்சையை இங்கே தெருவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஸ்ரீமத் சங்கர பகவத் பாதர்கள் 'ஸௌந்தர்ய லகரி'யில் நவஸ்ருஷ்டிக் கிரமத்தைப் பின் வரும் சுலோகத்தில் அழகாக விவரித்திருக்கிறார்கள்.

தவாதாரே மூலே
ஸஹ ஸமயயா லாஸ்ய பரயா
நவாத்மானம் மன்யே
நவரஸ மஹா தாண்டவ நடம்
உபாப்யாம் ஏதாப்யாம்
உதய விதி முத்திச்ய தயயா
ஸநாதாப்யாம் ஜக்ஞே
ஜனக ஜனனீமஜ் ஜகதிதம்.

ப்ரளய ரூபமான ஸம்ஹாரம் முடிந்த பிறகு உலகத்தை பகவான் மறுபடி உண்டாக்குகிறார். அதற்கென்ன செய்கிறார் என்றால் ஆனந்தத் தாண்டவம் ஆடுகிறார். உலகத்தை அழித்ததும் தாண்டவம்தான். ஆனால் அது உக்ர தாண்டவம். அதைச் செய்த காலத்தில் தேவி ஸாக்ஷிபூதையாகப் பார்த்துக் கொண்டிருந்தாளே யொழிய தான்

அதில் கலக்கவில்லை. இப்பொழுதோ, ஆனந்தக் கூத்தன் ஆடும்போது தானும் சேர்ந்து லாஸ்யம் என்ற நளின முறையில் நர்த்தனம் புரிகிறாள். அவள் சேர்க்கையாலேயே உலகம் உயிர் பெறுவதோடு அருளும் பெறுகிறது. தகப்பனைப் பெற்றதுபோல் தாயையும் பெற்று விளங்குகிறது. இந்தப் புது ஸ்ருஷ்டியில் ஈடுபட்டு நடனம் புரியும் அவஸரத்தில் பரமேசுவரனுக்கு மஹா பைரவர் என்றும் மகாதேவிக்கு ஆனந்த பைரவி என்றும் மந்திர சாஸ்திரம் பெயரிட்டழைக்கிறது. இந்தக் காரணத்தினால் தானா ஆனந்த பைரவி ராகத்திற்கு அந்தப் பெயர் ஏற்பட்டது என்று கேட்டால் நான் தீர்மானமாக 'ஆம்' என்று சொல்ல முடியாது. அது ஆராய்ச்சியாளர்கள் புகுந்து பார்க்க வேண்டிய விஷயம். ஆனால் ஒன்று தைரியமாகச் சொல்லலா மென்று தோன்றுகிறது. ஸ்ரீ சியாமா சாஸ்திரிகளுடைய ஆனந்த பைரவி கிருதிகளில் உலகத்தை உஜ்ஜீவிக்கச் செய்யும் தேவியின் லாஸ்ய நர்த்தனத்தையே நாம் காண்கிறோம் என்றுதான் சொல்ல வேணும். 'ஹிமாசலதனயே' என்று ஆரம்பிக்கும் ஒரு அபூர்வக் கிருதியை இந்த ராகத்தில் அவர் அருளியிருக்கிறார். சுமார் 30 வருஷங்களுக்குமுன் இதை ஸஹஜமாகக் கையாண்டு வந்தார்கள். இப்பொழுது இது கச்சேரிகளிலோ மற்றவிடங்களிலோ கேட்பது அரிதாகி விட்டது. இது நமது துர்ப்பாக்கியமென்றே சொல்லவேணும். (இந்த மாதிரிக் கஷ்டம் இதர ஸாஹித்ய கர்த்தாக்களுக்கும் ஸம்பவிக்கிறது. ஸ்ரீ தியாகையரவர்களுக்குச் சொந்தமென்றே சொல்லக்கூடிய கரஹரப்ரியா ராகத்தில் அவர் அமைத்துள்ள ஆச்சரியான கிருதிகள் பல வரவர கிராக்கியாகிக்கொண்டே வருவது ரஸிகர்கள் அறிந்து வருந்திவரும் விஷயம். நூற்றுக்கணக்கான ஸாஹித்யங்களை இயற்றியிருக்கும் ஐயரவர்கள் கிருதிகளிலே ஒன்றிரண்டைக்கூட இழக்க நமக்கு மனமில்லையென்றால் எல்லாமாகச் சுமார் 20 உருப்படிகளே மிச்சப்பட்டிருக்கும் சியாமா சாஸ்திரிகள் கிருதிகளில் சிகரம் போல் விளங்கும் உருப்படிகளைக் கைவிடலாமா ?) இந்த 'ஹிமாசலதனயே' கிருதியை, அதுவும் முக்கியமாக 'உமா ஹம்ஸகமா' என்று துவக்கும் இரண்டாவது சரணத்தைச் சாரீரம் வாய்ந்தவர்கள் பாவத்துடன் பாடினால் நூதன ஸ்ருஷ்டியைச் செய்யும் அம்பிகையின் ஆனந்த நர்த்தனத்தைக் கண்டு அவள் சிலம்பொலியைக் கேட்பதுபோலவே நமக்கு உணர்ச்சி உண்டாகும். அவளுடைய லாஸ்யத்தில் ஜீவன், இளமை, மென்மை, அருள் இக்குணங்கள் நிரம்பி யிருப்பதுபோல் மேற்படி கீர்த்தனத்திலும் 'ஓ ஜகத்தம்ப' வின் பல்லவி, அதிலும் முக்கியமாக அந்த அத்பாச்சரியமான 'ஓ' என்ற ஸம்போதனம், இதுகளிலும் 'மரிவேறே கதி' என்ற கீர்த்தனத்தின் ஸ்வர ஸாஹித்யத்திலும் இந்தக் குணங்கள் ததும்பி நிற்கின்றன. இவ்விதமே ஸ்ரீ சியாமா சாஸ்திரிகள் இதர ராகங்களில் அமைத்திருக்கும் கிருதிகளை முறைப்படிப் பாடிப் பரிசீலனை செய்தால் அந்த அந்த ராகங்களுடைய தனிச் சிறப்பும் அந்தந்த க்ருதிகளில் அவர் நமக்கு அனுபவ சீலமாக ஆகும்படி தன் உள்ளத்தில் உறைந்து கிடக்கும் 'ஸௌந்தர்ய புஞ்ச'த்தை (அல்லது லாவண்ய அலையை என்று கொண்டாலும் சரிதான்) எவ்விதம் வெளிப்படுத்துகிறார் என்பதும் நன்குவிளங்கும். இப்படி விளங்கச் செய்யவேண்டியதே 'வாக்கேயகார'னின் முதல் கடமை என்பதை ஸ்ரீசியாமா சாஸ்திரியார் உணர்ந்தவர் என்பதற்கு 'துருஸாகா' என்று ஆரம்பிக்கும் ஸாவேரி கீர்த்தனத்தில் அம்பிகையை 'ஸரஸகவிதாநிசிதே' ('ரஸம் பொருந்திய கவிதையையே சொரூபமாகக் கொண்டவளே') என்று வருணிப்பதே சான்றாகும்.

இந்த இடத்தில் சிலருக்கு ஒரு சந்தேகம் ஏற்படலாம். தெய்வநம்பிக்கை வாய்ந்தவர்களே சிறந்த வாக்கேயகாரர்களா யிருந்திருக்கிறார்கள் என்றால் ஆஸ்திக புத்தி குறைந்து வரும் இக்காலத்

தில் ஸங்கீதம் ஸாஹித்தியம் முதலியவைகள் இயற்றும் சக்தியும் குறைந்து வருகிறதா, நாளடைவிலே இந்த சக்தியே அற்றுப்போய் விடுமா என்று கவலைப்பட்டாலும் படலாம். அல்லது, தெய்வ நம்பிக்கைக்கும் இந்த ஸ்ருஷ்டி சக்திக்கும் யாதொரு சம்பந்தமுமில்லையென்றும் நாஸ்திகத்தையே பிரசாரம் பண்ணி வரும் தேசங்களிலும் ஸமூகங்களிலும் கூட அபூர்வமான ஸங்கீதம் இருக்கத்தான் செய்கிறதென்றும் அலக்ஷியமாகப் பேசினாலும் பேசலாம். பின் கூறிய கக்ஷிக்கு அத்தாக்ஷியாக ஜெர்மனி, ருஷ்யா முதலிய தேசங்களில் தற்காலத்தில்கூட மேல்நாட்டு ஸங்கீதம் ஓங்கி நிற்பதைக் குறித்துக் காட்டலாம். இந்த தேசங்களில் தெய்வநம்பிக்கை குறைந்து விட்டாலும் ஒரு விபரீத பக்தி வளர்ந்திருப்பது கவனிக்கத்தகுந்தது. ஏதோ ஒரு தனிப்பட்ட மனிதனிடத்தில் இருக்கும் மோகத்தினால் ஜனங்கள் அவனைத் தலைவனாகக் கொள்வதோடு அவனே பேசும் ஈசுவரன் என்று தங்களைத் தாங்களே ஏமாற்றிக்கொள்ளும் வகையில் கொண்டாடி ஈசுவரனுக்கிருக்கும் ஏற்றத்தை அவனிடம் காண்பதாகக் கனக்கண்டு அவனைப் பாடிப் புகழ்ந்து எக்களிக்கிறார்கள். இந்தவித உற்சாகத்தில் ஈடுபட்ட ஸங்கீத கர்த்தாக்கள், கவிகள் இவர்களும்கூட வெகுஜன மதிப்புக்குப் பாத்திரமான தலைவன் (leader, Fuehrer), அரசாங்கம்(State)உழைப்பவர் (Proletariat) என்ற விஷயங்களையே தலைமேற்கொண்டு, அவைகளுக்குத் தங்கள் கற்பனைகளை அர்ப்பணம் செய்கிறார்கள். பொதுவாகக் கற்பனா சக்திப் பிரதானமான கலைகளில் ஈடுபட்டவர்களுக்குத் தன்னைத்தான் மறக்கச் செய்யும் ஒரு பக்தி விசேஷம் இருந்தே தீர வேண்டும். இக்கருத்தைத்தான் ஐன்ஸ்டீன் என்ற பிரபல விஞ்ஞான நிபுணர், "நவீன விஞ்ஞானம்" என்ற தன் கிரந்தத்தில் பின்வருமாறு வெளிப்படுத்துகிறார் :

*"விசேஷ யோக்கியதை பொருந்திய தனிப்பட்ட மனிதர்களோ உயர்ந்த ஸமூகங்களோதான் 'ஈசுவரன்' என்றால் நம்மைப்போல் கால் கை முதலான அவயவங்களும் அந்தக் கரணமும் மற்றுமுள்ள வியவஹாரங்களும் பொருந்திய ஒரு தத்துவம் என்ற கொள்கைக்கு மேல் எழும்பக்கூடும். இவர்களிடத்தில் ஒரு விசேஷ அனுபவம் காணப்படுகிறது. இதை ஜகத் வியாபக தத்துவ அனுபவம் (cosmic religious sense) என்று கூறலாம். கேவலம் மனித வாழ்க்கையின் சிறுமையும் ஆசாபாசங்களின் நிஷ்பிரயோஜனமும்ஒரு பக்கம், பிரகிருதியிலும் புத்திக்குக் கோசரமான தத்துவ உலகத்திலும் காணப்பட்ட அந்தஸ்தும் ஆச்சரியப்படத்தக்க ஒழுங்கும் ஒரு பக்கம்; இவ்விரண்டையும் உணர்வதின் பலனாகத் தனிப்பட்ட வாழ்க்கையின்நோக்கே ஒரு பந்தமென்று தெளிந்த ஒருவன் அகண்டமும் ஸத்துமான ஜகத்தையே தத்துவம் வாய்ந்த ஒருமையாக அனுபவிக்க முயலுகிறான்.... இந்த ஜகத் வியாபக தத்துவ உணர்ச்சியை ஒருவன் மற்றவர் உணருவதற்கு

---

* Only exceptionally gifted individuals or especially noble communities rise above this level (that is, of most religions which have in common the anthropomorphic character of the idea of God): in these there is found a third level of religious experience, even if it is seldom found in a pure form. I will call it the cosmic religious sense......The individual feels the vanity of human desires and aims and the nobility and marvellous order which are revealed in nature and in the world of thought. He feels the individual destiny as an imprisonment and seeks to experience the totality of existence as a unity full of significance.........How can this cosmic religious experience be communicated from man to man? It seems to me that the most important function of art and science is to arouse and keep alive this feeling in those who are receptive.

எவ்வித உபாயம் செய்பலாம்? இவ் வுணர்ச்சி பெறுவதற்கு லாயக்கானவர்களுள்ளத்தில் இதைத் தட்டி எழுப்பி வளர்ப்பதே கலைக்கும் விஞ்ஞானத்திற்கும் முக்கியமான நோக்கமாயிருக்க வேண்டுமென்பதுதான் என் துணிபு."

இந்த ஜகத் வியாபக தத்துவமானது "ந தத்ர ஸூர்யோ பாதி" "ந சக்ஷுஷா பஸ்யதி கஸ்ச்சனைனம்" என்ற சுருதிகளிலும் இன்னும் பல வாக்கியங்களிலும் வெளியிடப்படும் அனுபவத்தில் அடங்கிய ஒரு அம்சமே. ஸகுணோபாஸனம் நிர்க்குணோபாஸனம் என்று தொன்றுதொட்டு நம் நாட்டில் கையாண்டு வரப்பட்ட இரண்டுவித ஸாதனைகளும் அதற்கு மேம்பட்ட அனுபவத்தையே குறிக்கின்றன. ஒன்று அந்தர்யாமியும் நியந்தாவுமா யிருக்கப்பட்ட பரம புருஷனை ஸகல கல்யாண குணங்களுக்கும் இருப்பிடமாக தியானிக்கிறது. கேவலம் மனிதப் பிரதி பிம்பமாக அமைந்த ஒரு மனத் தோற்றம் (anthropomorphic God) அல்ல அது; இதற்கு அத்தாக்ஷியாக 'புருஷ ஸூக்த'த்தில் வர்ணிக்கப்படும் விராட் புருஷனை நோக்குங்கால் கை, கால் என்ற அவயவக் குறிப்புத் தோன்றினும் அந்தக் 'கை', 'கால்' முதலியவைக்கும் நமது கை, கால் மற்றுமுள்ள அவயவங்களுக்கும் யாதொரு ஸம்பந்தமுமில்லை என்று விளங்கும். நிர்க்குணோபாஸனையோ 'நேதி நேதி' என்று குணாதீதமான நிலையைக் குறித்து, "அது பார்ப்பதில்லை, ஆனால் அதன் பலத்தாலேயே பார்ப்பவை எல்லாம் பார்க்கின்றன" என்று 'த்வந்த்வங்'களை நிவர்த்திக்கும் (reconciliation of opposites) வகையில் பரதத்துவத்தைப் பேசுகிறது. வாக்குக்கும் மனத்துக்கும் எட்டாததை நாம் அனுபவிக்கச் செய்யும் வழி யோக வழி. இதையே ரஸானுபவமாகக் கவிகளும் 'வாக்கேயகாரர்'களும் நாம் ஓரளவு பெறச்செய்வது தங்கள் கலைச் சாதுரியத்தால்தான்.

வால்மீகி மஹர்ஷி ஸ்ரீமத் ராமாயணத்தில் ஸ்ரீராமனைப் பெரும்பாலும் ஸமஸ்த கல்யாண குணங்களும் பொருந்திய திவ்ய மங்களமூர்த்தியா யனுபவிக்கிறா ரென்றாலும் இடையிடையே வைத்திருக்கும் சில குறிப்புகளைக்கொண்டு ராமனை பரதத்துவமாகப்பாவிக்கிறார் என்பது'கூட'மாய் விளங்கும். ப்ரஹ்மாதிகள் ஸ்தோத்திரம் பண்ணி 'நீ யாரென்றறிந்தாயா?' என்று கேட்கையில் 'ராமன், தசரதன் பிள்ளை என்று எண்ணிக்கொண் டிருக்கிறேன்' என்கிறார். அவர்கள் 'நீ ஸாக்ஷாத் வைகுண்டபதி' என்று சொன்ன பிறகும் அதை அவர் விவகாரத்தில் ஏற்றுப் பேசினதாகவாவது நடந்ததாவது தெரியவில்லை. ஆகிலும் ஆவேசத்துக்குகந்த சில ஸமயங்களில் 'அத்ய ராமஸ்ய ராமத்வம் பச்யந்து' என்றும், 'மம வா த்ர்யம்பகஸ்ய வா' என்றும், 'மூன்று ஜகத்தையும் விளையாட்டாய் என் கட்டை விரலால் தொம்சம் செய்ய நான் வல்லவன்' என்றும் பேசுகிறார்; இது வீண் வீறுப்பு என்று யாரும் ஏமாறமாட்டார்கள். தவிர, உயிருக்குயிரான சீதையை அக்னியிலிறங்க அனுமதிக்கிறார்; உயிரொன்று உடலிரண்டு என்று பிரியவொண்ணு உறவு வாய்ந்த லக்ஷ்மணனைத் தியாகம் பண்ணுகிறார்; சுக்ரீவன் தடுத்தும் விபீஷணனை ஆட்கொள்ளுகிறார்; சரணாகதி செய்த விபீஷணன் திகைக்கும்படி "ஜநோயம் ஸ்வஜநோ மம" என்று குரங்குகளுக்கும் தனக்கும் உள்ள உறவு அவனுக்கும் தனக்கும்கூடக் கிடையாது என்று சூசிப்பிப்பதுபோல் வெடுக்கென்று பேசுகிறார். சங்கல்ப பூர்வமாக வாலியைக் கொன்றுவிட்டு அவன் பெண்டாட்டி பிள்ளை துக்கிப்பதைவிட ஜாஸ்தி துக்கிக்கிறார். இப்படியெல்லாம் காட்டுவதின் கருத்தென்ன? ப்ரஹ்மத்திற்குப் பெண்டாட்டி பிள்ளை கிடையாது, விருப்பு வெறுப்புக் கிடையாது, நம் மனதைக் கொண்டு நிர்ணயிக்கும் எவ்வழியிலும் அது கட்டுப்படாது என்று காட்டவன்றோ மஹர்ஷி ஸ்ரீ ராமனை இந்த அவஸரங்களில் நாம் பார்க்கச் செய்கிறார்?

இவ்விதமே கர்நாட ஸங்கீதத்தின் சிரோமணிகளான அய்யரவர்கள், தீக்ஷிதர், சியாமா சாஸ்திரிகள் இவர்களும் ஸகுணோபாஸனையில் ஈடுபட்டிருந்தாலும் நிர்க்குண நிராகாரமான ஸத்துப் பொருளை அவர்களுடைய கிருதிகள் இடையிடையே வியஞ்சகமாகக் காட்டத்தான் செய்கின்றன. ஆனால் கவிகள் கவிதா ரஸத்தைக் கையாண்டு இதைச் செய்வதுபோல் இவர்கள் ராகம் தாளம் இரண்டையுமே முக்கிய ஸாதனங்களாகக்கொண்டு ஸாஹித்தியத்தை இரண்டாவது பக்ஷமாக வைத்து அதிரஹஸ்யமான உண்மைகளை நாம் உணரச் செய்கிறார்கள். அதிஸூக்ஷ்மமாயும் 'ஸந்திக்த'மாயுமுள்ள ஒரு பாவத்தை ஸாஹித்தியம் அர்த்த வாயிலாக மனதுக்குப் படச்செய்ய எத்தனிக்கையில் அதைப் பல்வேறு அம்சங்களாய்ப் பிரித்து விவரிக்க வேண்டியிருக்கிறது. தாளக்கட்டோடமைந்த ராகமயமான 'தாது'வோ, ஹிருதயத்துடன் பேசும் சக்தி வாய்ந்ததால் அதே பாவத்தை ஒருமையாகவும் புஷ்டிக்குறைவுபடாத வகையிலும் நாம் பார்க்கும்படிச் செய்கிறது*. (இந்த விடத்தில் 'பார்த்தல்' என்பது 'ஆத்மாவாரே த்ரஷ்டவ்யஹ' என்ற உபநிஷத்வாக்கியத்தில் குறிக்கப்பட்ட ஸாக்ஷாத்காரம் போன்ற அனுபவம் என்று கொள்ளவேண்டும்). உதாரணமாக அய்யரவர்களுடைய 'ராமபாண'மென்று துவங்கும் ஸாவேரி கீர்த்தனத்தை எடுத்துக்கொள்வோம். ராமபாணத்தின் வல்லமையையும் அதன் பிரதாபத்தையும் அயோக்கியர்களைச் சிக்ஷித்து ஜயகோஷம் செய்து அடியார்களைக் களிக்கச் செய்யும் அதனிடத்தில் வியக்கத்தக்க விதத்தில் விபரீத குணங்கள் பொருந்தியிருப்பதையும் இக்கீர்த்தனத்தின் வார்த்தைகளில் பொதிந்து கிடக்கும் அர்த்தம் படிப்படியாய் விளக்குகிறது. ஸங்கீதத்தைக் கவனிக்குங்கால் காவிரியாற்றின் பூர்ணப்ரவாஹம் போன்ற ஸாவேரியின் 'கதி'யில் இந்தப் பல்வேறு அர்த்தங்களும் ராகபாவத்தில் அன்வயமாகி ஒருமைப்பட்டு விடுகின்றன. இம்மாதிரியாகவே ஸ்ரீசியாமா சாஸ்திரிகள் கீர்த்தனங்களை ஆராய்ந்தால் இவர் தன் இஷ்ட தேவதையின் ஸௌலப்யத்திலும், அன்பிலும் அருளிலும் அளவு கடந்து ஈடுபடும் தருணத்திலும் அவள் பரவஸ்து என்ற எண்ணம் தொனிக்கும்படியே பேசுகிறார். "பாலிம்சுகாமாக்ஷி" கீர்த்தனம் இரண்டாவது சரணத்தில், "ஆகா, இந்த மூர்த்திக்குத்தான் என்னதேஜஸ், இதன் கீர்த்திக்குத்தான் என்ன பிரகாசம், என்ன உத்கிருஷ்ட குணங்கள் நிரம்பியது, மூன்றுலகிலும் தேடினாலும் இது போல் காணக்கிடைக்குமா! ஜன்மாந்தரங்களில் என்ன நோன்பு நோற்றேனோ உன் பாதபத்மங்களைக் காண" என்று ஆனந்தபரவச மடைந்து பேசுவதும் அதைத் தொடர்ந்து அடுத்த சரணத்தில் ராஜாதி ராஜர்கள் ஸேவை செய்து நிற்கும் அந்த திவ்ய ஸந்நிதியை வருணிப்பதும், அம்பாளை 'ஜகத்ஸாக்ஷி' என்றும் 'ப்ரஸன்ன பராசக்தி' என்றும் ஸம்போதனம் பண்ணுவதும் 'வேதாஹமேதம் புருஷம் மஹாந்தம் ஆதித்ய வர்ணம் தமஸ: பரஸ்தாத்" என்று போற்றப்படும் பரஞ்ஜோதியை அல்லவா நினைவூட்டுகிறது? இந்தப் பரமானுபவத்திற்கேற்ற சாந்தம் நிரம்பிய ஆனந்தத்தை வெளிப்படுத்த மத்தியமாவதி போன்ற ராகம் வேறுண்டோ? 'கனக சைலவிஹாரிணி' என்ற கீர்த்தனத்தில் மஹாமேருவிலிருக்கும் காமகோடியின் ஸௌசீல்யத்தை நம் போன்றவர் அணுகமுடியுமா என்று நாம் ஏங்கும்படியல்லவோ அந்தப் புன்னகைவாளி செய்கிறது? ஆனாலும் பவாப்தியைத் தாண்ட அவளே நமக்கு ஓடமாய் வாய்க்

---

* நம் ஸங்கீதத்திற் கடிப்படையான 22 'சுருதி'கள் ஒவ்வொன்றும் ஒரு ரஸத்தையோ ஒன்றுக்கு மேற்பட்ட ரஸங்களையோ கேட்பவர் மனதில் ஊறச் செய்யும் சக்தி வாய்ந்தது என்றும், 'ரஸ விபாக'த்தையொட்டி இந்த சுருதிகளை 'ஜாதி'களாக வகுக்கலாமென்றும், ஒவ்வொரு ராகத்திலும் எந்த ஜாதி அமைகிறதோ அதற்குரிய ரஸமே அந்த ராகத்திற்கு முக்கியம் என்றும் பூர்வாசாரியர்கள் விஸ்தாரமாக விவரிக்கிறார்கள்.

கிறாள் ; நிக்ரஹானுக்ரஹம் இரண்டும் அவளிடம் அழகாய்ப் பொருந்தியதால்லவா அஸுரர்களை அழிக்க வில்லை ஏந்தினபோதிலும் அது கரும்பு வில்லாய் அமைந்தது ? அவள் ஏற்றத்துக்கும் நமது தாழ்வுக்கும் நம் ஏக்கமே ஒரு பாலமாய் அமைவதென்பது அந்தப் புன்னகவராளியின் சைலியிலேயே விளங்கும். இந்தக் கீர்த்தனத்தில் அனேகமாக அம்பிகையின் திவ்ய நாமாக்களையே மாலையாகக் கோத்திருப்பதும் கவனிக்கத் தகுந்தது. அப்படிச் செய்தும் ராக பாவம் அந்த நாமாவளியில் ததும்பி நிற்கிறது. இதற்கனுகுணமாக 'ஸ்வராக்ஷர ஸம்யோகம்' என்ற அபூர்வ விசேஷம் சாஸ்திரிகள் கீர்த்தனங்களில் அமைந்து அவைகளை அழகுபடுத்துகிறது.

சியாமா சாஸ்திரிகளின் கீர்த்தனங்களுக்குத் தனிச் சிறப்பு அவைகளுடைய அத்புதமான தாளக்கட்டு என்பது பிரஸித்தம். மேலான கலை ஸங்கீதம் எதிலும் இது முக்கியமான அம்சமே. இருந்தாலும் ஸ்ரீ தியாகராஜ கிருதிகள் போன்ற பல மகான்களின் ஸாஹித்யங்கள் ஜாஸ்தி மத்யம காலத்திலும் ஆதிதாளம் போன்ற சுலபமான தாளங்களிலுமே அமைக்கப்பட்டிருக்கின்றன. இது காரணம்பற்றியே நாளடைவில் தாள வேற்றுமைகள் கூட இக்கீர்த்தனங்களில் பலவற்றிற்குப் பாடுபவர் மனப்போக்குப் பிரகாரம் ஏற்பட்டு விட்டன என்று ஸம்பிரதாயம் தெரிந்த பெரியவர்கள் வருந்தக் கேட்டிருக்கிறோம். சியாமா சாஸ்திரிகள் கீர்த்தனங்களில் தாளம் ஸங்கீதத்திற்கு வெறும் சாரம்போல் நிற்பதல்ல. வெகுவாய்ச் சௌககாலத்தில் அமைந்த இந்தக் கிருதிகளில் ராகத்தோடும் பாவத்தோடும் தாளமும் சேர்த்து வார்க்கப்பட்டாப்போல் அவைகளிலிருந்து பிரிக்கமுடியாத வகையில், ஐன்ஸ்டீன் என்ற மேதாவியின் space-time continuum என்ற பாவத்தில் time என்ற அம்சம் எப்படிக் கலந்து நிற்கிறதோ அப்படி ஊடுருவி நிற்கிறது. அதனாலேயே காலத்தைத் 'த்ருத' மாக எடுத்தாலோ தாளத்தை மாற்றினாலோ இந்த கிருதிகள் சொரூபம் தெரியாமல் ஆகிவிடுகின்றன. சாஸ்திரிகளுடைய ஸங்கீத தர்மத்தில் நாட்டியத்திற்குச் சொந்தமான dynamism, rhythmic evolution என்ற அம்சங்கள் பிரதிபலிக்கின்றன.

இந்தத் தாள பிகுவால் இவருடைய கிருதிகளைக் கண்டு அரைகுறை ஞானமுள்ளவர்கள் பயப்படுகிறார்கள். அதிகமாய் அவைகளில் உழைக்காமலும் விட்டுவிடுகிறார்கள். இது தவறு. பாவத்துடன் பாடக் கற்றுக்கொண்டால் சரியான காலப்ரமாணம் அமைந்துவிடும் ; தாளக்கட்டும் மனதுக்குத் தெளிந்துவிடும். அதிலிருந்து ஒரு தனி இன்பம் பிறக்கும். இவர் கீர்த்தனங்களில் அடங்கிய அர்த்த பாவங்கள் வசீகரமானவை. குழந்தை தாயை அண்டுவதுபோல் அம்பிகையை அண்டுகிறார். குழந்தையின் மழலைச் சொற்கள்போல் இவருடைய தெலுங்கும், ஸம்ஸ்கிருதமும் மதுரம் வாய்ந்திருப்பதோடு அவர் கவனங்களில் சில பத ப்ரயோகங்களே அடிக்கடி திரும்பி வரும். இவ்விதம் ஸாஹித்தியத்தில் உபயோகப்படும் வார்த்தைகள் குறைவாயிருப்பதால் இந்த பாஷைகள் தெரியாதவர்களும் இவருடைய கிருதிகளை எளிதில் அர்த்தத்துடன் கற்றுக்கொண்டு விடலாம். கையாளும் வார்த்தைகள் சொற்பமாயிருந்தாலும் அவைகளை வைத்துக்கொண்டு என்னென்ன விதரணைகள் செய்கிறார் ! 'த்ரிலோகமாதா' என்று ஆரம்பிக்கும் பரஜு கீர்த்தனத்தில் தனக்கிருக்கும் தாஹத்தைத் தெரிவிக்கிறார். "தென்றல்போன்ற குளிர்ந்த பார்வையை என்மேல் திருப்பேன் !" என்று யாசிக்கிறார். "உன்னை நம்பின நான் கஷ்டப்படலாமா ? ஏதேதோ எண்ணி இறுமாந்தேனே, என் எண்ணம் நிறைவேற நீயன்றி வேறு வழியுண்டா ? நான் அகிஞ்சனன் ; அதனாலேயே உன் கிருபைக்குப் பாத்திரம். உன் குழந்தையல்லவா நான் ? இரண்டுங்கட்டான் பிள்ளைதான். இருந்தாலும் காக்கைக்கும் தன் குஞ்சு பொன்

குஞ்சு என்பார்களே, உன்னைப் புகழ்ந்து உன் அடி பேணிக் கிடக்கும் என் குற்றங்களை மறந்து 'பயப்படாதே' என்று ஒரு வார்த்தை சொல்லக் கூடாதா?" என்று அழகாய்ப் பேசுகிறார். "துரூஸூகா" என்று துவங்கும் ஸாவேரி கீர்த்தனத்தில் இந்த அருள் வேட்கை இன்னும் தீவிரமாகிறது. சாஸ்திரிகளுடைய கிருதிகள் நமக்குக்கிடைத்துள்ளவைகளில்இது ஒன்றிலேதான் சோகம் தொனிக்கிறதென்று சொல்லலாம். அது ஆத்ம விசாரத்தில் நடுவே ஏற்படும் சோகம். அரோக திருட சரீரம் வேண்டுகிறார். "அதென்ன, அவருக்கு எந்தக் காலத்திலாவது தேக அசௌகரியம் ஏற்பட்டுக் கவலை மிகுதியால் இவ்விதம் அம்பாளை வேண்டினாரா?" என்றெல்லாம் நாம் சர்ச்சை பண்ண வேண்டுவதில்லை. அப்படி அவர் வேண்டியிருந்தாரானால் அதில் தப்பொன்றுமில்லை. அரோக திருட சரீரத்தை எதற்காக வேண்டினார்? இந்த கிருதியில் அம்பிகையை 'தர்ம ஸம்வர்த்தினி!' என்று அழைப்பது குறிப்பிடத் தகுந்தது. "அறம் வளர்ப்பவளே, 'சரீர மாத்யம் கலு தர்ம ஸாதனம்' என்று சாஸ்திரம் சொல்லுகிறதே. திருட சரீரத்தை நீ கொடுத்தருளினாலன்றோ நான் தர்மத்தைச் செய்து உன் திருவுளப்படி நடக்கலாம்? உன் எண்ணத்தை அறிந்து பரைசாற்றுவது என்பதை என் கடமையாகக்கொண்டவன் நான். நீ என்ன எண்ணி யிருக்கிறாயோ! உன் ஸந்நிதியில் வந்து நின்று உன் திவ்ய மங்கள விக்ரஹத்தின் ஸௌந்தரியத்தில் ஈடுபட்டுத் துதிப்பவர்கள் தன்யர்கள்" என்று மனமிளகி வேண்டுகிறார். பைரவி ஸ்வரஜதி'காமாக்ஷி அம்பா'விலுள்ள எட்டுச் சரணங்களில் எட்டுவித அர்த்தங்களை வெகு ஏற்கையாய் வழங்குகிறதை இங்கே சற்று விவரிப்போம். பரதேவதையே சரணமென்று துணிபவன் எது காரணம்பற்றி அந்த முடிவுக்கு வருகிறான்? (1) முதலில் அவள் கடாக்ஷம் விழுகிறது. (2) அதன் ஸௌம்ய குணத்தை உணருகிறான். (3) 'ஆர்த்த'னான பக்தனைக் காப்பாற்ற விரைந்து வரும் அவள் அவனை வாதிக்கும் இன்னல்களை வறுக்க வேகம் கொள்கிறாள். (4) அந்தத் தொல்லைகள் அவளைக் கண்டு அலறி ஓட அவளுடைய தயை பக்தன்மேல் குளிர விழுகிறது. (5) "பாவனியாயிற்றே, பக்திப் பிச்சை கொடம்மா" என்று வேண்டுகிறான். (6) பக்தியை அடைந்தவன் ஸமஸ்த ஸந்தேகங்களைத் தீர்ப்பவளும் அவளே என்று வேத வாயிலாய்த் தெரிந்துகொண்டு அவள் ஆதரவால் அவைகளினின்றும் விடுபடுகிறான். (7) அப்பொழுது ஸமஸ்த கல்யாண குணங்களுக்குமவள் இருப்பிடம் என்று உணர்ந்து அவைகளில் ஈடுபட்டு அபயம் வேண்டுகிறான். (8) அவளுடைய கிட்டமுடியாத பெருமையையும் மேன்மையையும்கண்டு சற்றுத் திகைக்க நேரிடுகிறது. உடனே லோக மாதாவாயும் பரதேவதையாயு மிருப்பவள் தனக்கும் தாய் என்ற உறவை ஞாபகப் படுத்திக்கொண்டு "ஸூதுடம்மா, அபிமானமு லேதா நாபை?" என்று ஸ்வாதீனமாயும் தைர்யமாயும் வேண்டுகிறான். பதிலைப்பற்றிச் சந்தேகம் ஏது? இந்த கம்பீர அர்த்தங்களை பைரவி ராகம் பலவிதச் 'சாயை'களால் மேன்மை படுத்திக் காட்டுகிறது. இதுபோல் 'ப்ரோவவம்ம' என்ற மாஞ்சி கீர்த்தனத்தில் அந்த அருமையான ராகம் உருவெடுத்து நிற்பதையும், முக்கியமாகப் பல்லவியில் வரும் 'பிரான' என்ற பதத்தில் அதன் ஜீவனையே வைத்திருப்பதையும் நாம் உணர்ந்து ஆனந்தப்பட வேண்டியிருக்க, இந்தக் கிருதியை பைரவியில் பாடும் புது வழக்கம் அவ்வளவு அழகாகப் படவில்லை.

இவ்விதம் அதியாச்சரியமான கிருதிகளைச் செய்திருக்கும் இந்த மகானை நம் நாடு போற்றுவதோடு திருப்தியடையாமல் அவருடைய ஸங்கீத நிதியை ஜாக்கிரதையாகக் காப்பாற்றி என்றைக்கும் அழியாத ஸங்கீதச் செல்வத்தை அதன் மூலம் வளர்க்க முயலவேண்டும்.


# கொஹிமா, காபா

## பிரதேசங்கள்மேல் நமது வெடி விமானங்கள்

"....இன்று நமது ஆகாய விமானங்கள் விரோதி நாட்டின்மீது பறந்து ஆயிரக்கணக்கான பவுண்டு இடையுள்ள குண்டுகளைப்போட்டு விரோதியின் இடங்களையும், கோட்டைகளையும் துருப்புக்களையும் தகர்த்தன ..."

இது உருவகமானதோர் அறிக்கை. இதனுள்தான் நமது இந்திய விமானிகளின் வீரச் செய்கைகளும் மற்ற வேலைகளின் சரித்திரமும் அடங்கியுள்ளன. நாம அவர்களிடம் வைத்திருந்த நம்பிக்கையை அவர்கள் ருசுப்படுத்திவிட்டனர். ஆகாயத்திலும், பூமியிலும் உலகிலேயே மோசமான சீதோஷ்ண ஸ்திதியிலும், பயங்கரமான காடுகளிலும் அவர்கள் காண்பித்த வீரம், தீரம், பொறுமை இவைகளை நேரில் கண்டவர்களிடமும், அவர்கள் வேலைகளை அறிந்தவர்களிடமும் அவர்கள் புகழ்ச்சியைப் பெற்றனர்.

இன்று அரக்கானிலும், பர்மாவிலும் விரோதிகள் கைப்பற்றிக்கொண்டிருக்கும் காடுகளின் மீது, இந்திய ஆகாய படையின் சண்டை விமானங்களும், பருந்துப்பாய்ச்சல் வெடிகுண்டு விமானங்களும், ரோந்து விமானங்களும் முழு பலத்துடன் வேலை செய்கின்றன.



இந்திய விமானங்கள் கொஹிமா மீதும் காபா மீதும் ஆதிக்கம் வகித்து வந்தன. இன்று அவைகள் பர்மாமீது பறக்கின்றன. ஹரிக்கேன் விமானங்களும, வல்டி வென்ஜென்ஸ் விமானங்களும் ஜப்பானியர்களுக்கு சாவையும் நாசத்தையும் பொழிகின்றன. இந்திய விமானிகளைப்பற்றி இந்தியா பெருமையடைகிறது.

ஜப்பானியர்களைத் தோற்கடிக்க நம்மால் முடியும்,

# தோற்கடித்து வருகிறோமென்பதை இவர்கள் மெய்ப்பிக்கிறார்கள்

தேசிய போர்முனையின் பிரசுரம்

AAA 1308-ATM

# ஊருடன் பகைக்கின்

[வே. நாராயணன்]

" ஊரோடு ஒத்து வாழ்" என்பது இதோபதேசம். 'அவரவர் தத்தம் மனச் சாட்சிப்படி நடப்பதுதானே நேர்மை? அதற்கு மாருக, தன் மனச் சாட்சியின் போக்கைவிட்டு மாறி ஊரார் போக்கின்படி போகவேண்டும் என்று உபதேசிப்பது நன்ருே?' என்ருல், நன்றே என்று கூறுவர் ஞானிகள் பலரும். பகவத் கீதையிலே, பகவான் சொல்கிருர்:

" பரத குலத்தோனே! அறிவிலிகள் எவ்வாறு பற்றுடையவர்களாய் காரியங்களைச் செய்கிருர்களோ, அவ்வாறே அறிவாளி பற்றற்றவனுய் உலக நன்மையைச் செய்ய விரும்பி காரியங்களைச் செய்ய வேண்டும்" என்று. ஆகையால், நானே சிறந்த அறிவாளி என்பவனும் ஊரோடு ஒத்துப் போக வேண்டும். நிர்வாண தேசத்தில் கௌபீனதாரி பைத்தியக்காரனுகவே கருதப்படுவான். ஒருவேளை அவனை அறிவாளி என்று அறிந்து அவனைப் பின்பற்ற உலகோர் நினைத்தாலும், அதனுல் அவர்களுக்கு இருக்கும் புத்தி குழம்பிவிடும். அவர்கள், 'இன்ன காரியம் நான் செய்தற்குரியது; இந்தக் காரியத்தின் பலனை நான் அனுபவிக்க வேண்டும்' என்று தங்கள் புத்தியாலே செய்துள்ள தீர்மானம் குலைந்து போகும்; அவ்வாறு குலைக்கக்கூடாது. பின், அறிவாளி என்ன செய்ய வேண்டும் என்ருல், அறிவிலிகள் பயனை விரும்பிக் காரியங்களில் எப்படி ஈடுபடுகின்ருர்களோ அப்படியே அறிவாளிகள் அந்தக் காரியங்களின் பயனை விரும்பாத பற்றற்ற மனத்தோடு அவற்றைச் செய்ய வேண்டும். இதுதான் கீதாசார்யன் செய்யும் உபதேசம்.

மேலும், 'நான் அறிவாளி' என்று நினைத்துக் கொண்டல்லவா, ஒருவன் ஊரோடு ஒத்துப் போகாமல் ஊரைக் கலங்க அடிக்கிருன்? அவன் செயலே அவனை அறிவாளி அல்லன் என்று நிரூபிக்கின்றது. அறிவாளியாயின், அகம் பாவத்தையும் என்னுடையது என்னும் உணர்ச்சியையும் போக்கிக்கொள்ள அல்லவா முயல்வான்? அதற்கு உலக வழக்கத்திலுள்ள கட்டுப்பாடுகளை யெல்லாம் சாதனங்களாகக் கொள்வானேயன்றி, அக்கட்டுப்பாடுகளைச் சீர்தூக்கிப் பார்த்துச் சீர்திருத்த முன்வருவானே? எல்லாரிடத்திலும் ஒரே ஆத்மா உள்ளது என்ற உணர்ச்சியை வளர்ப்பவனே அறிவாளி என்ருல், அவ்வவர்கள் செய்கையெல்லாம் இவன் மனத்திற்கு ஒத்ததாக இருக்க வேண்டும் அன்ருே? ஊரார் அனைவரும் அக்கிரமஞ் செய்கிருர்கள் என்றுகொண்டு அவர்களைப் பகைத்து அவர்களுக்குத் துன்பம் விளைக்கக் கருதினுல், அவனை அகங்காரமும் மமதையுங்கொண்ட அசுரப் பிறவி என்றே நாம் கருத வேண்டும், 'ஊரார் எப்படி நடந்து கொள்கிருர்களோ, அதுவே நல்வழி' என்றுகொண்டு ஊரோடு ஒத்துவாழ்வோர்களே சாதுக்கள். அவர்களை எதிர்த்துக்கொண்டால், ஒவ்வொருவனும் தன் 'சிறிய புன்மதிப் பேதைமை'யின் வசப்பட்டு, வழி தடுமாறித் திகைத்துப்போய்ச் செயலற்று அழிந்து போவான் என்னும் உண்மையைத்தான் " ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்" என்னும் முதுமொழி வற்புறுத்துகின்றது. பகவான் " நல்லோரைக் காப்பதற்கும் தீவினையாளரை வேரோடு கேடுறுத்துதற்கும் அறத்தை நிலை நிறுத்துதற்குமே அவ்வக் காலத்திலே அவதரிக்கிறேன்" என்று அருளியதற்கும், " ஊருடன் பகைப்பவர்கள் தீவினையாளர்; அவர்களைக் கடவுள் வேருடன் அழிப்பார்" என்றே பொருள் கொள்வது பொருத்தமாகும்.

வேண்டுதல் வேண்டாமை யில்லாதவனை அறிவாளி; அவனுக்குப் பிரியனுமில்லை, பகைத்தற்குரியவனுமில்லை. "பிறனைத் துன்புறுத்துங் காரியத்திலே மனஞ் செலுத்துவோனாக இராதே" என்கிறார் மனுச் சக்கிரவர்த்தி. பிறன் ஒருவனையும் பகைக்கூடாது என்றால், ஊர் முழுவதையும் பகைத்துக்கொள்ளக் கூடாது என்று வேறு சொல்ல வேண்டுமோ? 'பிறன் என்னைப் பகைக்கிறானே' என்றால், 'சும்மா இருந்துவிடு. அவன் பகை உன்னை என்ன செய்யும்? பகைக்கப்படுவோன் சுகமாகத் தூங்கிச் சுகமாக எழுந்துச் சுகமாகக் காலங் கழிப்பான். பகைப்பவனன்றோ இராப் பகல் தூங்காமல் எப்படித் தன் வஞ்சத்தைத் தீர்த்துக் கொள்வது என்று தவிப்பான்' என்று பகைக்கப் படுவோனுக்குப் பொறுமையை உபதேசஞ் செய்கிறார் வேதம் புகழும் மனு என்பவர். சுக்கிர நீதியிலும் எல்லா மக்களுக்கும் பொதுவாக உபதேசிக்குமிடத்து, "அறிவுடையார்க்கு எல்லாச் செயல்களிலும் உலகமே ஆசிரியனாகும்; ஆகலின், பகுத்துணரும் அறிஞன் உலகியலை உணர்தற் பொருட்டு அவ்வுலகத்தையே பின்பற்றல் வேண்டும்" என்று கூறுகின்றது. இவ்வுண்மையைத் தான் திருவள்ளுவரும்,

உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பல கற்றும்
கல்லார் அறிவிலாதார்

என்று விளங்க வைத்தார். ஆகையால் அறிவாளி என்று தன்னைத் தானே அறிந்துகொள்பவன் தன் அறிவின்படியெல்லாம் ஒழுகாமலும் உலகத்தோடு ஒத்து ஊராரைப் பழியாமலும் அவமதியாமலும் அவர்கள் செய்யுங் காரியங்களையே தானும் செய்வான்; ஆனால் அக்காரியங்களால் விளையும் பயனை எதிர்பாராமலும் செய்யுங் காரியத்தில் விசேஷப் பற்று வையாமலும் ஊக்கத்தோடும் முழு மனதோடும் அக்காரியங்களைச் செய்து முடிப்பான். அறிவிலியாய்க் கெடுவானோ, தான் அபூர்வமான மேதாவி என்றும் சதுரன் என்றும் கர்வங்கொண்டும் ஊராரை இகழ்ந்து விரோதஞ் செய்துகொண்டும் தன் வாழ்க்கையைக் குலைத்துச் சீர்கேடுறும்படி செய்து, தன்னோடு தன் குலமும் வேரோடு அழிந்து போம்படி நடந்துகொள்வான்.

# தாசில்தார்

இப்பொழுது எடுக்கப்படும் தெலுங்குப் படங்கள் எண்ணிக்கையில் சொற்பமேயொழிய டெக்னிக் விஷயத்திலும், நடிப்பிலும் அபாரமாகவே இருந்து வருகிறது. அதற்கு ஓர் உதாரணமாக ஒய். வி. ராவ் தயாரித்த "தாசில்தாரை"ச் சொல்லலாம். தாசில்தாரில் நாகரிகத்தின் விபரீதப் போக்கும், பழைய பழக்கவழக்கங்களின் உயரிய அம்சங்களும் நன்றாகச் சித்திரிக்கப்பட்டிருக்கின்றன. கதையின் சாராம்சமாவது :—

ஸ்ரீதரல் என்ற தாசில்தாரும், கமலா என்ற அவனது பத்தினியும் குதூகலமாக வாழ்க்கையை நடத்திவருகின்றனர். ஆனால் தனது நண்பன் காமேசனின் துர்ச்செயல்களால் ரஜனி என்ற கன்னியின்மீது தரல், மோகங்கொண்டு தனது மனைவியை வெறுத்துத் தள்ளிவிடுகிறான். ரஜனியின் நாகரிகப்போக்கினால் தரல் பல கஷ்டங்களுக்காளாகிக் கடைசியில் தன் மனைவியை அடைந்து சந்தோஷமடைகிறான்.

தர்ம பத்தினி கமலாவாகப் பானுமதி அபாரமாக நடித்திருக்கிறார். மற்றும் காமேசனாக நடிக்கும் ஒய். வி. ராவ், தரலாக நடிக்கும் ஸ்ரீ நாராயண ராவ், ரஜனியாகத் தோன்றும் ஸ்ரீமதி கமலா கோட்னிஸ் முதலியவர்கள் உணர்ச்சியுடன் நடித்திருக்கின்றனர். மேலும் டைரக்ஷன், எடிட்டிங், ஒலி, ஒளிப்பதிவு முதலியவைகள் உயர்தரமாகவே இருக்கின்றன. மொத்தத்தில் "தாசில்தார்" எல்லோரும் பார்க்கவேண்டிய படமே.



இப்பொழுது நடைபெறுகிறது.
காரைக்குடி
சித்தூர்
காகினடா
ஏலூர்
பெர்ஹாம்பூர்
மதனபள்ளி
ராமசந்திரபுரம்
தாசில்தார்
தெலுங்கு
டைரக்ஷன்: Y. V. ராவ்
நரஸூ ரிலீஸ்

# மகாமகம்


[கௌண்டின்யன்]

**நா**ளொரு விழாவும் பொழுதொரு பூசையுமாய்க் கழிக்கும் இப்பாரதகண்டத்திலும் கும்பகோணத்தில் இம்மாதம் நடைபெறவிருக்கும் மகாமகத் திருவிழா தனிப்புகழ் வாய்ந்தது. காசியும் ராமேசுவரமும் ஸமஸ்த ஹிந்துக்களுக்கும் எப்படிப் பொதுவோ அப்படியே கங்கையின் 'மாகமேள'மும், கோதாவரியின் புஷ்கரமும் கும்பகோணத்தின் மகாமகமும் ஹிந்து ஸமூகத்துக்கே சொந்தம். இவைகள் பன்னிரு வருஷங்களுக் கொருமுறை வருவதால் மட்டும் இந்தச் சிறப்பு ஏற்பட்டதல்ல. ஸ்தலம், தீர்த்தம், மூர்த்தி, ஆகமம், ஐதிகம் என்ற பல காரணங்கள் சேர்ந்து இந்தக் கௌரவம் உண்டாகிறது. நவக்கிரகங்களுள் மேம்பட்ட குரு ஸிம்ஹ ராசியில் நிற்க சூரியன் கும்பத்திலும், பூர்ண சந்திரன் மக நக்ஷத்திரத்திலுமாக அமையும் புண்ய காலம் மகாமகம் எனப்படும். பிரளயத்தின் இறுதியில் புது ஸ்ருஷ்டியைப் பிரும்மதேவன் துவக்கியது இந்த திவ்ய க்ஷேத்திரத்திலே என்பது ஸ்தல புராணம். ஸ்ரீமத் ராமாயணத்தில்,

*ததஸ்தாம் ஆபகாம் திவ்யாம்*
ப்ரஸன்ன ஸலிலாம் சிவாம்
*த்த்ர த்ரக்ஷ்யத காவேரீம்*
விஹ்ருதாம் அப்ஸரோகணை:

(அப்ஸரஸ்திரீகள் விளையாடிக் குளிக்கும் நிர்மல ஜலம் நிறைந்த காவிரி என்னும் புனிதமான திவ்ய நதியை அங்கே காணலாம்) என்று ஸுக்ரீவனால் வருணிக்கப்பட்ட பொன்னி நதிக்கு இந்த க்ஷேத்திரத்தில் ஒரு அலாதி அமைதியும் அருளும் உண்டு. ஸ்வயம்பூவான பரமேசுவரன் கும்பேசுவரராக, நம்மாழ்வார் தொழுதேற்றின ஆராவமுதனுடனும் இந்த ஒரு திருப்பதியில் மட்டுமே கோயில் கொண்ட பிரும்மாவுடனும், எழுந்தருளி யிருப்பதால் மூர்த்தி விசேஷம் சொல்லத் தேவையில்லை.

ஐதிகமென்னவெனில், பிரளயத்தில் உலகம் அழியப்போவதை யெண்ணி லோக பிதாமகர் கவலையுற்றுப் பரமேசுவரனை வழிபட அவருக்குப் பின் வருமாறு உத்தரவாயிற்றும்: "புண்ய தேசங்களிலிருந்து மண்ணை யெடுத்து அம்ருதத்தை விட்டுப் பிசைந்து ஒரு குடம் செய்து அதில் ஸமஸ்த ஜீவப் பொருள்களுடைய வித்துக்களையும், அம்ருதத்தையும் நான்மறைகளையும் மற்றுமுள்ள சாஸ்திரங்களையும் அடைத்து மகாமேருவின் உச்சியில் வையும். ஜகத் ஏகார்ணவமாகும் காலத்தில் இந்தக் குடம் மிதந்து தக்ஷிண திசையை நோக்கிச் செல்லும். எந்தவிடத்தில் அது ஒதுங்குகிறதோ அங்கேபோய் நீர் மருபடி உம் வேலையை ஆரம்பிக்கலாம்". இவ்விதமே பிரும்மாவும் செய்ய அமுதக் குடம் தற்போது கும்பகோணம் என்று சொல்லும் இடம் வரவே பிரளய வெள்ளம் வற்ற ஆரம்பித்தது. ஈசுவரன் கிராத வேடம் பூண்டு அம்பு எய்தி குடத்தின் வாயை வெட்டித் தள்ள அந்தக் குடவாய் இப்பொழுது குடவாசல் என்று விளங்கும் இடத்தில் விழுந்து கோயிலாய் மாறினதும் அவ்விதமே குடத்திற் கிட்டிருந்த பூநூல், வில்வம் முதலிய அலங்காரங்களும் தாம் தாம் விழுந்தவிடத்தில் திருப்பதிகளாய் வேரூன்றின. உடைந்த குடத்திலிருந்து ஓடும் அம்ருதத்தைப் பொற்றாமரை என்றும் மகாமகக் குளம் என்றும் பிரஸித்தி பெற்ற தீர்த்தங்களில் தேங்கச்செய்து குடத்தினடியை அம்ருதத்தைவிட்டுப் பிசைந்து லிங்க ரூபமாக்கி அது விழுந்த இடத்திலேயே பிரதிஷ்டை செய்து தான் பூரண ஸாந்நித்தியத்தோடு அதில் குடிகொள்ளத்



## பெண்களுக்கு சுயநலமற்றதும் கௌரவப்படுத்தக் கூடியதுமான சுயேச்சை வாழ்க்கை

ஒரு பெண் சோம்பேறியாய் வீட்டோடு இருப்பதை சமூகம் விரும்பவில்லை. தற்கால புத்திசாலி பெண்ணான உனக்கு இந்திய ஆக்ஸிலியரி நர்ஸிங் ஸர்வீஸில், மனதை ஆகர்ஷிக்கக் கூடியதும் சுவாரஸ்யமானதும் உபயோகமுள்ளதுமான வேலைகள் இருக்கின்றன. "கருணையின் தேவ தூதர்கள்" அடையாளமான வெண்மை நிற குல்லாயும் ஏப்ரனையும்விட எந்த உடுப்பும் அதிக கௌரவத்தை அனுபவிக்கவில்லை.

ஏ. என். எஸ்ஸில் பெறும் முதல்தரமான பயிற்சி யுத்தத்திற்குப் பிறகு உங்களுக்கு ஸிவில் நர்ஸிங்கில் வெற்றிகரமான வாழ்க்கையை அளிக்க சுலபமாக இருக்கும். உங்களுக்கு வேறு யோசனைகள் இருந்தால், நீங்கள் பயிற்சி அடைந்த வைத்திய அறிவு உங்கள் குடும்ப வாழ்க்கை அல்லது தேசத்தின் சமூக சேவைக்கு மதிப்பு சொல்லக்கூடாததாக இருக்கும். இந்த சந்தர்ப்பத்தை இழக்காதீர்கள்.

தற்சமயம் ஏ. என். எஸ். சம்பளங்கள் அதிகமாக உயர்த்தப்பட்டிருக்கிறது. உதாரணமாக பொது சேவையின் புது சம்பளங்கள். இலவச இடவசதி, சாப்பாடு, வேலையாட்களுடன் கூட மாதம் ரூ. 135 முதல் 175 வரை, அல்லது மாதம் ரூபாய் 203 முதல் 243 வரை. வேலைக்கு பிரிட்டிஷ் பிரஜை அல்லது இந்திய சமஸ்தான பிரஜையாயும் 17 முதல் 45 வயதுக்குள் இருக்கும் எந்த பெண்ணும் சேரலாம். முன் அனுபவம் தேவையில்லை. ஆனால் நர்ஸிங் அனுபவம் உள்ளவர்கள் வேலையில் உயர்ந்த ஸ்டேடில் சேரலாம். நர்ஸுகள் நன்கு பாதுகாக்கப்பட்டு வருகிறார்கள். சாதாரணமாக, அவர்களாகவே மேல் நாட்டுக்குப் போவதாகச் சொன்னாலொழிய, எல்லோருக்கும் இந்தியாவிலேயே வேலைகள் கொடுக்கப்படுகின்றன.

# ஏ.என்.எஸ்

**பெண்ணிற்கு மிகவும் கம்பீரமான வேலை**

பூரா விவரங்களுக்கு

—:::—

நீங்கள் வசிக்கும் பிரதேசத்தில் உள்ள செயிண்ட் ஜான் ஆம்புலன்ஸ் லேடி சூபரின்டெண்ட் அல்லது டைரக்டர் ஜெனரல் இந்திய மெடிகல் சர்வீஸ், நியூ டில்லிக்கு இன்றே எழுதுங்கள்.

AAA, 1197, A. TM.

திருவுள்ளம் கொண்டான் பரம்பொருள். இவ்விதம் குடம் விழுந்தவிடம் திருக்குடந்தையாகவும், நிற்குண நிராகார ஸச்சிதானந்த சிவம் லிங்காகாரமான கும்பேசுவரராகவும் அமர, கங்கை முதலிய மகா நதிகள் பாபிகள் தங்கள் தீர்த்தங்களில் ஸ்நானம் செய்து பாவத்தைத் தங்கள்மேல் சுமத்துவதால் அதை எவ்விதம் கழிப்பது என்று விசுவநாதரைக் கேட்டனவாம். அவர் மாசி மகத்தன்று அம்ருத ஸரஸுூம் ஈசுவரன் அருள் பெற்றதுமான மகாமகக் குளத்தில் அவர்களும் வந்தடைந்ததால் தாங்கள் பரிசுத்தமாவதோடு தேடி வரும் ஜீவ கோடிகளையும் புனிதமாக்கலாம் என்று விடையளித்தார். அவ்விதமே கங்கை முதல் காவிரியீருகவுள்ள மகா நதிகள் அனைத்தும் மாசி மகத்தன்று, அதுவும் முக்கியமாக மகாமகத்தன்று, மகாமகக் குளத்தில் இருக்கும் பதினறு கிணறுகளில் ஸாந்நித்தியம் செய்து அதற்கென்று அங்கே வந்து கூடும் மாந்தர்களையும் மற்றும் எவ்வளோ தேவதைகள் ரிஷிகள் முதலானவர்களையும் வினை தீர்ந்து நல்வழி அடையுமாறு அனுக்கிரகித்திருப்பதாகப் புராணக் கூற்று.

ஆஸ்திகர்கள் இதெல்லாம் பழங்கதை என்று அலக்ஷியம் கொள்ளமாட்டார்கள். க்ஷேத்திராடனம் தீர்த்தாடனம் இவைகளின் மகிமையைச் சாஸ்திரம் சொல்லுகிறது. நம்முன்னோர்கள் பரம்பரையாக இவ்வழியை அனுஸரித்துங் காட்டியிருக்கிருர்கள். அதில் புத்திக்கு முரணகவும் ஒன்றையும் காணவில்லை. மனிதர்களுக்குள்ளே ஏற்றத்தாழ்வு இருக்கிறது. ஒருவன் சூரனயிருக்கிருன், இன்னெருவன் அதிபுத்திமானயிருக்கிருன், இன்னெருவன் வெறும் விறகுவெட்டியாயிருக்கிருன்; ஆனல் இவர்களெல்லோரும் ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகளாயிருக்கலாம். அப்படியிருக்க ஸ்தலங்களில் மட்டும் ஏற்றத்தாழ்விராது என்று ஏன் நாம் எண்ண வேணும்? குழந்தையும் தெய்வமும் கொண்டாடுமிடத்திலே என்பது பழமொழி. ஆயிரக்கணக்கான வருஷங்களாய் கும்பகோணத்தில் தேவர்களும் தேவநதிகளும் மஹர்ஷிகளும் பெரியோர்களும் மகநீராடி வந்திருக்கிருர்கள் என்று நம் ஸமூஹம் தீர்மானமாய் நம்பி அந்த நம்பிக்கையாலேயே மன நிம்மதியையும் உயர்ந்த திருப்தியையும் அடைந்திருக்கிறது. இவ்விதம் சேர்த்துக் குவிக்கப்பட்ட ஒரு பெரிய நிதி இந்த அனுபவத்தில் இன்றைக்கும் நாளைக்கும் பங்கெடுக்க விரும்புவோர்க்குச் சொந்தமல்லவா? எந்தப் புற்றில் எந்தப் பாம்பு கிடக்குமோ, யார் கண்டார்? துர்வாஸ மஹர்ஷியைப் போன்ற மகான்களைப் பற்றிப் பேசுகையில் 'நிகூட நிஸ்ச்சயம் தர்மே' (அவருக்கு தர்மத்திலுள்ள மனப்போக்கை வெளித்தோற்றத்தால் பிறர் அறிவது சிரமம்) என்று புராணங்கள் சொல்லுகின்றன. லக்ஷக்கணக்காய் நேற்று நடந்த மகாமகத்திற்கு வந்தவர்களிலும் நாளை வரும் மகாமகத்திற்கு வருபவர்களிலும் இப்பேர்க்கொத்த மகான்கள் இருக்கமாட்டார்கள் என்று ஏன் அற்பபுத்தி படைத்தெண்ண வேணும்? இத்தகைய பெரியார் தீர்த்தங்களுக்கும் க்ஷேத்திரங்களுக்கும் ஏன் வரவேண்டும், அவர்கள்தான் முக்தர்களும் பரிசுத்தர்களுமாயிற்றே என்ற கேள்விக்கு 'தீர்த்தீகுர்வந்தி தீர்த்தானி. (தீர்த்தங்களையே பரிசுத்தம் செய்கிருர்கள்) என்று பதிலளிக்கிறது சாஸ்திரம்' இதைத்தான் மேல் விவரிக்கப்பட்ட மகாமத ஐதிகமும் சொல்லுகிறது. இதன் கருத்தென்ன? ஸத்ஸங்கத்தின் விசேஷமென்ன வென்ருல் ஒரு கூட்டத்தில் நல்லவன் ஒருவன் இருப்பானேயாகில் பலபேர் கெட்டவர்கள் இருந்தாலும் ஸத்தான அவன் குணம் அந்தக் கூட்டத்தைப் புனிதமாக்குகிறது என்று பெரியோர் சொல்லுவர். இது போன்ற புண்யகாலங்களில் சேரும் பெருங்கூட்டத்தில் ஆயிரக்கணக்காய் வந்திருக்கும் சாமாந்நியர்களிடையே 'ஷட்ரிவர்க்க' மெனப்பட்ட மதம் மாத்ஸரியம் முதலியவை அற்றுப்போவதில்லை என்ருலும், அவர்கள் தங்களுடைய தொல்லை

# மூளைக் குளிர்ச்சிக்கு

கும்பகோணம்

# டி. எஸ். ஆர்.

## அரைக்கீரை விதைத் தைலம்

## சந்தனாதித் தைலம்

உபயோகியுங்கள்.

*

கோடை காலத்திற்குத்தகுந்த

**நன்னாரி, ஆரஞ்சுரோஸ், குங்குமப்பூ**

முதலிய பலரக சர்பத் வகைகளும் கிடைக்கும்.

*

மதராஸ் ஏஜண்ட்ஸ் :—

புஷ்பவனம் ஸ்டோர்ஸ்,

திருவல்லிக்கேணி.

கோவை ஸ்டாக்கிஸ்ட் :—

பாலபட்டாபி,

வைஸ்யர் தெரு.

L. R. V.

களையும் சிற்றின்பங்களையும்ஆசைகளையும் மனக்கோட்டைகளையும் அந்தச் சமயத்துக்குக்கொஞ்சம்மறந்து,கடவுள்,ஆத்மா என்ற பெரிய தத்துவங்களை அரைகுறையாகவாவது எண்ணி மனதை தானம், நியமம், தேவதார்ச்சனம் முதலிய நல்ல காரியங்களில் செலுத்தி ஒருமைப்பட முயலும் தருணத்தில் பெரியவர்களுடைய சேர்க்கை பாமரர் உள்ளத்திலேயும் எதிர்பாராத கிளர்ச்சியைப் பண்ணலாம். ஆயிரக்கணக்கான ஜனங்கள் பதினாயிரக் கணக்காய் ரூபாயைச் செலவு செய்து வெயில் கொஞ்சங்கூட வீணாகாதபடித் தங்கள் தலையில் தாங்கி மூன்று நாள் 'கிரிக்கெட் மாட்ச்' பார்ப்பதில் ஒரு ஆனந்தம் அடைகிறார்கள் என்பதை யாரும் ஆக்ஷேபிக்கத் துணிவதில்லை. மகாமகத்திற்கு வரும் ஆஸ்திகர்கள்தான் வீணாய்க் காசைச் செலவழித்துத் துன்பத்தை விலைக்கு வாங்குகிறார்கள் என்று தீர்ப்புச் சொல்ல யாருக்கோ அதிகாரம்?

பணக்காரன் ஏழை, எஜமானன் வேலாள் என்ற வித்தியாஸங்களெல்லாம் மனிதனுடைய ஆண்மையையும் தன் மதிப்பையும் குறைக்கும் கொடியவிஷங்களென்றும் ஏழையாயிருந்தாலும் சரி பணக்காரனாயிருந்தாலும் சரி சமூகத்தில் ஒருவன் தன்னாலான வரையில் தன்னை ஏற்றிப் போஷித்து விகஸிப்பதற்கு யாதொரு தடையும் இருக்கக் கூடாதென்றெல்லாம் தற்காலத்து ராஜீயவாதங்களில் நாம் காண்கிறோம். அபரோக்ஷமான லாபம் கிட்டும் விஷயத்திலே இந்த உதாரநோக்கத்தைக் கொண்டார்கள் நம்முன்னோர்கள். மஹாபாரதத்தில் தீர்த்த வைபவத்தைச் சொல்லுகையில் புலஸ்திய மஹர்ஷி யுதிஷ்டிரருக்கு உபதேசிக்கிறார், "யக்ஞயாகாதிகள் ஏராள திரவியச்செலவாலும் மனுஷ்ய ஸஹாயத்தாலும் ஆகவேண்டிய காரியங்கள். ராஜாக்களுக்கும் பிரபுக்களுக்குமே அவை ஸாத்தியம். பரம ஏழைகளாலும் செய்யக் கூடியதும் யக்ஞயாகாதிகளை விட அதிகப் பலனளிப்பதுமான ஒரு உபாயம் உண்டு. அதுவே தீர்த்தாடனம்" என்று. ஆனால் இந்தக் கர்மா ஒழுங்காய் நடக்கவேணுமானால் இதற்குச் சில விதிகள் உண்டு. அவை செவ்வனே பின்பற்றப்படவேணும். புலஸ்தியர் சொல்லுகிறார், "எவனுடைய கை கால், மனது எல்லாம் அடக்கத்தோடு கூடியிருக்கின்றனவோ, எவனிடத்தில் வித்தை,கீர்த்தி, தபசு இவைகள் காணப்படுகின்றனவோ, எவன் கைநீட்டியாசிக்காமல் கிடைத்ததைக் கொண்டு சந்தோஷிக்கிறானோ, எவனிடம் அகங்காரம் அற்றுவிட்டதோ, எவன் அழுக்கற்று நிஸ்ஸங்கல்பனாகி மிதாஹாரம் உடையவனும் ஜிதேந்திரியனும் இருக்கிறானோ, எவன் கோபத்தை ஜெயித்து ஸத்தியத்தைக் கைப்பிடித்து திருடமான விரதம் பூண்டு ஸமஸ்தப்ராணிகளையும் தன்னைப்போல் பார்க்கிறானோ, இத்தகைய மனிதன் தீர்த்தாடன பலத்தை அடைகிறான்" என்று. இவ்வித அரிய குணங்களெல்லாம் ஒருவனிட மிருக்குமானால் அவனுக்குத் தீர்த்தம் க்ஷேத்திரம் என்பதெல்லாம் அவசியம் இல்லைத்தான். ஆனாலும் புராண வாயிலாகவும் சரித்திர வாயிலாகவும் பார்க்குமிடத்து இம்மேன்மை வாய்ந்தவர்களும் இந்தக் காரியங்களெல்லாம் செய்துதான் இருக்கிறார்கள். ஜீவகோடிகளிடம் அவர்களுக்கிருக்கும் காருண்யமே இதற்குக் காரணம். இப்பெரியார்களின் சரித்திரங்களையும் உபதேசங்களையும் ஓதியுணர்ந்து ஓரளவு அவர்களிடம் காணப்பட்ட குணங்களைப் பின்பற்ற அந்தரங்கமாய் முயலுவோர்க்கு க்ஷேத்திரவாஸமும் தீர்த்தஸேவையும் இந்தக் குணங்களை விருத்தி பண்ணிப் பெரிய பலனை அளிக்கும்.

இவ்விதம் ஆத்ம குணங்கள் விருத்தியாவது 'பர'த்துக்கு மட்டும் சுகத்தைத்தரும் என்று எண்ணவேண்டாம். 'இஹ'த்திலும் சௌக்கிய முண்டு. ஐரோப்பிய தேசங்களில் ஒருவன் கலாசாலைப் படிப்பை முடித்த பிறகு ஐவேஜியும் தகுந்த வஸதிகளு மிருக்கும்பக்ஷத்தில் பல தேசங்கள் சென்று அங்கு உள்ள நாகரிகங்களையும் ஜனங்களை

## தனிச் சிறப்பு மிக்க ஓர் இரஸாயன முறை :

# கல்ப லதா வடி

ஆயுர்வேத சேவாஸ்ரமம் என்று கான்பூரில் விளங்கும் வைத்திய சாலையின் ஒரு மதிப்புள்ள உரிமைபெற்ற ரஸாயனம் இந்த கல்பலதாவடி. ஆயுர்வேதாபிவிருத்தியும் பொதுஜன ஸேவையுமே இவ்வாஸ்ரமத்தின் நோக்கம். ஆகையால் பொதுஜனங்கள் தாங்களே தயாரித்து இந்த ரஸாயனத்தை உட்கொண்டு பூர்ண பலனை அடைய உதவுமாறு இதன் விவரங்களை இந்த ஆஸ்ரமத்தார் வெளியிடுகிறார்கள்.

முறை :—கடுக்காய் தோல், நெல்லி முள்ளி, தான்றிக்காய் தோல் வகைக்கு 4 தோலா ; சுக்கு, அரிசிதிப்பிலி, மிளகு வகைக்கு 10/3 தோலா ; சுத்தம்செய்த கோமூத்திர சிலாஜது 10 தோலா ; அப்ரக பஸ்பம், காந்தி சாரம், வங்கபஸ்பம் (தாளகத்தை உபயோகித்து பஸ்பமாக்கியது), குங்குமப்பூ வகைக்கு 6 மாஷம் (36 குண்டுமணி எடை); பிதரம் ஒரு தோலா ; அக்கிராகாரம் ஒரு தோலா ; சுத்தம்செய்து புது மஹீஷாக்ஷி குக்குலு 2 தோலா ; நேபாளக் கஸ்தூரி 9 குன்றி எடை ; இவைகளை நன்கு சூர்ணம்செய்து சந்தனத்தைலம், சிதல் சீனித்தைலம், பிரோஜா தைலம், மஞ்சள் தைலம் இவை வகைக்கு 40 துளிகள்கூட்டி அறைத்துக் கொள்ளவும். பிறகு 20 மணி நேரம் பிரம்மி சாற்றையும் தண்ணீர்விட்டான் கிழங்கின் சாற்றையும் விட்டு அறைக்கவும். பிறகு 2 குன்றி எடைவீதம் மாத்திரைகளாக உருட்டி ஸ்வர்ண வங்க பஸ்மத்தை மேலே பூசிவிடவும். தினம் 2 வேளை பாலுடன் சாப்பிடவும். எந்தப் பருவத்திலும் உபயோகிக்கலாம்.

நீரிழிவு, நரம்புத் தளர்ச்சி, வீர்யக்குறைவு, நாட்பட்ட வெள்ளை - வெட்டை, ஞாபகக் குறைவு, ஜீர்ணக் குறைவு, இன்னும் இவ்விதமான பலவித பலஹீனங்கள் உள்ளவர்கள் இம்மருந்தை தயாரித்துக் குறைந்தது 40 நாட்களுக்கு உபயோகிக்குமாறு கேட்டுக் கொள்ளுகிறோம். இந்த ஆயுர்வேத ரஸாயனத்தின் அற்புத மஹிமையை நீங்களே பரீக்ஷித்தறியுங்கள். இதைச் செய்வதற்கு வேண்டிய சகல உதவிகளையும் எங்களிடம் பெறலாம். அப்பவும் இதைச் செய்வதற்கு நேரம் முதலிய வசதிகள் அற்றவர்களுக்கு நாங்களே இதை நிகர விலைக்கு அனுப்பித் தருகிறோம்.

| | | | |
|---|---|---|---|
| 40 நாட்களுக்கு வேண்டிய | 80 | மாத்திரைகள் | ரூ. 6—8—0 |
| 20 ” | 40 | ” | ரூ. 3—8—0 |

ஆயுர்வேத வழியில் வேண்டிய சகலவித உதவிகளுக்கும் எங்களுக்கு எழுதுங்கள். தயவுசெய்து ஆங்கிலத்தில் எழுத முயலுங்கள்.

விலாசம் :—**ஆயுர்வேத ஸேவாஸ்ரமம், 34, கான்பூர்**

மனப்போக்கையும் அவர்கள் அரசாங்கம் தொழில்முறை முதலிய துறைகளில் செய்திருக்கும் ஏற்பாடுகளையும் நன்றாகப் பார்த்துத் தெளிந்து ஊர் திரும்புவதென்ற ஒரு வழக்கம் இருந்து வருகிறது. இவ்விதம் செய்வதால் விசால நோக்கமும் பகுத்தறிவும் வளர்கின்றன என்பது அவர்கள் அனுபவ பூர்வமாகக் கொண்ட கொள்கை. இந்தப் பழக்கம் நம் நாட்டிலும் வித்தியார்த்திகள் தொன்றுதொட்ட காலமாக அனுஷ்டித்து வந்தது நமது பழைய படிப்புக் குன்றிவரும் இன்னாளிலே தான் அரிதாகிவிட்டது. "சரைவேதி, சரைவேதி" என்ற சுருதி வாக்கியம் இந்தப் பழக்கத்தின் மேன்மையையே உபதேசிக்கிறது. இவ்விதம் பல விடங்களுக்குச் சென்று பலபேர்களுடன் பழகி அவர்களுடைய ஆசார விவகாரங்களை வெறுப்பில்லாமலும் அன்போடும் ஆராய்ந்து பழக்கவழக்கங்களில் பதினாயிரம் வேற்றுமைகள் இருந்தபோதிலும் ஹிந்து ஸமூகம் நாகரிகத்திலும் தர்மத்திலும் சிரத்தையிலும் ஒருமனப்பட்டதென்பதையும் அம்மனப்பான்மை இதர மதஸ்தர்களுக்கோ ஸமூகங்களுக்கோ விரோதப்பட்டதல்ல வென்பதையும் அதை ஒழுங்காக வளர்த்தால் அதுவே உலகத்தில் அர்த்தமற்ற சண்டைகளும் சச்சரவுகளும் ஒழிந்து மானிட ஜாதியே ஒருமைப்பட்டு ஒழுங்குபடுவதற்கு முக்கிய ஸாதனமாகும் என்பதையும் சற்றும் சந்தேகமின்றித் தெளிய விவேகிக்கு க்ஷேத்திராடனமும் தீர்த்தாடனமும் பேருபகாரமாயிருக்கும்.

இந்த நோக்கத்துடன் மகாமகத்திற்குச் செல்லுபவர்கள் சண்டையால் ஏற்பட்ட பலவிதத் தொல்லைகளையும் பொருட்படுத்த மாட்டார்கள். அதிகாரிகள் 'வராதே' எனலாம். உற்றார் உறவினர் தொத்து வியாதிக்குப் பயந்து 'போகாதே' எனலாம். உள்ளூரார் சாமான் பங்கீட்டு அவஸ்தைகளில் மாட்டிக்கொண்டு தவிப்பதால் இந்தத் தவிப்புத் தங்கள் தர்மசிந்தனையோடு போராட வெளியூரிலிருக்கும் நண்பர்களையும் பந்துக்களையும் அழைப்பதா வேண்டாமா என்றுகூடத் தடுமாறலாம். ஆனால் வெகுநாளைய அனுபவத்தால் ஒன்று சொல்லுவேன். கும்பகோணத்தில் பிறந்த ஒட்டுக்குழந்தைக்கு முதல் மகாமகம் என்றால் தங்கள் வீட்டில் ஏற்படும் நல்லநாள் பெரியநாளில் எவ்வளவு சந்தோஷமும் குதூகலமும் உண்டோ அவ்வளவு குதூகலம் ஏற்படும். முன்பின் தெரியாதவர்களையும் ஒருசாண் இடத்தில் ஒண்டுக்குடியிருக்கும் ஏழைகள்கூட வெகுநாளைச் சிநேகிதனைக் கண்டாப்போல் சந்தோஷமாய் வரவேற்றுக் கஞ்சியோ கூழோ போட்டுக் குளத்திற் கழைத்துப்போய் ஸ்நானம் செய்வித்து வேண்டிய உபசாரங்களையெல்லாம் செய்வதென்பது ஸ்தல தர்மமாகிவிட்டது. இந்த நெருக்கடிக் காலத்திலும் அந்த மனப்பான்மை முற்றிலும் மாறியிருக்காதென்றே நம்புகிறேன். புத்திக்கூர்மையிலும் சாதுரியத்திலும் கல்வியிலும் காரியத்திலும் தஞ்சாவூர் ஜில்லா வாஸிகள் சிறந்தவர்கள் என்பது உலகப் பிரசித்தம். அந்தத் தஞ்சாவூருக்குத் திலகம்போல் விளங்குவது கும்பகோணம். அதன் கீர்த்தி இன்றை நேற்று ஏற்பட்டதல்ல. ஸ்தல விசேஷம் மூர்த்தி விசேஷம் இவைகளுக்கேற்றாப்போல் கைத்தொழில் முதல் பிரம்ம வித்தை வரையில் ஸமஸ்த வித்தைகளும் இந்த நகரத்தில் வெகுகாலமாக வளர்க்கப்பட்டு வருகின்றன. ஸங்கீதத்திற்கு இது இருப்பிடம். பக்தி ஞானம் யோகம் என்ற மூன்று துறைகளிலும் புது ஸம்பிரதாயங்கள் இந்த ஊரிலும் சுற்றுப்புறங்களிலும் வஸித்த மகான்களால் பிரவர்த்திக்கப்பட்டு நாடெங்கும் பரவி ஓங்கியிருக்கின்றன. வேதாந்திகளான மூன்று (அத்வைதம், விசிஷ்டாத்வைதம், த்வைதம்) மதஸ்தர்களுக்கும் ஆசார்ய ஸ்தானம் வகிக்கும் பெரியார்கள் இந்த ஊரில் மடம் கொண்டிருக்கிறார்கள். சைவ வைஷ்ணவச் சண்டைகள் முதலிய ஆபாஸங்கள் இங்கே காணப்படா. காலாக்னிருத்திரனாய் உலக




அதுதான் இந்திய ஆகாயப்படையின் பிராணம். இந்திய அதிசயத்தக்க உற்சாகம் தான் ஐ. ஏ. எப்பின் மேன்மைக்குக் காரணம் உலகின் எல்லைகள் மாறுதல் அடைந்து வரும் இந்த சரித்திரசம்பந்தமான காலில் ஆகாயத்தில் பலம் பெற்ற அதிகாரம் வகிப்பது தான் ஜெயிப்பவனுக்கும் ஜெயிக்கப்படுவனுக்கு முள்ள வித்தியாசத்தை ஏற்படுத்துகிறது. நேச நாட்டுகளுடன் ஐ. ஏ. எப். ஜப்பானியர்களுக்கு, சமது துணிச்சலான உற்சாகமும், பயிற்சியின் மேன்மையும் சமக்கு ஆகாயபலத்தை அளிக்கிறது என்பதை காண்பிக்கின்றனர்.

## உங்களுடைய பிற்கால வாழ்க்கையைப் பற்றி நினைப்பதற்கு இதுவே சமயம்!

- இந்திய ஆகாயப் படையில் அடையும் பயிற்சியும் அனுபவமும் அனேகருக்கு லாபகரமான சிவில் வாழ்க்கை நடத்த தேவையான யோக்யதாம்சங்களை கொடுக்கிறது என்பதற்கு சந்தேகமேயில்லை.
- யுத்தம் நடக்கும் வரை தங்கள் ஆதிக்கத்திலுள்ள அநேக வேலைகளை காலியாக வைத்திருப்பதாக சர்க்கார் வாக்களித்திருக்கின்றனர் இந்த வேலைகள் பிற்பாடு யுத்தசேவை செய்தவர்களைக் கொண்டு பூர்த்தி செய்யப்படும்.
- யுத்த சேவையிலிருந்தவர்களில் தேர்ந்தெடுத்தவர்களுக்கு குறிப்பிட்ட வியாபாரம் அல்லது தொழிலில் சர்க்கார் செலவில் பிரத்யேக பயிற்சி அளிப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் தயாராகி வருகிறது.
- தற்சமயம் பல்கலைக்கழகத்திலிருக்கும் மாணவர்களுக்கு யுத்த சேவையால், யுத்தத்திற்குப் பிறகு மதிப்பு உள்ள சலுகைகளை அடைவார்கள். அதன் மூலம் அவர்கள் மேற்கொண்டும் படிக்கலாம். சரியான விவரங்களை பல்கலைக்கழக அதிகாரிகளிடமிருந்து பெறலாம்.

இந்த கூப்பனை கத்தரித்து அதை உங்களுக்கு சமீபத்திலுள்ள G. D. (பைலட்டுகள்) ரெக்ரூட்டிங் ஆபீசருக்கு அனுப்புங்கள். அவர் உங்களுக்கு விண்ணப்ப பாரமும் இந்திய ஆகாயப் படையில் பைலட் சேவைக்கான விவரங்களையும் நிபந்தனைகளையும் அனுப்புவார்.

பெயர் ____________________

விலாசம் ____________________

### ஐ. ஏ. எப்க்குத் தேவையானது

நல்ல திடசரீரமும், நல்ல பார்வை, காது கேட்குதல். 17½ முதல் 28 வயதுக்குள் இருக்கும் மனிதர்கள். அவர்கள் சுறுசுறுப்புள்ள யுத்த சேவையில் பறப்பதினால் ஏற்படும் பிரயாசத்தை தாங்கக் கூடியவர்களாய் இருக்கவேண்டும். நல்ல பொது அறிவுள்ள படிப்பும் ஆங்கிலம் நன்றாய் பேசவும் எழுதவும் தெரிந்திருக்க வேண்டும்.

உங்களது கூப்பனை
சமீபத்திலுள்ள G. D. R. Oக்கு அனுப்புங்கள்

AAA—1529—TM

**ஐ. ஏ. எப். ஜி. டி. (பைலட்ஸ்) ரிக்ருடிங் ஆபீஸர்**
**புதுப்பேட் லைன்ஸ், மவுண்ட் ரோடு, மதராஸுக்கும்**
**ஐ. ஏ. எப். ஜி. டி. (பைலட்ஸ்) ரிக்ருடிங் ஆபீஸர்**
**கப்பான் ரோடு, பெங்களூருக்கும்**

ஸம்ஹாரம் செய்யும் பரமேசுவரன் ஸ்ருஷ்டிப் பிரவர்த்தகராகக் கும்பேசுவரராய் இங்கே மூர்த்திகரித்திருப்பதையும் உலகத்தைக் காப்பவரான திருமால் சக்கிரபாணியாக இங்கே சுடலே கந்தத்தையே தனக்குகந்த வாஸனேயாகக்கொண்டு களிப்பதையும், மகத்தன்றும் மற்ற விசேஷத்தினங்களன்றும் அர்ச்சாவதாரமாயமர்ந்துள்ள சிவனும் விஷ்ணுவும் சேர்ந்து (18 மூர்த்திகள்) இங்கே தீர்த்தங்கொடுப்பதையும் கண்டு தலைமுறை தலைமுறையாகக் களித்தவர்களிடையே இந்தச் சில்லரை புத்தி ஏன் எழப்போகிறது? இந்த ஊரில் ஜைனர்களும் கிருஸ்தவர்களும் மஹம்மதியர்களும் ஒரு சிறுபான்மையோரேயாயினும் ஹிந்துக்களோடு ஒத்து வாழ்வது ஒரு தனிச் சிறப்பு. "கண்டதே காக்ஷி கொண்டதே கோலம்" என்று மேலெழுந்த விதமாய்ப் பார்க்காமல் தத்துவங்களை உன்னிப் பார்க்கும் பாங்குடையவர்கள் கும்பகோண ஸ்தல புராணத்தில் சொல்லிய அம்ருதக் குடம், ஸ்ருஷ்டி பீஜம், ஸ்ரீமங்களாம்பிகை 'மந்த்ரபீடேசுவரி'யாக வீற்றிருத்தல் இவைகளின் மர்மத்தை ஒருவாறு ஊகிக்கலாம். அந்த திவ்ய க்ஷேத்திரத்தில் அம்ருதம் ஆறாய் ஓடினதாகப் புராணம் சொல்லுகிறது. ஆனால் அமரத்துவம் உலகத்தில் இன்னும் ஸித்திக்கவில்லை என்று சொல்லத் தேவையில்லை. இங்கேயே அதை அடையலாம் என்று வேதம் ஸந்தேகத்திற் கிடமில்லாமல் பல விடங்களில் சொல்லுகிறது. இந்த மகத்தான முயற்சியில் ஈடுபட்ட தீரர்கள் நம் நாட்டில் எப்பொழுதும் இருந்திருக்கிறார்கள். கும்பகோணத்திலேயே அப்பேர்க்கொத்த மகான்கள் பாடுபட்டிருக்கிறார்கள். அம்முயற்சி பயனடையவென்றே கும்பகோணம் ஸ்ருஷ்டி செய்யப்பட்டது போல் தோன்றுகிறது சரித்திரத்தை நோக்குங்கால். இவ்வளவு புண்யம் படைத்ததும் பெருமை வாய்ந்ததும் மேலான நோக்கத்தில் ஈடுபட்டதுமான திவ்ய க்ஷேத்திரத்தை மிதித்து அதன் தீர்த்தங்களில் மகாமக புண்ணிய தினத்தன்று நீராடி உய்யும் ஆன்மாக்களுக்கு ஈசன் அருள் சுரக்கும்.



L. R. V.

# க்ளூகோனேட் - D.

## கால்ஸியம் க்ளூகோனேட் மாத்திரைகள் -

## விடமின் D சேர்ந்தது

*

**உட்கொள்ளக் கூடிய சாக்லட் வடிவில்**

கர்ப்ப காலத்தில் கால்ஸியம் குறைவு, பலஹீனம், குழந்தைகளுக்கு எலும்பு ஏற்படுவது போன்ற எல்லா சந்தர்ப்பங்களுக்கும் சிபார்சு செய்யப்படுவது

*

**I. T. L. தயாரிப்பு**

---

## கவர்ன்மெண்ட் இண்டஸ்டிரியல் & டெஸ்டிங் லாபரடரி

மல்லேச்வரம் P. O. :: பெங்களூர்

சென்னை ராஜதானிக்கு ஏஜண்டுகள் :—

மெஸர்ஸ் : **பெஸ்ட் & கம்பெனி லிமிடெட்.**

தபாற் பெட்டி நே. 63, — மதராஸ்.




# நெல்லும் கரும்பும்

[சூடாமணி]

ஒரு நாள் கரும்பு நெல்லிடம் வந்து, "நெல்லே, நெல்லே, நீயும் நானும் தோழிகளாக இருக்கலாமே. நாம் ஒரே குலத்தார், ஒரே கோத்திரத்தார், ஒரே சாதியார். இப்படிப்பட்டவர்கள் ரொம்ப நெருங்கி நட்பாக இருக்கவேண்டாமோ?" என்று சொல்லிற்று. அதற்கு நெல்லு, "ஒரே குலமானல் என்ன ? ஒரே கோத்திரமானல் என்ன ? ஒரே ஜாதியானல் என்ன ? இவைகளை மட்டும் பார்த்துக் கொண்டு, இரண்டு பேர் தோழிகளாகப் பழகிவிட முடியுமா ? உன் குணம் அறிந்துகொண்டல்லவா நான் உன் தோழியாக இருக்க முடியும்" என்றது.

அதைக் கேட்ட கரும்பு,

"நெல்லம்மா, குணத்திலேயும் நாம் ஒருவருக்கொருவர் ஒன்றுபோலத்தானே இருக்கிறோம். நீயும் நிலத்திலே பயிராகிறாய், நானும் அப்படியே. உன்னை மனிதர்கள் பயிரிடுகிறார்கள், என்னையுந் தான். நீயும் அரிவாளால் அறுவடையாகிச் சாய்கிறாய், நானும் அப்படியே. உன்னையும் மனிதர்கள் சாப்பிடுகிறார்கள், என்னையுந் தான். இப்படி எல்லாம் இருக்க, நீயும் நானும் தோழிகளாக இருக்க என்ன தடை என்கிறேன்" என்று விஸ்தாரமாக தன் குணத்தை நெல்லின் குணத்தோடு ஒப்பிட்டுப் பேசினது.

அதைக் கேட்ட நெல்,

"நம் இருவருக்கும் வெளிப்படையாகக் காணப்படுகிற குண ஒற்றுமைகளை எல்லாம் அழகாக எடுத்து அடுக்கிவிட்டாய். ஆனாலும் உன் நெஞ்சத்து அழகும் என் நெஞ்சத்து அழகும் வேறு".

அதற்குக் கரும்பு,

"அப்படி என்ன வித்தியாசத்தைக் கண்டுவிட்டாய், அம்மா" என்றது.

உடனே நெல்,

"கரும்பே! உன் எண்ணம் எல்லாம் வேறே, என் எண்ணம் எல்லாம் வேறே. எத்தால் வாழலாம் ? மனம் ஒத்தால் வாழலாம். மீன் கூடையைக் கட்டிக் குலாவினல் உடம்பெல்லாம் மீன் நாற்றந் தான் அடிக்கும். உன் சினேகிதன் பேரைச் சொல்லு ; அப்போது நான் குணத்தைச் சொல்லுகிறேன் என்பதைக் கேட்டதில்லையா ?" என்றது.

இதை எல்லாம் கேட்ட கோதுமை,

"ஆனாலும் என்ன, அம்மா, இது! ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் இப்படியும் வாக்குவாதம் பண்ணிக்கொண்டிருக்கலாமோ ?" என்றது.

"அப்படிக் கேள், கோதுமை அக்கா" என்றது கரும்பு.

"இந்தச் சண்டை எல்லாம் எதற்காக?" என்றது சோளம்.

"சோளம் அக்கா, நீயும் நானும் ஒரு குலமாச்சே. தோழிகளாக இருக்கலாம் என்று அழைச்சால், இத்தனை பேச்சுப் பேசுகிறாளே, இந்த நெல்லுச் சீமாட்டி" என்றது கரும்பு.

"நெல்லு அம்மா, கரும்போடே சிநேகமாக இருக்க உனக்கென்னம்மா தடை" என்று சொல்லியது கோதுமை.

"மனம் ஒப்பாதபடிக்கு உனக்கென்ன ரண்டு கொம்பு முளைச்சுடுத்தா? அவளுக்கு ரண்டு கொம்பு குறைந்துவிட்டதா?"

"நீங்கள் ரண்டு பேரும் குறுக்கே விழுந்து பிறத்தியார் காரியத்திலே புகுந்தேளே! இப்போ, உங்களை வைத்துக்கொண்டே, இந்தக் காரியத்தை முடிவு செய்துகொண்டு விடுகிறேன்.

"நான் விதையிலிருந்து முளைக்கிறவள். நீயோ பழைய கரும்பின் தூண்டிலிருந்து முளைக்கிறவள். என்னைப் பயிரிட நிலத்தைப் பண்ணிடும் முறை வேறே. உன்னைப் பயிரிடும் முறை வேறே. இரண்டு பேரும் நிலத்திலே தான் பயிராகிறோம். ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் தான். ஆனாலும், நீயோ பயிராகும் நிலத்திலுள்ள சாரம் முழுவதையும் உறிஞ்சி எடுத்துவிடுவாய். நானோ, இன்னும் உலகத்துப் பசியைத் தீர்க்க உதவவேணும் என்று நிலத்தின் சாரத்தை முற்றிலும் எடுக்கமாட்டேன். நான் பசி தீர்க்கும் தொழில் செய்கிறேன். நீயோ ருசியாக்கி மனிதர் வாழ்வைக் கெடுக்கும் வேலையில் இருக்கிறாய். நீ, மன்மதன் கையிலே இருக்கிற வில். நானோ சூர்யதேவன் கையிலிருக்கிற சாமரம். நீ வேதனை செய்கிறவள். நானோ ஆறுதல் செய்கிறவள். உன்னைக் காய்ச்சிச் சர்க்கரையாகச் செய்வதோடு மனிதர்கள் திருப்தி அடைகிறார்களா? அதற்கப்புறம், தங்கள் மதியைக் கெடுக்கும் பானங்களாகவும் உன்னைச் செய்துவிடுகிறார்கள். உன்னையும் என்னோடு சேர்த்து இனிப்பாக்கி மட்டுமிதமில்லாமல் சாப்பிட்டு, உடம்பையும் கெடுத்துக் கொள்ளுகிறார்கள். ரொம்பப் பேசிவிட்டேன். நம்ப ரண்டு பேர் குணமும் ரொம்ப வித்தியாசம் என்கிறதைக் காட்டுதற்குத் தான் இவ்வளவும் சொன்னேன். இப்படி இருக்க நாம் எப்படி தோழிகளாக முடியும்?"

"நெல்லே! சபாஷ்! மெச்சினேன்! உண்மைதான்! பயனையும் நலனையும் பார்த்தே குணத்தை நிதானிக்க வேணும். உனக்கும் அவளுக்கும் குணப் பொருத்தமே இல்லை."

"அடி நெல்லே! என்னை யார் என்று அறியாமல் பேசிவிட்டாய். நல்ல நாட்களிலே, பண்டிகை நாட்களிலே, விருந்து நாட்களிலே, கலியாண நாட்களிலே, திருநாட்களிலே, சந்தோஷ நாட்களிலே, உன் மதிப்பைக் கெடுக்கிறேன். எல்லோரும் என்னையே கொண்டாடச் செய்கிறேன். நானே சிறப்பு அடைகிறேன்."

நான் அந்த நாட்களில் தாழ்ந்தாலும், அந்தத் தாழ்வே எனக்கு உயர்வு. நீ உயர்ந்தாலும், உனக்கு அது தாழ்வு தான், போ" என்று சொல்லி நெல் சும்மா இருந்துவிட்டது. கரும்போ வெகு சீக்கிரம் சர்க்கரையாக உருவெடுத்து, உலகமெங்கும் நெல்லுக்கு விரோதமாகப் பிரசாரம் பண்ணிக்கொண்டே இருந்தது.

கதையும் முடிந்தது. கத்திரிக்காயும் காய்த்தது.



# நவசக்தி ஆண்டு மலர்

நவசக்தியின் ஆண்டு மலர் நம்முடைய நாட்டு நவசக்தி மலர்களாகிய சுதந்திரம் சமத்துவம் சகோதரத்துவமே யாகும். இவை மூன்றும் ஒரே தத்துவத்தின் திரிமூர்த்திகளே.

இம்மலரில் கவிதை, கட்டுரை, கதை என்னும் மூவகைக் கலைகளும் சோபிக்கின்றன. கவிதையில் வீரசுதந்திர ரசம் ததும்புகின்றது. சுவாமி சுத்தானந்த பாரதியாரின் "சங்கு முழங்கிடுவோம்" என்ற கவியும், திரு. கே. சுப்பிரமண்யத்தின் "பாரத நாடும்" "தமிழர் திருநாளும்" "தேச பக்தர் திருக்கூட்டமும்" "புது வருஷ வாழ்த்தும்", கா. மு. ஷெரிப்பின் "பொங்கல் பெருநாளும்" தமிழ் மணம் நிரம்பிய கவிகள்.

ந. பிச்சமூர்த்தியின் "அந்திப் பறவை" புதுமையான கற்பனை உலகத்தில் சஞ்சரிக்கின்றது. "தென்றலின் தீர்ப்பு" என்னும் விஜயரங்கன் பாடலும் புதுமை மணத்துடன் விளங்குகின்றது.

சு. குருசாமியின் "பாரியின் பறி" ஔவை பிராட்டியின் சரிதத்தை நாடக முறையாக நன்கு வர்ணிக்கின்றது.

இந்தப் பொங்கல் மலரில் கட்டுரைகளும் நன்றாக அமைந்திருக்கின்றன. "பெண்களும் கல்வியும்" என்ற கட்டுரையில் திரு. வி. க. போலி நாவல்களையும் சினிமாக்களையும் இகழ்கின்றார். ஆசிரியர் சக்திதாசன் எழுதிய "விடுதலை இயக்கியம்" மிகவும் ரஸமாக இருக்கின்றது. ராவ்சாஹெப் எஸ். வையாபுரிப் பிள்ளை புத்தருடைய உபதேசங்களை மலர் மாலையாகக் கோர்த்திருக்கின்றார். தேச சுதந்திர வழியை டாக்டர் பி. சுப்பராயன் ஒரு கட்டுரையிற் காட்டுகின்றார். "எல்லோரும் ஓர் குலம்" "புது வாழ்வு" "சோற்றுக் கவலை" என்ற கட்டுரைகளில் புதுக் கருத்துகள் விளங்குகின்றன. "கவிதையும் பிற கலைகளும்" என்ற கட்டுரையில் ரா. ஸ்ரீ. தேசிகனும், "வர்ணமும் கவி உள்ளமும்" என்ற கட்டுரையில் ஆர். கே. பார்த்தசாரதியும் கவிதையின் இதயத்தை நன்கு சுட்டிக் காட்டுகின்றார்கள். "மண் சுமந்த கதை" என்ற கட்டுரையில் கலைமரத்தின் மலரான கவிதையின் மணம் வீசுகின்றது. கே. எஸ். ஜம்புநாதன் வாழையின் சிறப்பை அறிவிக்கின்றார். "வருங்கால வாழ்வு" என்ற கட்டுரையில் இந்தியாவில் வருங்கால பொருளாதார முறையை அ. முத்தையா நன்கு வர்ணிக்கின்றார்.

இம்மலரிலுள்ள கதைகள் புது வாழ்க்கையை உணர்ச்சி ததும்பச் சித்தரிக்கின்றன. "நியாய வெறியும் கலியாணச் சங்கடமும்" புதுமையையும் புது நாகரிகக் கேடுகளையும் உணர்த்துகின்றன. "சொல்லும் செயலும்" "ஒட்டும் உறவும்" என்ற கதைகளில் பழமையையும் பழைய நாகரிகக் கேடுகளையும் உணர்த்துகின்றன. "ஏழையின் திருட்டு" என்ற கதையில் சங்கராராம் புதுமையையும் பழமையையும் கலந்து வர்ணிக்கின்றார். சரசுவதி பாசு எழுதியிருக்கும் "ஐப்பசிப் பெருக்கில்" சோகரசம் பெருகுகின்றது.

—கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரி